திருமறை விளக்கம்

எசேக்கியேல்

S. ஜேம்ஸ் பால்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

திருமறை விளக்கம்

எசேக்கியேல்

*

உண்மை விடுதலை செய்யும்

ΙΧΘΥΣ

திருப்பணி விடையாளர் இறையியனூல் வரிசை

Published for
The C. S. I. Theological Series
by the Bishop Gell Bible Examination Committee
Diocese of Tirunelveli
Editor: Rev. S. Daniel Abraham, B. D., S. T. M.
(Convener, B. G. B. Examination Committee)

First Printed 1969

PRINTED AT THE TIRUNELVELI DIOCESAN PRESS, PALAYAMKOTTAI.

பதிப்புரை

திருமறை தீர்க்கதரிசன ஆகமங்களில் எசேக்கியேல் மிகவும் கருகலானதாகும். தீர்க்கதரிசி எசேக்கியேலின் வாழ்க்கை, அவர்கண்ட காட்சிகள், அவர் பயன்படுத்தும் உருவகங்கள் யாவும் சாதாரண மக்களால் புரிந்து கொள்ளக்கூடாத அளவுக்கு தனித்தன்மை வாய்ந்தவை. மொழி நடையும் கருகலானது. ஆனால் அவர் கால மக்களுக்கு அவை புரியக்கூடியவையாகவே இருந்திருக்க வேண்டும். ஆகவே அதனைப் படிக்குங்கால் படிப்பவர் தன்னை எசேக்கியேலின் சூழ்நிலைக்குட்படுத்தினாலன்றி பயனடையார்.

இவ்விளக்கவுரை ஆக்கியோன் இதனை மனதிற் கொண்டு, வாசகரை தீர்க்கதரிசியின் சூழ்நிலைக்கு இழுத்துச் சென்று அவரது போதனைகளை புரிந்து கொள்ளத்தக்க முறையில் இந்நூலை எழுதியுள்ளார். மிகக் கடினமான இப்பணியை மிகப் பாரமான தன் சபைப் பணியினூடே நிறைவேற்றினமைக்கு அவர்களுக்கு எம் நன்றி.

திருமறையூர்,
நவம்பர் 11, 1969.

சா. தானியேல் ஆபிரகாம்,
பதிப்பாசிரியர்.

நூன்முகம்

நம் காலமாகிய இருபதாம் நூற்றூண்டின் பிற்பகுதி பெரும் பரபரப்பான காலமாகும். யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறி, நாட்டைச் சொந்தமாக்கிக் கொண்டதும், அந்நாடு வெகு விரைவாக முன்னேறி வருவதும், "அத்தி மரத்தில் இளங்கிளை தோன்றித் துளிர்விடுவது" போல, யுக முடிவுக்கு நாட்கள் சமீபம் என்பதைக் காட்டுவதாக எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்துவிட்டது. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலின் காட்சி நிறைவேறுவதாகவே தென்படுகிறது இக்காலம். ஆகவே காலங்களை ஆராயமட்டுமல்ல, சரித்திரத்தின் போதனைகளைக் கற்று, கண்விழிப்புடன் காத்திருக்கவும், நன்னம்பிக்கையுடன் நவஎருசலேமுக்காக நாடி, உலகோடு ஒட்டி உலகைச் சிநேகித்து உலகில் ஊறி வாழ்வதை விட்டுவிடவும் இந்நூல் துணைபுரியுமாயின், இதை ஆக்கிய பயன் பெறுவோம்.

இந்நூலினை எழுத வாய்ப்பளித்த பதிப்பாசிரியரவர்களுக்கு எம் நன்றி. எழுதத் துணைபுரிந்த நமது ஆண்டவர் நாமம் என்றென்றும் வாழ்க!

தூத்துக்குடி,
15—9—1969.

சா. ஜேம்ஸ் பால்

பொருளடக்கம்

		பக்கம்
பதிப்புரை	...	iii
நான்முகம்	...	iv

1. முன்னுரை

1. திருமறையும் தீர்க்கதரிசிகளும்	...	1—5
2. தீர்க்கன் எசேக்கியேல்	...	5
அ) அழைப்பும், ஊழியமும்	...	5—7
ஆ) சிறப்பியல்	...	7—10
இ) காலம்	...	10—12
ஈ) நோக்கம்	...	12—13
உ) ஆட்சேபணைகள்	...	13—14

2. விளக்கவுரை

I. திருத்தோற்றமும் தீர்க்கனின் அழைப்பு ஆயத்தமும் அதி. 1—3	...	15—26
அ) திருத்தோற்றம் 1 : 1—28	...	16—20
ஆ) அழைப்பும் அதிகாரம் அளித்தலும் 2 : 1—3 : 3	...	20—23
இ) ஊழியனின் உத்தரவாதம் 3 : 4—3 : 27	...	23—26

II. தேசம் கைவிடப்படக் காரணங்கள்
அதி. 4—24 ... 26—64

அ) நடித்துக்காட்டிய நான்கு
திருவுரைகள் 4 : 1—5 : 17 ... 27—33

ஆ) பாவ இஸ்ரவேல் பர்வதங்கள்
பாழாகும் 6 ... 33—34

இ) அழிவு அதிக சமீபம் 7 ... 34—35

ஈ) இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனையும்,
தேவ மகிமை தூரமாதலும் 8—11 ... 35—42

1. விக்கிரக வணக்கம் 8 ... 35—38

2. பாவிகளைத் தப்பிவிடாத
தண்டனை 9 ... 38—39

3. எருசலேம் எரிக்கப்பட்டது 10 ... 39—40

4. எருசலேமில் எதிர்த்து நிற்பவர்
களுக்கு அழிவு 11 : 1—13 ... 41—42

5. வாக்குத்தத்தங்கள் 11 : 14—25 42—43

உ) சிறையிருப்பு சீக்கிரமே வரும் 12—14 43—48

1. நாட்டை விட்டோடுவது நடித்துக்
காட்டப்பட்டது 12 : 1—20 ... 43—44

2. தீர்க்கதரிசனத்தைப்பற்றிய
தவறான கொள்கைகளின் அறிவீனம்
12 : 21—14 : 11 ... 44—46

3. நியாயத்தீர்ப்பிற்கு நியாயமான
காரணம் 14 : 12—23 ... 47—48

ஊ) எருசலேமின் இருதயம் 15—24 ... 48—63

1. எருசலேம் கனியற்ற
திராட்சச்செடி 15 ... 48—49

2. எருசலேம் நன்றியற்ற,
விசுவாசமற்ற மனைவி 16 ... 49—53

3. துரோகமிழைத்த அரசன் 17 ... 53—54

4. தனி மனிதனின் பொறுப்பும்
பிரதிபலனும் 18 ... 55—56

5. பிரபுக்கள் மீது பிரலாபம் 19 ... 57

6. துரோக இஸ்ரவேலின்
தோற்றுவாய் 20 ... 57—58

7. உருவின பட்டயப் பாடல் 21 ... 58—60

8. எருசலேமின் பாவங்கள்
எண்ணப்படுகின்றன 22 ... 60—61

9. சோரம்போன சோதரிகள் 23 ... 61—62

(பக்கம் 61-ல் அதி. 33ஐ 23 ஆகத் திருத்துக)

10. முற்றுகைக்கு முந்தின
கடைசிக் காட்சிகள் 24 ... 63

III. அண்டை நாடுகளின் அழிவு அறிவிக்கப்பட்டது
அதி. 25—32 ... 64—78

அ) அம்மோன் 25 : 1—7 ... 65

ஆ) மோவாப் 25 : 8—11 ... 66

இ) ஏதோம் 25 : 12—14 ... 66

ஈ) பெலிஸ்தர் 25 : 15—17 ... 67

உ) தீரு 26 : 1—28 : 19 ... 67—72

ஊ) சீதோன் 28 : 20—26 ... 72

எ) எகிப்து 29—32 ... 73—78

IV. இஸ்ரவேல் புதுப்பிக்கப்படுதல்
அதி. 33—39 ... 79—93

அ) தீர்க்கன், மக்கள், இவர்களின் தனித்தாள் பொறுப்பு 33 ... 79—82

ஆ) உண்மையற்ற ஊழியர், நல்ல மேய்ப்பன் 34 ... 82—83

இ) சேயீர் மலையின் சீரழிவு 35 ... 83—84

ஈ) புதுப்பித்தலும் புத்துயிர் பெறுதலும் 36 ... 84—87

உ) உயிர் பெற்ற உலர்ந்த எலும்புகள் 37 ... 87—90

ஊ) கோகுவின் படையெடுப்பும், தேவனின் இறுதி வெற்றியும் 38, 39 ... 90—93

V. தேவனுடைய ஆட்சியில் தேசம் சீர்பெறுதல்
அதி. 40—48 ... 93-104

அ) தேவாலயத்தின் சிறப்பு 40—42 ... 95—97

ஆ) தேவாலயத்தின் திருமகிமை 43 ... 97—98

இ) தேவாலயத்தின் திருப்பணிவிடையாளரும், திருப்பணிகளும் 44—46 ... 98—101

ஈ) தேவ நதியும் தேச எல்லைகளும் 47...101—102

உ) தேசத்தின் பிரிவுகளும், பெயரும் 48 ...102—104

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம்

முன்னுரை

1. திருமறையும் தீர்க்கதரிசிகளும்

திருமறைத் தீர்க்கர் மேம்பட்டிருந்த காலமும், தீர்க்க தரிசனங்களில் பெரும்பாலானவை எழுதப்பட்ட காலமும், கி. மு. 800 — கி. மு. 450 வரை எனலாம். தூய பக்தி நெறியை வலியுறுத்தி, நீதியுள்ள நடத்தையைக் காட்டி, சமுதாயப் பொறுப்பை உணர்த்தி, பாவத்தின் பயங்கரத்தையும், தேவ நீதியையும், பரிசுத்தத்தையும், இரக்கத்தையும், இஸ்ரவேலர் மத்தியில் தீர்க்கர் திருவாக்காக அருளிய காலம், உலகெங்கும் மார்க்க மறுமலர்ச்சி புலர்ந்த காலம். இந்தியாவில் சித்தார்த்தன் புத்த நெறி புகன்றதும், சீனத்தில் கன்ஃப்யூஷியஸ் பழமையான மார்க்கத்திற்குப் புத்துணர்ச்சியூட்டியதும், ஸராதுஸ்திரர் இரானில் சீர்திருத்தம் வகுத்ததும் இஸ்ரவேல் தீர்க்கரின் பெருவாழ்வு காலமேயாம். சிறையிருப்பின் பின்னுள் தீர்க்கர் காலம், கிரேக்க நாட்டில் மூட பக்தி குறையவும், சிந்தனையும், தத்துவமும் சிறப்புற்ற காலமாம். எனினும், வல்லரசுகளின் வலிய கரங்களுக்கிடையே வாழ்ந்த இஸ்ரவேல் எனும் சிறு பூச்சியின் வழியே, தமது செய்தியைத் தந்து, அதை வருங் காலத்திற்கும் வகுத்த வல்ல தேவ செயலை வியந்து வாழ்த்துகிறோம்.

தீர்க்கதரிசிகள் ஒழுங்கு பற்றிய வித்து மோசேயினுல் போடப்பட்டது (உபா. 13 : 1, 18 : 18, 20). நிரந்தரமாக இவ்வூழியம் நடைபெறச் செய்தவன் சாமுவேல் தீர்க்கன். ஆனுல் இலக்கிய தீர்க்கரின் காலம் கி. மு. 8-ம் நூற்ருண்டில்தான் துளிர்க்கிறது. இஸ்ரவேல் தீர்க்கர் ஏனைய மார்க்க சீர்திருத்தவாதிகளிலும் பெரிதும் மேம்பட்டிருக்கின்றனர். பக்தி நெறி பகர்வதிலும், அரசர் பிரபுக்களின் அகந்தையை அடக்குவதிலும், தீயெனப் பரவும் தீயொழுக்கங்களைத் தடுப்பதிலும், அரசுகளை அமைதிப்பதிலும், சன்மார்க்க சமுதாய

சீர்திருத்தப் பணியிலும், தேவனை அறிந்து அறிவிப்பதிலும் இவர்களுக்கு நிகர் யாருமில்லையெனலாம். தீர்க்கதரிசி வருங் காலத்தை உரைப்பவனாக மட்டுமின்றி, நிகழ் காலத்தில் நடைபெறுஞ் சம்பவங்களில் தேவ அருளுரை என்னவென்பதை வரையறுத்துக் காட்டுவோனாயுமிருக்கின்றான். ஆகவே, தீர்க்கன் தேவனுடைய தூதுவனாக அவன் தலைமுறைக்கு விளங்குவதுமின்றி, நீதியின் பேச்சாளனாகவும், மன்னிப்பின் சுவிசேஷகனாகவும், சீர்திருத்தவாதியாகவும் விளங்குகின்றான்.

வேதாகமத்தில் தீர்க்கதரிசிகளை அழைக்கும் பெயர்கள், அவர்கள் குணாதிசயத்தைக் குறித்துணர்த்துகிறது. தேவனுடைய மனுஷர் என்றழைத்தனர் (1 சாமு. 9:6; 1 இராஜா, 17 : 24). தேவனுடன் இவர்கள் நெருங்கி ஜீவித்ததால், மற்றவர் பார்க்கக்கூடாதவற்றைப் பார்த்தனர். கனவுகளை விளக்கினர். வருங் காலத்தையும் அறிவித்தனர். இவர்களை கர்த்தரின் ஊழியக்காரர், தூதுவர் என்றும் அழைத்தனர். கர்த்தர் அவர்களுக்கு இடும் கட்டளைகளைச் செய்தனர். கர்த்தரின் வார்த்தைகளைப் பெற்று, மக்களுக்கு எச்சரிப்பும், நம்பிக்கையும் நவின்றனர். ஆவியைப் பெற்ற மனிதர் என்றும் வழங்கப்பட்டனர். தீர்க்கன் வல்லமை பெறும் வாயில் இன்னதென இப்பெயர் கூறுகிறது. தீர்க்கதரிசனம் உரைக்க, தேவனோடு தொடர்பும், காலத்தைக் கணிக்கக் கண் விழிப்பும், மக்களோடு நெருங்கின சம்பந்தமும் தேவையாயின. தனிப்பட்ட மாபெருந் தீர்க்கரும், தீர்க்கதரிசிகளின் புத்திரர் எனுங் குழுக்களும், சுயேச்சைத் தீர்க்கரும் இஸ்ரவேலில் இருந்தனர்.

ஆபிரகாம் முதல் ஆரம்பிக்கப்பட்ட சாட்சிகளின் வரிசையில், திருவாக்குக்குத் திருச் சாட்சிகளாய் நிற்கின்றனர் தீர்க்கதரிசிகள். முற்பிதாக்களுக்குத் தேவன் வெளிப்படுத்தின, முக்கியமாய் மோசேயின் மூலம் அருளப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் கட்டினர். எனவேதான் தீர்க்கதரிசனங்களில் ஒருமையையும், இணைந்து நிற்கும் இயல்பையுங் காண்கிறோம். கடந்த காலத்தில் கர்த்

தரின் கிரியைகளை அவர் கண்டனர். நிகழ் கால நிகழ்ச்சி களில் எச்சரிப்பு விடுத்தனர். வருங்கால நம்பிக்கையில் திளைத்தனர்.

தீர்க்கர் யாவருமே தெளிவான தேவ அழைப்பைப் பெற்ற மனிதராவர். இதனால்தான் பயமின்றிப் பேசவும், நிந்தைகளைத் தாங்கவும், இரத்த சாட்சிகளாய் இறக்கவும் துணிந்து நின்றனர்.

தீர்க்கரின் போதனைகளில் தேவனின் சுபாவத்தைத் தெளிவாய் அறிய இயலுகிறது. ஏனெனில் ஜீவனுள்ள தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தினால் மலர்ந்த மலரே தீர்க்கதரிசனம். தேவன் உடன்படிக்கையினால் இஸ்ரவே லின் தேவன் என்பதும், அவரை யன்றி வேறே தேவர்க ளில்லை யென்பதும் தீர்க்கரின் திட்டமான செய்தியாகும். இவ்வுடன்படிக்கையால் ஏற்பட்ட உன்னத சம்பந்தத்தை, தகப்பன் மகன், புருஷன் மனைவி, தோட்டக்காரன் தோட்டம் போன்ற மனித உறவுகள் மூலம் விளக்கி, தேவனிடம் விசு வாசமுள்ள வாழ்க்கையை வற்புறுத்தினர். இஸ்ரவேலரை தேவன் அழைத்தது, சிறப்புடன் சிலாக்கியங்கள் பெற மட்டு மல்ல, பொறுப்புடன் பூமியில் சாட்சிகளாக விளங்கவென்று ஆணித்தரமாகக் கூறினர்.

தீர்க்கர் பாவத்தைப் பற்றியும், மனந்திரும்புதலையும் கூறியது மேம்பட்ட செய்தி. மனிதனைப் பற்றிய, பாவத் தைப் பற்றிய அவர்கள் உரை, தேவனைப் பற்றிய விசுவாசக் கொள்கையினின்று பிறந்ததே. காலங்கள் தோறும் அவர்கள் கண்டித்த பாவங்களில் முக்கியமானவை : (1) தேவாரா தனைகளில் காணப்படும் பாவங்கள் — உண்மையற்ற வணக் கம், பலி, உயிரற்ற பக்தி. (2) மனிதனின் பெருமை — தேவனை நம்பாமல், தன் புய பலத்தையும், வல்லரசுகளையும் நம்பி, தகுதியற்ற தகாத சேர்க்கை, மீறுதல்கள். (3) வன் முறையும், எளியோரை ஒடுக்குதலும் — சுக ஜீவிகளின் பேராசை, ஏழைகளை மனிதராக மதியாத முரட்டுத்தனம்,

வன்முறையால் வளங்தேடுதல். (4) டாம்பீகம், மிதமிஞ்சிய வழிகள் — கடமைகளைக் கருதாது, மற்றவர் தேவையை மதியாது, தனக்கென்றே வாழும் தன்மை. (5) உண்மை யின்மை, ஏமாற்றல், அசுத்த வாழ்க்கை. ஜனத்தின் சன் மார்க்க, தேசீய சீர்குலைவை, கறைபட்ட வாழ்க்கையைத் தீர்க்கர் கருத்துடனும், கண்ணீருடனும் கண்டித்துணர்த் தினும், மனிதனின் மனப் படைப்பும், கலைஞனின் கைத் திறனுமான விக்கிரகங்களை வணங்கி தேவ மக்கள் விழுந்து போவதையே பெரும் பாரத்துடன் எச்சரித்தனர். பல முறை பாவதண்டனைக்கு உள்ளாகி, மற்றவர்களிடம் விற்கப்பட்டுச் சிறைப்பட்ட போதிலும், சிறையிலும் இஸ்ரவேல் மார்க் கத்தை விடாதிருந்ததும், புது நம்பிக்கையுடன் திரும்பி வந்து, தேவனுடைய தூய நாமத்தை மற்ற மார்க்கங்களுக்கு மேலு யர்த்தியதும், தீர்க்கரின் இடையறாத உழைப்பினால்தான் என்றால் அது மிகையாகாது.

இஸ்ரவேல் தீர்க்கர் வழி வந்த மற்றொரு மேம்பாடான உண்மை, வருங் கால வாக்குகளும், மேசியாவின் வருகையும், இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் ஊழியம், பாடுகள், அவரது ஆளுகையையும் முன்னறிவித்ததே. நமதாண்டவரும் தம்மைக் குறித்து அவர்கள் சொல்லியவை என்று கூறியுள்ளார் (லூக்கா 24 : 28; யோவான் 5 : 39).

இஸ்ரவேலின் தீர்க்கர், அவர்களுடைய தேசீயகவிஞர்கள், தேசீய சரித்திரத்தை உருவாக்கியவர்களும் எழுதியவர்களும் அவர்களே. அரசியல் வாழ்க்கையின் அடிப்படையை மார்க் கத்தில் ஊன்றி, தேவ கற்பனைகளை விளக்கினவர்கள் தீர்க்க தரிசிகளே. மக்களின் காவலாளிகளாகவும், தேவனுடைய திருத் தொண்டர்களாகவும் செம்பணியாற்றினவர்கள் அவர் களே. மனிதருக்கு தேவனுடைய வருங் கால திட்டத்தை வரைந்தளித்த பெருமை அவர்களுடையதே.

திருமறையில் தீர்க்கதரிசனம் மூன்றில் ஒரு பாகமாகும். நான்கு மாபெருந் தீர்க்கதரிசனங்களும், பன்னிரண்டு சிறு தீர்க்கதரிசன புத்தகங்களுமுண்டு. இதில் எசேக்கியேல் மாபெருந் தீர்க்கரில் மூன்ருவதாக வருகிருன்.

2. தீர்க்கதரிசி எசேக்கியேல்

அ. அழைப்பும், ஊழியமும்.

சிறையிருப்பில் சிறுமைப்பட்டிருந்த இஸ்ரவேலருக்கு உண்மை ஊழியனுய் விளங்கிய எசேக்கியேல், ஆசாரிய வம் சத்தைச் சார்ந்தவன். தகப்பன் பெயர் பூசி (1 : 1—3) கி. மு. சுமார் 622-ல் பிறந்த எசேக்கியேல், தனது வாலிப. வயதில், சுமார் 25 வயது வரை, எருசலேமில் இருந்தான். அச்சமயம் சிறையிருப்புக்கு முன் எருசலேமிலிருந்த மாபெரும் தீர்க்கரில் கடைசியான எரேமியா, தன் ஜனத்துக்காகக் கரி கருத்த மேனியுடனும், கண்ணீருடனும் கர்த்தரின் வார்த்தை களைக் கூறினுன். மாமன்னன் நேபுகாத்நேச்சார் எருசலே முக்கு விரோதமாய் வந்து, யூதா அரசன் யோயாக்கீனையும், யூத மேன்மக்கள் 10,000 பேரையும், கி. மு. 597-ல் முதன் முறையாகச் சிறை பிடித்துச் சென்ருன்(2 ராஜா. 24:11—16). இதில் எசேக்கியேலும் ஒருவன். எசேக்கியேல் தன் இள மையில், உபாகமச் சீர்திருத்தம் ஊக்கமாக நடைபெறக் கண் டிருக்க வேண்டும் (2 ராஜா. 22 : 23). எரேமியா பாபிலோ னிய சிறையிருப்புக்குப் போங்கள் என்றுரைத்ததால், தேசீய வாதிகளால் பாடுபட்டதையும் அவன் கண்டிருக்கலாம். ஒரு வேளை எசேக்கியேல் எரேமியாவின் சீடனுக இருந்திருக்கலாம் ஏனெனில் எரேமியாவின் போதனைகளில் பல எசேக்கியேலி லும் இடம் பெறுகின்றன. எபிரேயர் பாரம்பரியத்தின்படி இரு தீர்க்கரும் தங்களது எழுத்துக்களைப் பரிமாறிக்கொண் டனர். ஆதலால்தான் குணுதிசயங்களில் பெரிதும் வேறு பட்ட இவ்விரு தீர்க்கரின் எழுத்துக்களில், முக்கியமாக எருச லேமின் தண்டனை, அழிவு, பற்றி ஒற்றுமை காணப்படு கிறது என்கின்றனர்.

எசேக்கியேல் தன் ஜனத்துடன் கேபார் நதியண்டை சிறையிருப்பிலிருக்கையில், தானியேல் பாபிலோனில் இளைஞனாக, ஞானவானாக விளங்கியிருந்தான். தானியேலைக் குறித்து எசே. 14 : 14; 28 : 3 குறிப்பிடுகிறது. எசேக்கியேலுக்குச் சொந்தமான வீடு இருந்தது (எசே. 8 : 1). குடும்பமும் இருந்தது. அவன் மனைவி சிறையிருப்பில் 10-ம் ஆண்டு மரித்தாள் (24 : 18). சிறையிருப்பில் ஊழியரற்று, ஆறுதலற்று ஐந்து ஆண்டுகளாக அமர்ந்திருந்தனர் இஸ்ரவேலர். ஐந்தாம் ஆண்டு அவர்களுக்கு அருளுரை வழங்க அழைக்கப்பட்டான் எசேக்கியேல் (1 : 2).

தேவன் எசேக்கியேலுக்குத் தமது மகிமையின் தரிசனத்தைக் காட்டி (1 : 1—3 : 13 : 8—11), தம் கரத்தை அவன் மீது வைத்து, அவனோடு பேசி, அதிகாரமளித்து ஊழியத்திற்கனுப்பினார். "கர்த்தருடைய கரம் என் மேல் அமர்ந்தது" என ஏழு முறை (1 : 3, 3 : 14, 22, 8 : 1, 33 : 22, 37 : 1, 40 : 1) வருகிற சந்தர்ப்பங்கள், ஊழியத்திற்கு உபயோகிக்கக் கர்த்தர் எசேக்கியேலைச் சந்தித்த சந்தர்ப்பங்கள் எனலாம். "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி" (24 : 15) எனச் சுமார் 49 முறை வருகிறது. தேவன் திட்டமாகத் தமது செய்தியைக் கூறுகிறார் என்பது தெளிவாகிறது. எரேமியாவுக்குக் கர்த்தர் அவன் உதட்டைத் தொட்டுத் தம் வார்த்தைகளை அவனில் வைத்தார் (எரே. 1 : 9). எசேக்கியேலுக்கோ சுருளைப் புசிக்கக் கொடுத்து (எசே. 2 : 1—4) தம் வார்த்தைகளை அருளினார்.

சிறையிருப்பின் ஐந்தாம் ஆண்டு ஊழியம் ஆரம்பித்த எசேக்கியேல் (1 : 2), கடைசியாகக் குறிப்பிடும் ஆண்டு, சிறையில் 27-ம் ஆண்டு (29 : 17). இவ்வாறு சுமார் 22 ஆண்டுகள் பணிபுரிந்தான். விக்கிரக வணக்கத்தானாகிய ஓர் யூதப் பிரபு உணர்த்தப்பட்டதால், எசேக்கியேலைக் கொலை செய்தான் என்று எபிரேயப் பாரம்பரியம் கூறுகிறது. அப்பாரம்பரியத்தின்படி, யூபிரதிஸ் நதிக் கரையில் கிஃபில் எனும்

இடத்தில் எசேக்கியேல் அடக்கம்பண்ணப்பட்டான். யோயாக்கீம் அவனுக்குக் கல்லறை கட்டினுன். இது இப்போது பாக்தாத் பட்டணத்திலிருந்து, சிலநாள் பயண தூரத்திலிருக்கிறது. இக்கல்லறை யூதராலும், இஸ்லாமியராலும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. கி.ஃபில் எனும் அரமேய பதம் எசேக்கியேல் எனும் பொருள்படும். எசேக்கியேல் என்ருல், தேவனுடைய பலம் அல்லது தேவனே என் பலம் என்று அர்த்தம்.

ஆ. சிறப்பியல்.

மாபெருந் தீர்க்கர் நால்வரில் எசேக்கியேல் மூன்ருவது. ஏசாயாவும், எரேமியாவும் யூதேயா நாட்டிலிருந்தவாறே, யூதா அழிவுக்கு விரைகையில், தீர்க்கதரிசனம் உரைத்தனர். எசேக்கியேலோ சிறையிருப்பிலிருந்தவர்களுக்கு, மனச் சோர்வுடனிருந்த மக்களுக்குப் பணி புரிந்தான். எருசலேமின் நரகலான பாவங்களைக் கூறவும், அழிவு நிச்சயமாகவும், சடுதியாகவும் இருக்குமென்று உரைக்கவும் மட்டுமல்ல, எருசலேம் எருக்களமாக்கப்பட்ட பின், சிறையிருப்புக்குப் பின்னுள்ள புது வாழ்வைக் கூறவும் கிருபை பெற்ருன். இஸ்ரவேலர் அரசாக அமைந்திருந்தபோது, தீர்க்கர் உரை கேட்டுத் திருந்திஞரில்லை. அவர்கள் மேல் அழிவு வந்தது. ஒரு நாடாக இராதபடி, இடி பட்டு, நாடு கடத்தப்பட்டனர். ஆனல் சிறையிலே அவர்களும் அவர்கள் மார்க்கமும் செத்தொழியவில்லை. அவர்கள் தேவ சபையாக உயிர்த்தெழுந்து புத்துயிர் பெறச் செய்ததில் எசேக்கியேலின் பங்கு அதிகம். மறுபடியும் பிறந்த மக்களின் மார்க்க சாசனம் இத்தீர்க்கதரிசனம். இப்பணி நமதாண்டவர் வருகைக்கு ஏற்ற தொரு ஆயத்தமாக அமைந்தது.

இப்புத்தகத்திலுள்ள யாவுமே, எசேக்கியேல் நேரடியாகக் கண்டு, கேட்டு அறிவித்தது என்பது மற்ருெரு மாண்பு. இத்தரிசன புத்தகம் வெகு ஒழுங்குடன் அமைக்கப் பெற்றுள்ளது. 48 அதிகாரங்கள் கொண்ட இந்நூல் இரு பெரும் சம

பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முந்திய பாதி, எருசலேமின் அழிவின் பயங்கரத்தையும், அது நியாயம் என்பதையும் சிறைக்குச் சென்றவரிடம் கூறியதாகும். பிந்திய பாதி சிறையிருப்பின் பின்னர் சீரிய முறையில் நாடு சிறந்திலங்க தேவன் செய்வதையும், மக்கள் மனம் மாறிச் செய்ய வேண்டியதையுங் கூறுகிறது. இப்பகுதி மூன்று பாகமாகப் பகுக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் சிறையிருப்பினின்று திரும்பிய பின், சமாதானத்துடன் வாழ வேண்டின், சுற்றுப் புறமெங்கும் சமாதானம் நிலவ வேண்டும். ஆகவே பின் பகுதியில் முதல் எட்டு அதிகாரங்களில், இஸ்ரவேலைச் சுற்றியுள்ள நாடுகளின் மேல் தீர்ப்பு கூறப்படுகிறது. பின்னர் புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலைப் பற்றி எட்டு அதிகாரங்களும், கடைசியில் தேவனுடைய ஆட்சியில் தேசம் சீர்பெறுவதை எட்டு அதிகாரங்களும் கூறுகின்றன.

எசேக்கியேலின் கற்பனைத் திறனும், காட்சி காணும் மனக் கண்களும், அவற்றை வர்ணிக்கும் வண்ணமும் சிறந்து நிற்கின்றன. திருக் காட்சிகளை அடுக்கடுக்காய் எழுதியிருப்பது, மேலோட்ட வாசிப்புக்காரருக்கு விளங்கக் கடினமாதலால், எசேக்கியேலை முனைந்து பலர் படிப்பதில்லை. ஆயினும் அவற்றின் உட்கருத்துப் புலப்பட ஊன்றி வாசிப்போருக்கு அதன் உன்னத போதனைகள் விளங்கும். விவேகமுள்ளோர் மட்டுமே, எசேக்கியேலின் திரு ரதத் தோற்றத்தையும், ஆதியாகம சிருஷ்டி வரலாற்றையும் விளங்கிக்கொள்ள இயலுமென்பர் யூத ரபீக்கள். ஆகையால்தான் அவர்கள் எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்தை "பொக்கிஷங்கள்" எனும் புத்தகத்தொகுப்பிலடக்கி, முப்பது வயதிற்கு முன் இதை வாசிக்கலாகாதென்றுங்கூறினர். எசேக்கியேல் தன் தரிசனங்களை எழுதியதின் வேறொரு சிறப்பு, தேவ ரூபம் அல்லது காட்சி என்று சாதிக்காமல், "சாயலாயிருந்தது" என்று தான் கண்டவாறே எழுதுவதுதான்.

எசேக்கியேலைப் பற்றியோ, அவன் தீர்க்கதரிசனங்களோ சுவிசேஷங்களிலும், நிருபங்களிலும் இடம்பெறவில்லை. ஆனால் வெளிப்படுத்தலைப் பாருங்கள். எசேக்கியேலும் யோவானும் கைகோர்த்தவர்களாக, திருக் காட்சிகளைக் கூறிப் புது வானமும் புதுப் பூமியும் புலர்வதைப் புகல்கின்றனர். இருவருடைய சிங்காசனத்தின் மேல் சிறந்திலங்கும் மனுஷகுமாரனுடைய மகிமை மறக்க முடியாதது (எசே. 1 : 26; வெளி. 4 : 2, 3). எசேக்கியேலில் வரும் கோகு, மாகோகுவின் கடைசி யுத்தமும் (38, 39), வெளிப்படுத்தலில் வரும் ஆர்மகெதான் யுத்தமும் (வெளி. 16, 17), பரிசுத்தரின் இறுதி வெற்றியும் ஆராயற்பாலன.

தனிப்பட்ட மனிதனின் பொறுப்புப் பற்றி மிகவேகமாக, திட்டமாக எடுத்துரைத்து, எபிரேய சிந்தனையைக் கலக்கியவன் எசேக்கியேல் (18 : 4, 12 : 16, 14 : 21—23). இதனால் பொதுமக்களின் பொறுப்பு, நம்பிக்கை, மீட்பை இவன் மறக்கவில்லை. பாரம்பரிய போதகத்தின் போக்கைப் பல வழிகளில் மாற்றி, சீர்திருத்தி, தனி மனிதனின் தன்மை பொது வாழ்வைப் பாதிப்பதைக் கூறி, புத்துயிர் பொது மக்களில் காணப்பட, தனி மனிதன் புனர் வாழ்வு பெற வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறான். இவ்வாறாகப் பிற்கால யூத மார்க்கம் ஏற்படவும், அஃது உலகெங்கும் சிறந்திலங்கவும் வித்திட்ட, யூத மார்க்க சாசனம் வரைந்த பெருமை எசேக்கியேலைச் சாரும்.

இப்புது யுகத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பொலிவுடன் விளங்குகின்றன. "யெகோவா ஷம்மா" தேவன் அங்கே, மையமாக வாசஞ் செய்யும், பரிசுத்த தேவாலயம் மையமாக அமையும், புது நாட்டை உருவாக்குகிறான். இஸ்ரவேலர் நாடு திரும்புவதும், பொல்லாப்பறக் கழுவப்படுவதும், உலர்ந்த எலும்புகளான அவர்கள் உயிர் பெற்றுப் பெருங் கூட்டமாவதும், தேவனுடைய செயல் என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறான் (20 : 42ff). இஸ்ரவேலர் மனஸ்தாபப்

படுவதால் இது நேரிடுவதில்லை. ஆனுல் அவர்கள், இவ்வள வாய்த் தங்கள் மேல் அன்பு வைத்த ஆண்டவரை அறிந்து, அதனுல் தங்கள் பழைய பாதக வழிகளை அருவருத்து, பரி சுத்த ஜாதியாவார்கள். இவ்வாறு எசேக்கியேல் மன்னிப்பு, சுத்திகரிப்புத் தீர்க்கனுகவும் விளங்குகின்ருன். பின்னுளைய யூத மார்க்கத்தின் அஸ்திபாரமான எண்ணங்கள் : (1) புற ஜாதியாரிடமிருந்து முற்றும் பிரிக்கப்பட்ட பரிசுத்த ஜனம். (2) தீட்டைப் பற்றிய பெரும் பயம். (3) நியாயப் பிரமாண உற்சாகம், எசேக்கியேலால் ஏற்பட்டவை எனத் துணிந்து கூறலாம். தேவனுடைய இரக்கம். மனிதனுடைய இதய மாற்றம், கீழ்ப்படிதலாகிய பலி மனிதன் செய்ய வேண் டும் எனும் எசேக்கியேலின் சீரிய கருத்துக்கள் சுவிசேஷத் திற்கு வழிகோலியவை எனலாம்.

எசேக்கியேலின் உவமைப் போதனைகள் அற்புதமாயுள் ளன. ஓசியா வரைகோடாக இஸ்ரவேலின் துரோகத்தை சோரம்போன பெண்ணுக்கொப்பாக வரைந்தான். எசேக் கியேல் 16-ம் அதிகாரத்தில் அதை ஒரு சிறந்த அறிவுரைச் சித்திரமாக ஆழமாகப் பதியும்படி வரைந்துவிட்டான்.

எசேக்கியேல் சிறைப்பட்டவர்களில் சிறைப்பட்டவனுக, தேவனுடைய தாசனுக, அடியவர்க்கு அடியானுக, ஆண்ட வரின் அடையாளமாக, மக்களின் மெய் மேய்ப்பனுக, மெய்க் காவலாளனுக, புது யுகத்திற்குப் பரிசுத்த ஜனத்தைப் படைப் பவனுக, சிறந்த ஆசாரியனுகவும், தீர்க்கனுகவும் விளங்கு கின்ருன். ஒரு தனி மனிதனிலே, தீர்க்கன், ஆசாரியன், போதகன், நடிகன், காட்சிக்காரன், ஏன், தேவனுக்காகப் பயித்தியக்காரனுகவும் விளங்கும் மாபெரும் புத்துயிர் தீர்க்கன் எசேக்கியேல்.

3. காலம்

இஸ்ரவேலின் வட ராஜ்ஜியம் கி.மு. 721-ல் சிறைப் பட்டுப்போயிற்று. கி. மு. 606, 597 இவ்வாண்டு களில், நெபுகாத்நேச்சார் யூதேயாவுக்கு விரோதமாய் வந்து மேன்மக்கள் 10,000 பேரை அரசனேடு சிறை பிடித்துச்

சென்ருன். இதில் தானியேலும், எசேக்கியேலும் அடங்குவர் (II நாளா. 36 : 67; II ராஜா. 24 : 14—16; தானி 1:1—3). யூதா புத்திரர் சில ஆண்டுகள் எதிர்த்து நின்றனர். கி. மு. 586-ல் எருசலேம் பிடிபட்டு, இடிபட்டு, சுட்டெரிக்கப்பட்டது. இத்தீர்க்கதரிசன சம்பந்தமாகக் கீழ்க்காணும் முக்கிய சம்ப வங்களின் காலம் கவனத்தில் வைப்பது நன்று.

கி. மு.	620	யோசியாவின் (உபாகம) சீர்திருத்தம்
,,	626	எரேமியாவின் அழைப்பு, ஊழியம்
,,	608	மெகிதோவில் எகிப்துக்கு எதிராகச் சென்ற யோசியாவின் மரணம்
,,	606	முதல் சிறையிருப்பு
,,	605	கார்கெமிஷில் பாபிலோனியரின் பெரும்வெற்றி
,,	597	எருசலேம் முற்றுகை, 10,000 சிறைபிடிப்பு
,,	588—586	எருசலேம் முற்றுகை, அழிவு
,,	587	எசேக்கியேல் மனைவியின் மரணம் (எசே. 24 : 1, 18)
,,	572	எசேக்கியேலின் கடைசித் தீர்க்கதரிசனம்
,,	537	செருபாபேலுடன் யூதேயா திரும்புதல்
,,	516	ஆலயம் எருசலேமில் கட்டி முடித்தல்.

ஆசியாவில் வல்லரசாயிருந்த அசீரியா, கி. மு. 607-ல் பாபிலோனுக்கு முன் பணிந்தது. எசேக்கியேலுக்குப் பின்னர் முப்பது ஆண்டுகள் வரை பாபிலோன் பேரரசாய் இருந்து, யூதாவை ஒடுக்கியது. அசீரியா விழுந்த சமயம் சில காலம் எகிப்தின் கை ஓங்கிற்று. ஆகையால்தான் யூதேயா பேதை யான புரு போல வல்லரசுகள் பக்கம் ஒதுங்கியும், ஓடியும் இருந்தது. இச்சமயம் யோசியாவின் உபாகமச் சீர்திருத்தம் கி. மு. 621-ல் மும்முரமாக மக்களை மெய் வணக்கத்திற்குத் திருப்பிற்று. ஆகிலும் கி. மு. 608-ல் எகிப்தியரால் மெகி தோவில் அவன் யுத்தத்தில் மரணமடைய, சீர்திருத்தம் சீர் குலைந்துவிட்டது. யோசியாவின் குமாரன் யோவகாஸ் எகிப் தின் உதவியை நாடினன். எகிப்து கி. மு. 605-ல் கார்கெமி சில் பாபிலோனுல் நொறுக்கப்பட்டது. யோசியாவின் அடுத்த

குமாரன் யோயாக்கீம் பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ண, முதலாம் சிறையிருப்பு கி. மு. 597-ல் நடந்தது. தேசியவாதிகளான யூதர், தீர்க்கன் எரேமியா போன்றோருக்குச் செவி கொடுக்காமல், கலகம் பண்ண, எருசலேம் கி. மு. 586-ல் பிடிபட்டு அழிக்கப்பட்டது. ஆலயம் இடிபட்டது. யாவும் கொள்ளையிடப்பட்டது (2 ராஜா. 25).

எசேக்கியேல் முதலாவதாக தீர்க்கதரிசனமுரைக்கத் தொடங்கினது கி. மு. 592-ல் (எசே. 1 : 2) சிறையிருப்பின் 5-ம் ஆண்டு. இவ்வூழியம் சிறையிருப்பின் 25-ம் ஆண்டு வரை நீடித்தது (எசே. 40 : 1). கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு, அதிகாரம் 27 : 17-ல், சிறையிருப்பின் 27-ம் ஆண்டு என்பதால், தீர்க்கன் சுமார் 22 ஆண்டுகள் பணிபுரிந்தான்.

4. நோக்கம்

எருசலேம் ஒருபோதும் அழியாத நகரம். சிறைப்பட்டவர் சீக்கிரமே திரும்பிவிடுவர் என்று யூதர் எண்ணினுர்கள். வெறிகொண்ட தேசியவாதிகள், வேறு நாடுகளுடன் சேர்ந்து பாபிலோனின் பிடியினின்று விடுபட விழைந்தனர். அவர்களது நம்பிக்கை வீண், தேவத் துரோகத்திற்குத் தண்டனை தப்பாது வரும், எருசலேம் அழிக்கப்படும் என்று வலியுறுத்துவதே எசேக்கியேலின் நோக்கம். இதில் அவன் எரேமியாவுடன் ஒரே கருத்துடையவனுயிருந்தான். பாபிலோனுக்குக் கீழ்ப்பட்டிருக்கவும், அவர்களோடு செய்த உடன்படிக்கையை மீருமலிருக்கவும் இருவரும் அறிவுறுத்தினர். ஏனெனில் நேபுகாத்நேச்சார் தேவனுடைய கரத்திலுள்ள தண்டனையின் பட்டயம். தண்டனையை ஏற்று, அதற்குக் காரணமான விக்கிரக வணக்கத்தை, பாவத்தை விலக்கவேண்டுமென வற்புறுத்தினுன். எருசலேம் அழிவுற்றதும், கர்த்தர் சிறையிருப்பை மாற்றி, அவர்களைச் சீர்படுத்துவதைக் கூறினுன். நம்பிக்கை, மெய் மனந்திரும்புதலைப் போதித்தான். இத்தீர்க்கத்தரிசனத்தின் போதனைகள்:

(1) மனந்திரும்பாதவர்கள், பின்வாங்கினவர்கள் மேல் தேவ கோபாக்கினை வரும்.

(2) தேவன் இரக்கமுள்ளவராதலின், மனந்திரும்பினவர் மறுபடியும் புதுப்பிக்கப்படுவர்.

தேசியவாதிகளாகச் சிறைக்குச் சென்ற இஸ்ரவேலர் தேவ சபையாகத் திரும்ப எசேக்கியேல் உதவினான்.

ஆட்சேபணைகள்: இப்புத்தகத்திலுள்ள (1) செய்யுள் நடைக்கும், எழுத்து நடைக்குமுள்ள வேறுபாடுகளினாலும், (2) காட்சிகளின் பரவச நிலைக்கும், ஏனையவற்றின் இயல் நடைக்குமுள்ள வேறுபாட்டினாலும், (3) அழிவு பற்றிய கண்டிப்புரைக்கும், பின்னாள் பற்றிய நம்பிக்கை மொழிகளுக்குமுள்ள கருத்து வேறுபாட்டினாலும், சில பண்டிதர் இரு எசேக்கியேல் இருந்தனர் என்பர். முன்னவன் யூதேயாவிலிருந்து அழிவு பற்றி அறிவித்தவன். பின்னவன் சிறையிருப்பில் நம்பிக்கை மொழி நவின்றவன் என்பர். ஆயினும் அரபியர் கிழக்கத்தியருடைய இரண்டாம் மனக் கண் பற்றிப் பலர் ஆராய்ந்ததில், எசேக்கியேல் போல, சிறையிருப்பிலிருந்து எருசலேமை அறிவது சாத்தியமென்று கூறப்படுவதால், இந்த ஆட்சேபணைகள் ஒவ்வவில்லை. காட்சி காணும்போது ஏற்படும் பரவச நிலையாலும், அதைப் பகர்வதில் ஏற்படும் பரபரப்பு, ஒருவனுக்கு என்றும் இருக்கவேண்டுவதில்லை. ஆகவே ஒரு எசேக்கியேலே இருவித மன நிலைகளில் எழுதியிருக்க ஏதுவுண்டு.

5. முக்கிய கருத்துக்கள்

தேவனை மிகுந்த மகிமை, கனம் பொருந்தியவராகக் காட்டுகிறான். அவர் தமது நாமத்திற்காகவே செயல்படுவதாக வலியுறுத்துகிறான் (36 : 22). "கர்த்தருடைய மகிமை" எனும் சொற்றொடர் முதல் 14 அதிகாரங்களில் 11 முறை வருகிறது. "நானே கர்த்தர் (யெகோவா)

என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்" என்று 54 முறையும், இது விரிவாக 18 முறையும் வழங்கப்பட்டிருக்கிறது. தேவ செயல்தான் அவரை அறியும்படி நடத்துகிறது. தேவ ஆராதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறான். விக்கிரக வணக்கத்தை வெறுத்துக் கண்டிக்கிறான். தெருவில் தேடுவாரற்ற குழந்தையைத் தெரிந்தெடுத்து வளர்த்து ஆளாக்கியதற்கு ஒப்ப, இஸ்ரவேலின் அற்ப ஆரம்பத்தையும் தேவனே அவர்களுக்கு எல்லாம் அளித்ததையும் படம் போலச் சித்திரிக்கிறான் (16). பாவியின் மனந்திரும்புதலில் தேவன் பிரியம் வைக்கிறார் (33 : 11) புது இருதயம், நவமான ஆவியை வலியுறுத்துகிறான் (22 : 6—8). ஆவியானவரைப் பற்றி சுமார் 25 முறை வரையப்பட்டிருப்பதால், இதைப் பரிசுத்தாவியின் தீர்க்கதரிசனமென்பர். தேவன் எசேக்கியேலை மனுபுத்திரன் என்று அழைப்பது சுமார் 91 முறை குறிக்கப்பட்டுள்ளது. நமது ஆண்டவரும் தம்மை மனுஷ குமாரன் என்று குறிப்பிட்டிருப்பது ஒத்து ஆராயற்பாலது. தேவாலயத்தின் புதுத்திட்டமான "யெகோவா ஷம்மா", தேவன் அங்கே, அவர்கள் மத்தியில் மகிமையுடன் இருப்பது சீரிய கருத்து மட்டுமன்றி மோட்ச நிலையின் குறிப்பாகுமன்றோ.

மனதில் பதியத்தக்கவாறு கருத்துச் செறிந்த காட்சிகள், உவமைகள், உருவகக் கதைகள் எசேக்கியேலில் மிகுதி. சரீர வேதனையிலும் தேவ தூதைச் செயல் முறையில் காட்டினான், ஒரு முறை 300 நாட்களுக்கு அதிகமாக ஒரு புறமாகப் படுத்தான். ஒரு முறை தன் மயிரைச் சிரைத்தான். பல முறை மௌனியாக, பல முறை குமுறும் கடலாகக் காட்சியளிக்கிறான். தன் மனைவி இறந்த துக்கத்தையும் கூட தீர்க்கதரிசனமாக மாற்றிக் காட்டுகிறான். எசேக்கியேல் பேசினாலும், மௌனியானாலும், செயல்படுகையிலும், பாடுபடுகையிலும், தன் ஜனத்துக்காகக் கவலை கொண்ட நற்காவற்காரனாக, நம்பிக்கையின் நற்தீர்க்கனாக விளங்கினான்.

விளக்கவுரை

I. திருத் தோற்றமும், தீர்க்கனின் அழைப்பும், ஆயத்தமும். 1 : 1—3 : 27.

தீர்க்கதரிசிகளுக்குப் பொதுவாகக் கிடைத்த தேவ அழைப்பைப் போல, திருக் காட்சி அருளப்பட்டு, திட்டமான தேவ அழைப்பு கிட்டிய பின்னரே, எசேக்கியேல் திருப் பணியைத் துவக்கிஞன். யூத மக்கள் எருசலேம் ஆலயத்தையும், பரிசுத்த பூமியான பாலஸ்தீனத்தையும் தேவனுடைய வாசஸ் தலமாக எண்ணியிருந்தனர். ஏசாயா போன்ருேருக்குத் தேவ தரிசனம் ஆலயத்திலும், திருநாட்டிலும் அருளப்பட்டது. 137-ம் சங்கீதத்தைப் பாடிய பாபிலோனியச் சிறைக் கைதி, கர்த்தரின் மங்கள கீதங்களே அந்நிய நாட்டில், பாபிலோனில் பாடுவதெப்படி யெனப் பகருகிருன் (சங். 137 : 3, 4). ஆதலால், எசேக்கியேலுக்கு அருளப்பட்ட திருத் தோற்றத்தின் சிறப்பு, அந்நிய நாட்டிலும், ஏன் சிறையிருப்பிலுங் கூடக் கர்த்தரே தெய்வமென்பதைக் காட்டி, தேவனுகிய கர்த்தர் பூமி யனைத்திற்கும் ராஜா எனப் புகலுகிறது. புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலருடைய பரந்த சிந்தை, சிறப்பாக ஸ்தேவானின் தர்க்கம் (அப். 7 : 2, 9, 12, 17, 30—33), அந்நிய மண்ணில் எசேக்கியேலுக்குத் தேவன் தந்த மகிமையின் காட்சியை மறுக்காது ஆதரிக்கிறது. சிறையிருப்பே சொர்க்க வாசலாகிவிட்டது, தீவு கடத்தப்பட்ட பக்தன் யோவானுக்குப் பத்மு தீவில் பரலோகக் காட்சி கிடைத்தது போல (வெளி. 1 : 9). அலங்கார ஆலயமில்லாத இடத்தில், தேவ ஜனம் தோற்று நிற்குமிடத்தில், தேவ மகிமைக் காட்சி! "கர்த்தருடைய மகிமை" (எசே. 1 : 28 மீ) எனுஞ் சொற்ருெடர், முதல் பதிஞெரு அதிகாரங்களில் 12 முறை வருகிறது.

எசேக்கியேல் கண்ட காட்சிகளில், அவன் கண்ணுக்குப் புலப்பட்ட காட்சிகள் எவ்வளவு, அவன் கருத்திற் கண்ட கற்பனைகள் எத்தனை, கர்த்தர் வெளிப்படுத்தியவை எத்தனை யென அதிசயிக்கிருேம். காட்சியின் துவக்கத்தில் இயற்கை

யின் காட்சியைக் கண்டான் எசேக்கியேல். வச. 1 : 4. "வடக்கேயிருந்து புசல் காற்றும், பெரும் மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக் கண்டேன்" என இயற்கையின் சூறாவளிக் காற்று வரக் கண்டான். 1835—37-ம் ஆண்டுகளில் ஐபிராத்து நதியருகே, பிரித்தானியா தொல் பொருள் ஆராய்ச்சிக் கூட்டத்தார், தளபதி ஃப்ரான்சிஸ் செஸ்னியின் தலைமையில், சிறு கப்பலொன்றில் செல்கையில், திடீரெனச் சூறாவளிக் காற்று தோன்றியது. அதன் தோற்றத்தையும், உக்கிரத்தையும், அவர் விவரிக்கையில், அதன் காட்சி, வண்ணங்களின் ஜாலம், வேகம், எசேக்கியேல் காட்சியோடு வியப்பூட்டும் வகையில் ஒத்திருக்கிறது என்றார். அவர் கூறுவது : "கறுப்பு நிறமான திரண்ட மேகங்கள், ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள் நிற விளிம்புகளோடு தென்மேற்குத் திசையிலிருந்து எங்களை நோக்கிப் பெரும் பலத்தோடு வந்தது ... ... அச்சமயம் மேகம் அதிக பயங்கரமாயிருந்தது. அதன் அடியிலிருந்த கறுமைக்குக் கீழே, திடப் பொருள் போன்று கெட்டிச் சிவப்பு நிறத்துடன், அதி வேகத்தில் எங்களை நோக்கி உருண்டு வந்தது......இருபத்தைந்து நிமிடங்களுக்குள் இப்பயங்கர சூறாவளி தோன்றி, ஆடி, ஓயவே, எல்லாம் முன் போலவே அமைதியாக, தெளிவாக மாறிவிட்டது." தான் கண்டது "சாயல் போல" என எசேக்கியேல் திரும்பத் திரும்பக் கூறுவதால் (1 : 5, 10, 13), விவரிப்பதற்கரிய உண்மைக் காட்சியை விளக்குவதற்கு இதுபோல், என்று அடையாளங் காட்டிக் கூறினான் எனலாம். எலியாவுக்கு இறைவன் காட்சி தருகையில் (1 ராஜா. 19 : 11, 12), பலத்த காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி, இவற்றின் பின் அமர்ந்த தம் மெல்லிய சத்தம் அவனுக்குக் கேட்கச் செய்தது போல், எசேக்கியேலுக்கும் பரவசமாக்கும் பயங்கர தரிசனத்தின் பின் கர்த்தர் சத்தம் கேட்டது (1 : 28).

அ. திருத் தோற்றம் 1 : 1—28.

வச. 1, 2. காட்சி காணப்பட்ட இடமும், காலமும் குறிப்பிடப்பட்டுள்ளன. முப்பதாம் வருஷம் — எதற்கு, எதி

லிருந்து முப்பது எனத் திட்டமாக அறியோம். 2-ம் வசனத்தில், அதைத் தெளிவுபடுத்துவது போல, சிறையிருப்பின் 5-ம் ஆண்டு என வருகிறது. அரசன் யோயாக்கீன் சிறையிருப்பு II ராஜா. 24 : 10—16-ல் சித்திரிக்கப்பட்டுள்ளது. அது கி. மு. 597-ம் ஆண்டில் நடைபெற்றது. ஆதலால் தரிசனம் கி. மு. 592-ல் தீர்க்கனுக்கு அருளப்பட்டது எனலாம். அவ்விதமாயின், முப்பது என்பது தீர்க்கனின் வயதாயிருக்கலாம். அவன் சிறையிருப்புக்கு வந்தபோது அவன் வயது 25. நாலாம் மாதம், இது தம்முஸ் மாதம் எனப்படும். கோடை காலமான ஜூன், ஜூலை நாட்கள் இது. கோடையில் இடி முழக்கங்களும், திடீரெனத் திரண்டு மேகங்கள் வருவதும் குறிப்பிடத்தக்கது. தரிசனங் கிடைத்த இடம் கேபார் நதிக் கரையில் எனக் கூறப்பட்டுள்ளது. எசே. 3 : 15-ல் தெலாபீப் என்று இடத்தின் பெயர் கூறப்பட்டிருக்கிறது. கேபார் நதி யென்பது, பாபிலோனுக்கு மேற்புறத்திலிருந்து ஆரம்பித்து, நிப்புர் வழியாகச் சென்று, ஊர் எனுமிடத்தின் கீழ்ப்புறம் நதியைச் சேருகிற பெரும் கால்வாயாகும். மூல பத விளக்கப்படி, தெலாபீப் என்றால் பாபிலோனிய மொழியில் "ஆற்று வெள்ள மண் குவியல்", எபிரேய பதத்தில் "பச்சைக் கதிர் வீடு" எனப்படும். ஒரு வேளை பெரிய மண் மேடு அடையாளமாயிருந்த இடமாயிருக்கலாம்.

வச. 3. எசேக்கியேல் ஆசாரிய வம்சத்தான், பூசியின் குமாரன். தீர்க்கரின் சன்மார்க்க சீர்திருத்த ஊழியமும், ஆசாரியரின் திருப் பணிவிடை ஊழியமும் பன் முறை எதிர்த்தே இயங்கியது. இங்கே இரு ஊழியங்களும் ஒருவனில் இசைந்து வருகிறது. நமது ஆண்டவரோ தீர்க்கரும், ஆசாரியரும், ராஜாவுமாயிருக்கிறார். "கர்த்தருடைய கரம் என் மேல் அமர்ந்தது" என 7 முறை இப்புத்தகத்தில் காணப்படும் இடங்கள், எசேக்கியேலை சிறப்புத் தூதுக்குத் தேவன் சந்தித்த இடங்களாம்.

வச. 4. வடக்கேயிருந்து தரிசனம் வந்தது. குளிரும் பயங்கரமும் ஆட்சி புரியும் இடம் வடக்கு (எரே. 1 : 13மீ).

நியாயப் பிரமாணம் அருளப்பட்ட சீனாய் மலைத் திசையாகிய தெற்கிலிருந்தல்ல, பரிசுத்த ஆலயமிருந்த மேற்கேயிருந்து மல்ல என்பது குறிப்பிடத் தக்கது.

தேவன் வரும்போது பெரிய புயல் வருவது பல இடங் களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (நியா. 5 : 4, சங், 18 : 7மீ). சொகுசா நிறம் — இது இந்தி பதம். செம்பு கலந்த தங்கத் தின் செந்நிறத்தைக் குறிக்கும்.

வச, 5—13. ஜீவன்களின் தோற்றம் கூறப்பட்டுள்ளது நான்கு ஜீவன்கள், ஒவ்வொன்றிற்கும் நான்கு முகங்கள், நிமிர்ந்த, கன்றுக் குட்டியின் உள்ளங் கால்களுக்கொப்பான கால்கள், நாலு பக்கங்களிலும் மனுஷ கைகளும் செட்டை களும் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தன. அவை உடலை மூடின. முகங்கள் மனுஷ, சிங்கம், எருது, கழுகு முகங்கள்.

பாபிலோனியரின் மாபெருங் கோயில்களில், மனுஷ, சிங் கம், எருது, கழுகு முகங்களும், கன்றின் கால்களும், பறவை களின் பெரும் செட்டைகளுமுடைய, பெரும் உருவங்கள், காவல் தெய்வங்கள் போல வைக்கப்பட்டிருந்தன. எசேக் கியேல் அவற்றை அறிந்திருந்தானாதலின், சூறாவளிக் காற் றுடன் பெரு மேகந் தோன்றிய போது, அவன் கருத்தில் இக் கற்பனை உருவாயிருக்கலாம் என்பர் பண்டிதர். தான் கண்ட காட்சியை, அங்கிருந்ததும் அனைவரும் அறிந்ததுமான பாபி லோனிய சிற்பங்களைக் குறித்த அடையாள மொழியில் அவன் விவரித்திருக்கலாம். இயற்கை நிகழ்ச்சிகளையும், சூழ் நிலையையுங் கொண்டு தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் (யோபு. 38, சங். 29).

வச. 10. முகங்களின் நான்கு சாயல்கள். யூத ரபீக் களின் விளக்கம் அற்புதமாயிருக்கிறது. ''பிராணிகளில் மனிதன் மேன்மையுள்ளவன், பறவைகளில் கழுகு மேன்மை யுள்ளது. வீட்டு விலங்குகளில் எருது மேன்மையுள்ளது. காட்டு விலங்குகளில் சிங்கம் மேன்மையுள்ளது. இவை

யாவும் அதிகாரம் பெற்றவை. பெரும் மேன்மை அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இவை பரிசுத்தரின் இரத்தத்திற்குக் கீழேதான் வைககப்பட்டிருந்தன." பண்டிதர் ஜெரோம், இந்த நான்கு முகச் சாயல்களை, நான்கு சுவிசேஷங்களுக்கு ஒப்பிட்டு வர்ணித்திருக்கிறார். வெளி. 4 : 7-ல் வருகிற நான்கு ஜீவன்களின் முகங்களும் இதற்கொத்திருக்கின்றன. இந்நான்கும் ஞானம், கம்பீரம், வல்லமை, வேகம் எனும் தேவ தன்மையின் அடையாளமென்பார் சிலர். இவை உன்னத வகுப்பைச் சேர்ந்த தேவ தூதர்கள் என்றுஞ் சிலர் கூறுவர். தேவ நீதிக்காகவும், அவரின் அநாதி திட்டத்திற்காகவும் வைராக்கியங் கொண்டு, அவரோடு சிங்காசனத்திலமர்ந்து, ஆட்சியில் பங்கு பெறும் மீட்கப்பட்ட கூட்டத்தார் இவர் என்றுங் கூறுவோருண்டு. இக்காட்சியை வரைந்து காண்பது எளிதன்று. இதைக் கருத்திலடக்கிக்கொள்வதுங் கடினமே. இதன் ஆவிக்குரிய அர்த்தத்தை அறிந்து, தேவ மகிமையைச் சிந்தையில் தெளிந்து, பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவதே சிறப்பு. யோபின் அனுபவம் (யோபு. 42:1—6) காண்க.

வச. 11: உடலைச் செட்டைகள் மூடின காட்சி ஏசா. 6:2 ஒப்பிட்டு அறிந்துகொள்க.

வச. 13. ஜீவன்களுக்குள்ளே அக்கினி. ஏசாயாவின் தரிசனத்திலும் வருகிறது — பலிபீடத்தழல் (ஏசா. 6 : 6). அக்கினி ஆண்டவரின் பரிசுத்தத்தைக் காட்டுகிறது.

வச. 14—21. சக்கரங்களின் தரிசனம். இது விளக்குதற்கரிய காட்சி. இவை வண்டிச் சக்கரங்கள் போலல்ல. இவை தெய்வீகச் சக்கரங்கள். வச. 16. வட்டங்களுக்குள் வட்டம். வச. 15. நாலு முகங்களுள்ள சக்கரம். வச. 17. நாலுபக்கமும் திரும்பாமல் ஓடும். வச 18. பயங்கர உருவம் உள்ளவை. வச. 20, 21. ஜீவ ஆவியுடைய சக்கரங்கள். தேவனுடைய சர்வ வல்லமை, வேகம், சர்வ ஞானம் இவற்றை விளங்கும் காட்சி இது. வச. 20. "ஆவி போகவேண்டுமென்

றிருந்த எவ்விடத்துக்கும் அவை போயின''. உமது சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போல, என்பதன் தெளிவான விளக்கம் அது.

வச. 22—28. ஜீவன்களின் மேலேயுள்ள மண்டலத்தின் காட்சி. வச. 22. மூலவுரை, அடித்துச் சமமாக்கப்பட்ட உறுதியான மேடை போன்றது எனப்படும். ஆதி. 1:6 ஒத்திடுக. இந்த மண்டலத்தின்மேல் தேவசிங்காசனம் அமைந்திருந்தது. வச. 25. ஒரு சத்தம் பிறந்தது எனும் போது, இது யெகோவாவின் சத்தம் என்று கூறவில்லை. 28-ம் வசனத்தில்தான் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கிறான்.

வச. 26. மனுஷ சாயலுக்கு ஒத்த சாயலைக் கண்டதாகத் தீர்க்கன் கூறுகிறானேயொழிய, யெகோவாவைக் கண்டேன் என்று கூறவில்லை.

வச. 27. அவருடைய அழகிய சாயல் வர்ணிக்கப்படுகிறது. யோவானுக்கு வெளிப்பட்ட தேவ தரிசனத்தை (வெளி *1 : 13—16*) ஒப்பிடுக.

வச. 28. மறைபொருளாயிருக்கிற மகிமையின் திருத்தோற்றம் தீர்க்கனை முற்றும் ஆண்டு கொண்டது. தரிசனம் அவனைப் பிரமிப்பிலாழ்த்தி, பரவசப்படுத்தி, பயபக்திக்குட்படுத்திற்று. ஆட்கொள்ளப்பட்ட அவன் முகங்குப்புற விழுந்தான். யோவானுடைய அனுபவமும், ஏசாயாவினுடையதும் இவ்விதமிருந்தன, இத் திருக்காட்சி தேவனுடைய சர்வ வல்லமை, சர்வ வியாபகம் சர்வ ஞானம், மர்மமான மகிமை, இவை எத்தகையனவென்று நாம் ஆச்சரியப்படவும், பயபக்தியுடன் பணியவும் நம்மை ஏவுகிறது.

ஆ. அழைப்பும், அதிகாரம் அளித்தலும். 2 : 1—3 : 3.

எசேக்கியேலை "மனுப்புத்திரனே" என்று தேவன் அழைக்கிறார் (2 : 1, 3). இது 100 முறைக்கு அதிகமாய் இப்புத்தகத்தில் காணப்படுகிறது. அவன் தன்னைப்பற்றி அவ்வாறு கூறவில்லை. தேவன் தாம் அவ்விதம் அவனை

அழைப்பதால், உன்னை உருவாக்கினவரின் மகிமைக்கு முன் நீ வெறும் மனிதனே, சிருஷ்டிதான், என்கிறார் எனலாம். மனிதன்தான் தேவனுடைய மகிமையைக் கூறும், தேவ திட்டம் விளக்கும் வழியாவான் எனவும் இப்பதம்குறிக்கிறது. எசேக்கியேல் மனுக்குலத்திற்குப் பிரதிநிதி, ஆகவே, 'மனுப் புத்திரன்' என்று சிறப்புப் பெயராக அழைக்கப்பட்டான் எனலாம். அவனுடைய அழைப்பில், அவன் அனுப்பப்படு வதில், ஆவி அவனுக்கருளப்பட்டதில், அவன் தேவனுக்கு மனுஷ குமாரனுவான். இயேசுவானவரும் தம்மை மனுஷ குமாரனென்றார். ஏனெனில் மேற்கூறியவை அவரிலும் மெய்யாயிருந்தன. அதுவுமன்றி, புதுப்பிறப்படைந்த கூட்டத் தாரின் தலைவரும் அவரே.

தேவன் எசேக்கியேலை அழைத்து, அதிகாரம் அளித்த போது நடைபெற்ற மூன்று முக்கிய காரியங்களாவன: (1) கர்த்தருடைய கரம் அவன் மேல் அமர்ந்தது (1 : 3, 3 : 14, 22), (2) ஆவி அவனுக்குள் வந்து அவனைப் பலப்படுத்திற்று (2 : 2), (3) புத்தகச் சுருளைப் புசித்தான் (2 : 8, 3 : 1, 2). தேவ ஊழியனின் தகுதியும் சிறப்பும் இதில் காணப்படுகின்றன.

வச. 2 : 3, 4, 5. தீர்க்கனை யாரிடம் தேவன் அனுப்பு கிறார்? தனக்கு விரோதமாய் எழும்பின, கலகக்காரராகிய, துரோகஞ்செய்த, கடினமும் முரட்டாட்டமுமான இருதய முள்ள இஸ்ரவேலரிடம் அனுப்புகிறார். இத்துணை இடும்பர் களாயின் ஏன் அவர்களை அவர் எண்ணவேண்டும்? அவர் கள் இஸ்ரவேலர், தேவ மக்கள், புத்திரர். மனிதனை அவன் மனம்போன மாறுபாட்டு வழியிலே தேவன் விடமாட்டார். ஏனெனில், அவன் அவருடையவன்.

வச. 4. "கர்த்தராகிய ஆண்டவர்" எனுஞ்சொல் சுமார் 217 முறை இத்தீர்க்கதரிசனத்தில் மாத்திரம் வருகிறது.

வச. 4, 5. தீர்க்கனை அனுப்பியதின் நோக்கம் கூறப் படுகிறது. (1) கர்த்தராகிய ஆண்டவர் உரைப்பதை

அவர்கள் கேட்கவேண்டும், (2) தங்களுக்குள்ளே தேவ மனுஷனை தீர்க்கதரிசி ஒருவன் உண்டென்பதை அவர்கள் உணரவேண்டும். "கலக வீட்டார்" எங்கேயிருக்கிறார்கள்? அவர்கள் எருசலேமில் இருக்கின்றனர் என்றால், அவர்களி டையே தீர்க்கன் இருந்து வாக்குக் கூறவில்லை. முதல் இருபத்திநான்கு அதிகாரங்கள் எருசலேமிலிருந்த தீர்க்கன் எழுதினான் என்று வாதிப்பவர்கள் இதையொரு ஆதார மாகக் கொள்வதுண்டு.

வச. 6. நெருஞ்சில், முள், தேள் என்று சிறைப்பட்டவர் களைக் கூறுவது பொருந்துமா என்று மேற்கூறியவர்கள் கேள்வி எழுப்புவதுண்டு. இதுவும் எருசலேமிலிருந்த அக் கிரம இஸ்ரவேலரைக் குறிக்குமென்பர். ஆனால், எருசலே மிலிருந்த யூதர் சிறைப்பட்டவர் என்று இரு பாலாராகப் பிரிப் பதும், இவர்களைவிட அவர்கள் நல்லவர் என்பதும் பொருந் தாது. ஒரே ஜனம் அவர்கள். அவர்களுக்குக் கூறப்பட்ட செய்தி, எவ்விடத்திலிருந்து கூறப்பட்டதாயினும், அது மக்கள் யாவருக்குமே கூறப்பட்டதாகும். தேவதூது அந்த நாட்களுக்கு மட்டுமின்றி, எக்காலத்திற்கும் ஏற்ற செய்தி யாகும்.

வச. 2 : 5, 6, 7. அதிகாரம் அளிக்கப்படுதல். (1) நீ ஒரு தீர்க்கதரிசி — திருமொழித் தொண்டன், என்று தேவனே அவனைக் குறிக்கிறார், (2) எந்த இடர் ஏற்படினும் நீ பயப்படாதே, கலங்காதே என்று தைரியப்படுத்துகிறார், (3) எத்துணை கடினமாயிருப்பினும் என் வார்த்தைகளையே சொல் என்று கட்டளையிடுகிறார்.

வச. 2 : 8—3 : 3. தீர்க்கன் சுருளைப் புசித்த சம்பவம் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவம் கனவிலே நடப்பதுபோலக் காணப்படுகிறது. ஏசாயாவின் உதடுகளைப் பலிபீடத்துத் தழலால் தேவன் பரிசுத்தப்படுத்தினார் (ஏசா. 6 : 7). எரேமி யாவின் வாயைத் தம் கரத்தால் தொட்டு, தம் வார்த்தை களை வைத்தார் (எரே. 1 : 9), எசேக்கியேலுக்கோ புசிக்கப்

புத்தகச் சுருள் தந்தார். எரேமியா "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்'" என்று தன் நூலில் 15 : 16ல் கூறுவது, இங்கே எசேக்கியேலின் வாழ்வில் செயல்படுகிறது. எசேக்கியேலின் வாலிப நாட்களில் நடைபெற்ற உபாகமச் சீர்திருத்தத்தில், நியாயப் பிரமாண புத்தகம் நடுமையமாக விளங்கிற்று.

வச. 2 : 10. உள்ளும் புறம்பும் எழுதப்பட்டது என்பது புத்தகத்தின் பரிபூரணத்தை, முழுமையான செய்தியைக்குறிப்பிடுகிறது. கோபாக்கினையைக் காட்டும் வார்த்தைகள் புலம்பல்களும், தவிப்பு, ஐயோ என்பனவுமாம்.

வச. 3 : 1. புசித்தல், வசனத்தை உனக்குச் சொந்தமாக்கிக்கொள் என்று வலியுறுத்துகிறது.

வச. 3 : 3. நிரப்புவாயாக என்பதால், ஊழியன் செய்தியால் நிரப்பப்பட்டிருத்தலின் அவசியத்தை அறிவிக்கிறது. அதன் ருசி தேனைப் போலிருந்தது எனும்போது, தேவ வசனத்தின் மதுரம் தெளிவாகிறது. (சங். 119 : 103). வெளி 10 : 10 ஒப்பிடுக — இங்கே வாய்க்கு மதுரம் வயிற்றுக்கோ கசப்பு. அழிவைக் கூறுவது தீர்க்கருக்கு ஆனந்தமாயிருந்தது எனும் பொருளைக் கொள்ளலாகாது. தீர்க்கரைப்போல் தம்மக்களுக்காகப் பரிதபித்தவர் யாருமில்லை. தேவன் அழைப்பதும், அவர் பேசுவதுமே அவர் ஊழியருக்கு ஆனந்தம் அளிப்பது.

இ. ஊழியனின் உத்தரவாதம். 3 : 4 — 3 : 27.

வச. 3 : 4—15. ஊழியம் உறுதிப்படுத்தப்பட்டது.

வச. 5. தீர்க்கன் அனுப்பப்படும் ஜனம் கடின பாஷையுள்ளதல்ல.

வச. 6. அவர்கள் அறியாத பிறருமல்ல, தேவனை அறிந்த இஸ்ரவேலரிடமே அவன் அனுப்பப்பட்டான். அந்நியராகிலும் செவி கொடுப்பார்களே, நினிவே மக்கள் போல். மத். 11 : 21, லூக்கா 4 : 24—27ல் ஆண்டவர் அருளிய உரையை ஒப்பிடுக.

வச. 7. இஸ்ரவேலின் இறுகிய நிலை கூறப்படுகிறது. கடின நெற்றி, முரட்டாட்டமுள்ள இருதயம் முதலியன, சிறப்பான சிலாக்கியத்தைப் பெற்றும், துரோகஞ் செய்தவர்களுக்கு வரும் சீர்கெட்ட நிலையைக் குறிக்கிறது.

வச. 8, 9, ஊழியன் கலங்காதபடி அவனை உறுதியாக்குகிறுர். சரித்திரம் முழுவதும் தேவன் தம் ஊழியரை வச்சிரக்கல் போலும், கன்மலை போலும் கெட்டியாக்குவதைக் காணலாம். உதாரணங்களாக இரத்த சாட்சிகள், மார்டின் லூதர், ஜான் நாக்ஸ் போன்ருேர்.

வச. 10. என் வார்த்தைகளைச் செவிகளால் கேட்டு, இருதயத்தில் ஏற்று, ஜனத்திடம் சேர்ந்து பேசு என்று கட்டளையிடுகிறுர். ஊழியன் தேவ வசனத்தைப் போதிப்பதைப்பற்றிய சிறப்பான வாக்கு இது.

வச. 10. அச்செய்தி அந்நேரம் சிறைப்பட்டவர்களுக்குக் கூறப்படுகிறது. ஆயின் அத்தீர்க்கதரிசனமே பிறகு சகலருக்கும், சகல நாட்களுக்கும் பேசப்படுகிறது. ஏனெனில் அது தேவ உரை.

வச. 12—15. மறுபடியும் ஆவிக்குள்ளான தரிசனங் காண்கிருன். தேவன் துதிகளின் மத்தியில் இருக்கிறவர் (ஏசா. 6 : 1 பி.) மகிமையின் காட்சி அவனைப் பிரமிப்பிலாழ்த்தி ஏழு நாள் மௌனியாக்கிற்று. இந்த அனுபவம் அவன் ஆவிக்கும் சரீரத்திற்கும் அனுபவங்கள் அருளிற்று. ஆவியின் உக்கிரம், நெருப்புத் தணலின் சூடு போன்ற வெம்மை. அதினுல் புறச்சரீரத்திற்கு ஏற்பட்ட அனுபவம் மனக்கசப்பும், சோர்புமே.

வச. 15. இஸ்ரவேலரின் சிறையிருப்பின் மையமான தெலாபீபிலே தங்கச் சென்ருன் தீர்க்கன். அவன் தேவனுடன் சஞ்சரித்தான். மனிதர் மத்தியில் வாழ்ந்தான். சாதிக்கிறவனுக விளங்கினுன்.

வச. 16—21. தீர்க்கன் ஒரு காவற்காரனுக இருக்கிறுன். வச. 17. இந்த ஊழியம் தேவன் அவனுக்களித்தது. வச. 18, 19 அவனது சேவை, துன்மார்க்கனையும், நீதிவிட்டுத் திரும்பினவனையும் மனந்திரும்பும்படி எச்சரித்தலாகும். அவன் பொறுப்பாவது, எச்சரிக்காவிடில் இரத்தப் பழி அவன் கையில் கேட்கப்படும். நியாயத் தீர்ப்பின் கடின உரைதனையாற்றக் கலங்கும் கர்த்தரின் ஊழியக்காரர் கவனமுடன் இதைக் கற்கவேண்டும். இப்பகுதியில் தனி மனிதனின் உத்தரவாதத்தை உணர்த்தும், புரட்சிகரமான புதுமை அறிமுகமாகின்றது. இதன் விவரம் எசேக்கியேல் 18-ம் அதிகாரத்திலும் 23 : 1—20லும் காணப்படும். " துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்...அவன் தன் பாவத்திலே சாவான். அவன் பிழைக்கவே பிழைப்பான் " என்று தனித்தாள் உத்தரவாதம் வலியுறுத்தப்படுகிறது. நீதிமானும் எச்சரிக்கப்பட்டபின், பாவஞ் செய்யாவிட்டால்தான் பிழைப்பான் என்று, தனி மனிதனின் நீதியுள்ள வாழ்க்கை வலியுறுத்தப்படுவதைக் கவனிக்க.

வச. 22—27. தீர்க்கன் மௌனியாக்கப்படுதலின் காரணங்கள் கூறப்படுகின்றன. (1) வச. 24. உன்னை அடைத்துக்கொண்டிரு. ஊழியம் ஆரம்பிக்கு முன்னர் மோசே, எலியா, யோவான் ஸ்நானகன், நமது ஆண்டவர், பவுல் போன்ருேர், இவ்வாறு தங்களை அடைத்துக்கொண்டனர். (2) வச. 25. உன்னைக் கட்டப் போகிருர்கள். உன்மேல் மக்கள் மனக்கசப்படைவர். ஊழியர் உற்சாகங்கொள்ளுங்காரணம் இதுவன்ருே? (மத். 5 : 10—12). இவ்வசனம் "நான் உன்னைக் கட்டுவேன்" என்று சில பிரதிகளில் திருப்ப ஏதுவுண்டு என்பர். (3) வச. 26. நான் உன் நாவை ஒட்டப்பண்ணுவேன். அவனைப் பேசக்கூடாத கட்டுப்பாடான நிலையில் தேவன் வைத்தார். தேவன் பன்றிகள் முன் முத்துக்களைப் போடமாட்டார். ஊழியரை ஊமைபோலாக்கி வைப்பதும், தேவ எச்சரிப்பேயாகும் நம்மை மௌனியாக்கி மறைத்துக்கொள்ளவும், கர்த்தர் நம்மை

மறைக்கையில் மனநிறைவு கொள்ளவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதருக்குப் பயந்து, நாமே வாயை மூடிச் சாட்சியை மறைப்பதற்கும், தேவ கட்டளைப்படி நாம் வாயை மூடி அவருக்குச் சாட்சியாயிருப்பதற்கும், பெருத்த வேறுபாடுண்டு.

மகிமையின் காட்சி காட்டி, அழைத்து, ஊழியனைப் பலப்படுத்தியபின் இவ்வாறு மௌனியாக்கியது பொருத்தமற்றதாகக் காணப்படுவதால், இப்பகுதி இவ்விடத்தில் தவறுதலாக வந்தது என்பர் சிலர். இவர்கள் கூற்றுப்படி 33-ம் அதிகாரம் 1—19 வசனங்களில் தனித்த மனிதனின் பொறுப்பை வலியுறுத்தி, 33 : 22ல் தீர்க்கன் மௌனியான பகுதியில் இப்பாகம் பொருத்தமாக அமையும் என்பர். ஆயினும் தேவன் தமது சித்தத்தின்படியும், தம் வேளை வரும் போதும் ஊழியனை உபயோகிப்பாராதலின், அதனை வலியுறுத்த இப்பகுதி இவ்விடத்தில் அமைந்தது சரியென வாதிடுவோரும் உண்டு. "என் வேளை இன்னும் வரவில்லை" (யோ. 2 : 4), என்று நமதாண்டவர் காத்திருந்தாரே. அவரிடம் சுகம்பெற்ற பலரை ஒன்றுங் கூறாதிருக்கக் கூறினார், சிலரையோ சாட்சியாக அறிவிக்க அனுப்பினார்.

II தேசம் கைவிடப்படக் காரணங்கள். அதி. 4—24.

எருசலேம் அழிவுற எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எசேக்கியேலுக்கு அழைப்பு வந்தது. எருசலேம் முற்றிலும் அழியும், அதின் மக்கள் யாவரும் சிறையாகச் செல்வர் என்று எட்டு ஆண்டுகள், காரணங் கூறிக் கண்டித்துணர்த்தினான். இக்காலத்தில் எருசலேம் நகரில் எரேமியாவும் இன்னல் பலவற்றின் இடையில் அழிவை அறிவித்தான். எருசலேமின் பாவம் எத்துணை அருவருக்கப்படத்தக்கதென்று பல்வேறு உதாரணங்களால் இந்த அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளன. பாவத்தின் பலன் கண்டிப்பாய் வருமென்று கடிந்துரைத்தான். அழிவின் பயங்கரம் மனதில் பதியும்படி செயல்புரிந்து, தன்னையே அடையாளமாக்கிக் காட்டினான் தீர்க்கன். எனினும், மக்கள் மனந்திரும்பினரில்லை. எருசலேம் கி. மு. 586ல் பிடிபட்டுப் பாழாயிற்று.

அழிவு முன்னறிவிக்கப்படுவதால், அழிவு தேசத்தின் தலைவிதியுமல்ல, தேசத்திற்குத் தேவதிட்டமும் அதுவல்ல. அழிவு ஆண்டவருக்குப் பிரியமல்ல, பிழைப்பதே பிரியம் (எசே. *18 : 23*). அழிவுச் செய்தி கேட்ட நினிவே பட்டணத்தார், பாவத்தைவிட்டுத் திரும்ப, பிழைத்தார்களே (யோனா. *3 : 10*). நோவா நூறுஆண்டுகளுக்கு மேலாக எச்சரித்தும் இரட்சிக்கப்பட்டவர்கள் எட்டுப்பேர் மட்டுந்தானே (1 பேதுரு *3 : 20*). எச்சரிப்பைக் கேட்டும் ஏற்றுக்கொள்ளாத இஸ்ரவேலர் போலவே கடைசி நாட்களிலும் இருக்கும் (மத். *24 : 37—39*). கர்த்தர் நீதிபரர், நீதியும் நியாயமும் அவர் சிங்காசனத்தின் ஆதாரம். நியாயத்தீர்ப்பு வருவது நிச்சயம்; ஏமாறவேண்டாம்.

அ. நடித்துக் காட்டிய நான்கு திருவுரைகள் 4 : 1—5 : 17.

செய்தி நடித்துக் காட்டப்படுவதால், மக்கள் மனத்தில் எளிதில் படியும், ஆழமாகப் பதியும். நமது ஆண்டவர் ஒரு சிறு பிள்ளையைச் சீஷர்கள் நடுவாக நிறுத்திப் பரலோக ராஜ்ஜியத்தில் பெரியவன் யார், மனந்திரும்புதலின் மாட்சி என்னவென்பதை மனதில் பதியும்படிக் கூறினார் (மத். *18 : 1—4*). தீர்க்கர் பலர் தேவசெய்தியை அடையாளமாகவும், கண்காணவும் நடித்துக் காட்டினர் (1 ராஜா. 20 : 35பி, 22 : 11, எரே. 27 : 2பி). எருசலேமுக்கு அழிவேயில்லை என்று பெரும்பாலோர் எண்ணினார்கள். அவர்கள் மனந் திரும்ப மறுத்தனர். அவர்கள் எண்ணங்கள் மண்ணாகும் என்று, மனதில் பதியும்படி நான்குமுறை நடித்து தன்னையே அடையாளமாக்கிக் கொண்டு, தீர்க்கன் அழிவை விளக்கினான். தேவனிடம் மனந்திரும்பிச் சேராமல், கொள்கைகளில் வைராக்கியமும், பிடிவாதமுமாயிருப்பது பயனற்றதாகும். வெளிப்படுத்தல் 2ம், 3ம் அதிகாரங்களில் 7 சபைகளுக்கு இயேசுக்கிறிஸ்து எழுதக்கூறிய கடிதத்தில் மறுபடியும், மறுபடியும் வலியுறுத்தப்படுவது, "ஆகையால் மனந்திரும்பு" என்பதுதான். மனந்திரும்பாவிடில் அழிவு வருவது நிச்சயம்.

i. எருசலேமின் முற்றுகை. 4 : 1—3. ஈரமான களிமண் செங்கலில் எருசலேமின் படம் வரைந்து, சுற்றிலும் மண்மேடு, மதிலிடி யந்திரங்கள், இராணுவங்கள் வரைந்து வைத்தான். முற்றுகையின் கடுமையையும், வன்மையையுங் காட்ட இருப்புச்சட்டி எதிராக வைக்கப்பட்டது. பாபிலோனியர் பச்சைச் செங்கல்லை எழுதுவதற்கு உபயோகித்தனர். எழுதினபின் அதைச் சூளையில் சுட்டுப் பத்திரப்படுத்தினர். இவ்வித எழுத்து மண் ஓடுகள், செங்கற்களாலான நூல் நிலையங்கள் பாபிலோனில் இருந்தனவெனப் புதைபொருள் ஆய்வாளர் கண்டுள்ளனர். முற்றுகை திட்டமாக நடைபெறும், மதில் இடிபடும் என்பதை வலியுறுத்தியது இக் காட்சி.

ii. முற்றுகையின் காலம் 4 : 4 – 8. இஸ்ரவேலர் முற்றுகையிடப்பட்டு அடைபட்டிருக்குங் காலமும், சிறையிருப்பின் நாட்களும் அதிகமாயிருக்கும் என அறிவிக்கப்படுகிறது. வெளிப்படையாகச் சரித்திரத்தில் முற்றுகையிடப்பட்டு, அல்லல்படும் காலம் மட்டுமின்றி, அது எதனுல் என்றும், அக்கிரமத்தைச் சுமந்த ஆண்டுகள் அதிகம் என்றும் பாவச் சிறையிருப்பின் காலமும் பகரப்பட்டதெனலாம். இஸ்ரவேலரின் பாவத்தைத் தன்மேல் சுமத்திக்கொண்டு அநேக நாட்கள் படுத்திருந்தான் தீர்க்கன். ஆனுல் அவன் இஸ்ரவேலரின் பாவங்களைச் சுமந்து தீர்க்கவில்லை. பாவத்தைச் சுமந்து தீர்ப்பவரின் பாடுகளின் படம் ஏசாயா 53ம் அதிகாரத்தில் தீட்டப்பட்டுள்ளது. அது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே; "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோ. 1 : 29). ஆயினும், அவரோடு கூட மற்றவர்களுக்காகப் பாடுபடுகிற சிலாக்கியம் தேவ ஊழியருக்கு அருளப்பட்டுள்ளது.

வச. 4, 5. இஸ்ரவேலின் அக்கிரமத்தைச் சுமக்க, இடதுபுறமாக ஒருக்களித்து 390 நாட்கள் படுத்திருக்கக் கட்டளை பெற்ருன்.

வச. 6, 7. யூதாவின் அக்கிரமத்தைச் சுமந்து, வலது புறமாக ஒருக்களித்து 40 நாட்கள் வரை முற்றுகைக்கு நேராகப் படுத்திருக்கவேண்டும். ஆகமொத்தம் 430நாட்கள். இந்த எண்ணை, இஸ்ரவேல் யூதா இவர்களின் சிறையிருப்பின் நாட்களோடு சம்பந்தப்படுத்துவது சிரமமானதொன்று. மொத்தம் 430 வருடங்கள் என்று கொள்வது சரியென்பர் சிலர். இஸ்ரவேல், யூதா இவர்களின் சிறையிருப்பு ஒன்று முடிந்தபின் அடுத்தது தொடர்ந்து வராமல், ஏக காலத்தில் முந்தி, பிந்தி, பின் மொத்தமாக அனுபவித்ததால் மொத்தம் 390 என்று எடுக்கவேண்டுமென்பர் சிலர். கி. மு. 721ல் சமாரியாவும், கி. மு. 586ல் எருசலேமும் விழுந்தன. யூதாவின் சிறை முடிவுற்றது கி. மு. 537-ல். இந்த இடைப்பட்ட காலத்திற்கும் 390, 430 நாட்களுக்கும் பொருத்தம் ஏற்படுத்த இயலாது. L X X திருப்புதலின்படி எசே. 4 : 5, 9ம் வசனங்களில் 390 என்பதற்குப் பதில் 190 என்று எழுதப்பட்டுள்ளது. கி. மு. 734ல் திகிலாத் பிலேசர், வட இஸ்ரவேலில் நப்தலி மக்களைச் சிறைப்பிடித்தான் (2 ராஜா 15 : 29). இதிலிருந்து சிறைமுடிவு வரை (734—537) சுமார் 190 ஆண்டுகள் என்பதால் L X X திருப்புதல் சரியானது என்று வாதிப்பார்கள். சிறையிருப்பு, முற்றுகை வெகு காலம் நீடிக்குமென்பதைக் குறிப்பதற்காக, 390, 430 என்று பெரிய முழு எண்கள் கூறப்பட்டது என்றுங் கூறலாம். யூதா, இஸ்ரவேல் தனித்தனியாக அரசன் ரெகொபெயாமின் காலத்தில் பிரிந்த ஆண்டு கி. மு. 933 (1 ராஜா. 12). இதிலிருந்து அவர்களது அக்கிரமம் சுமக்கப்பட்ட 390 நாட்களைக் குறைத்தால் கி. மு. 543 வருகிறது. இது ஏறக்குறைய சிறைமுடிவு காலம். ஆதலால் இஸ்ரவேல் பாவஞ் செய்த முழுக்காலமும் இதில் குறிக்கப்பட்டுள்ளது என்றுஞ் சொல்லுவார்கள்.

நாட்கள் முழுவதும் தீர்க்கன் படுத்திருந்திருக்கலாம், அல்லது மக்கள் காணும்படியாகத் தினமும், குறிப்பிட்ட

நேரங்களில் அவ்வாறு செய்திருக்கலாம். இஸ்ரவேலின் அக்கிரமம் கொடியது, அதைச் சுமக்குங்காலம் கடினமானது. அது அதிக காலம் நீடிக்குமென நடித்துக் காட்டினான்.

iii முற்றுகையின் கடூரம் 4 : 9 — 17. தினமும் மக்கள் தீர்க்கனைக் கவனித்தனர். முற்றுகை நீடிக்கும் என்பது மட்டுமல்ல. முற்றுகையின் மும்முரமும், பயங்கரமும் காட்டப் படுகிறது. வச. 9. ஆகாரத்தைக் கலப்புள்ளதாக மட்டுமல்ல வச. 10, குறைந்த அளவாகக் கொடுக்கவுங் கட்டளை பெற்றான். கலப்பு ஆகாரம் யூதனுக்குத் தீட்டானது (லேவி. 19 : 19, உபா. 22 : 9). வச. 11. தண்ணீரும் அளவாகக் குறைத்துக் கொடுக்கப்பட்டது.

வச. 12, 13. ஆகாரஞ் சமைக்க அசுத்த வறட்டி கட்டளையிடப்பட்டது. மக்கள் எத்துணை தீட்டாவார்கள் என்பதை எடுத்துரைக்கவே இவ்வித கட்டளை.

வச. 14, 15 தீர்க்கன் முறையிட, மாட்டுச் சாணவறட்டி உபயோகிக்கச் சம்மதமளித்தார். தீர்க்கனுடைய சுத்தமான ஜீவியம் அவன் முறையிடுவதில் காணப்படுகிறது. யூதர்கள் ஆசார சுத்தத்திற்குப் பெயர் பெற்றவர்கள். பிறதேசங்கள் தீட்டானவை, அவ்விடங்களில் ஆகாரம் அருந்துவதும் தீட்டென எண்ணினார்கள். நமது நாட்டிலும் ஆசார இந்துக் களும், வைதீகரும், கடல்கடந்து செல்லுவதை முன்னாட்களில் வெறுத்தனர். தாழ்ந்தோர் தொட்டால் தீட்டு என்றெண்ணினர். தீர்க்கன் செய்த இந்தத தீட்டுச் செயலால், இஸ்ரவேலர் திடுக்கிடவும், வாடிப்போகவும், தீட்டுப்படவும் நேரிடுமென் பதை அழுத்தமாக அறிவித்தான்.

iv முற்றுகையானோரின் முழுநாசம் 5 : 1 — 4 நடித்துக் காட்டப்பட்ட நான்கிலும், பயங்கரமானது இது. தலையைச் சிரைக்கலாகாதென இஸ்ரவேலுக்குக் கட்டளையுண்டு (லேவி. 19 : 27, 21 : 5, உபா. 14 : 1). கோபாக்கினையின் சின்ன மாக, முற்றும் நாசமாகும் என்பதன் அடையாளமாக, தலையும்,

தாடியும் சிரைக்கப்பட்டன. (ஏசா. 3 : 24, 7 : 20, 22 : 12, எரே. 16 : 6, 41 : 5, மீகா. 1 : 16) அழிவுக்கும், அழுகைக்கும் அடையாளமாக தீர்க்கரால்மொட்டையடிப்பது கூறப்பட்டது.

வச. 1. மொட்டையடித்து, மயிரைப் பங்கிடக் கூறுகிறார். எருசலேம் நகர் மொட்டைபோல் வெட்ட வெளியாகும்; அது மட்டுமல்ல, அவர்களின் கதி என்னவென்றுங் கூறப் போகிறார்.

வச. 2. மூன்றில் ஒரு பங்கு சுட்டெரிக்கப் படுவார்கள், மூன்றில் ஒருபங்கு பட்டயத்தால் வெட்டப்படுவார்கள், மூன்றில் ஒரு பங்கு சிதறடிக்கப்படுவார்கள், அவர்கள் பின்னே பட்டயம் பாய்ந்து செல்லும். எத்துணை பயங்கரமான அழிவு! பாவத்தின் பலனல்லவா.

வச. 3. என்றாலும் கொஞ்சப்பேர் மீந்திருப்பார்கள். அதற்கு அடையாளமாகக் கொஞ்சம் வஸ்திரத்தில் முடிந்து வைக்கப்பட்டது. இஸ்ரவேலிலே மீந்திருக்கும் கொஞ்சம் மக்களைப்பற்றித் தீர்க்கர் யாவருமே கூறியிருக்கின்றனர். மீந்திருக்கத்தக்கதாகத் தெரிந்து கொள்வது தேவனே (1 ராஜா 19 : 18). ஆயினும் மீந்திருப்பவரின் குணாதிசயங்கள் மேன்மையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது, பழைய ஏற்பாட்டில். பாவத்திற்குத் தண்டனையாக மக்கள் யாவர் மேலும் வந்த மாபெரும் தேசீய அழிவிலே, தேவனாலே மீதியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கூட்டம் இது. நோவா குடும்பத்தினர்போல் மீந்திருப்பவரின் நீதி மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது (ஏசா 4 : 2, ஒபதியா 17, செப் 3 : 13, எசேக் 9 : 4, 8). அவர்களுடைய விசுவாசம் மெச்சப்படுகிறது (ஏசா 10 : 20, 28 : 16). அவர்கள் ஏழைகள், சிறுமையும் ஆவியில் எளிமையுமானவர்கள் (11 ராஜா. 25 : 12, 22, எரே. 39 : 10; 52 : 16 செப். 3 : 12, ஏசா. 11 : 4). மீந்திருப்பவர்களாலேயே இஸ்ரவேலரின் வாழ்வு தொடர்ந்து நடைபெறுகிறது. ஆகையால் அவர்களுக்காக விண்ணப்பஞ் செய்ய வேண்டும். (ஏசா. 37 : 4, எரே. 42 : 2, சங். 79 : 11). பிரிந்து நிற்கும்

அவர்களுடைய பரிசுத்த தன்மையும்வலியுறுத்தப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட, மீந்திருக்கிற, பரிசுத்த, எளிய, சிறிய கூட்டத்தில் இருப்போர் பாக்கியர். எசே. 6 : 8 — 10, 9 : 8, 11 : 13, 17-ல் மீந்திருப்பவர் பற்றிக் காண்க.

வச. 4 மீந்திருக்குங் கொஞ்சக் கூட்டத்திலும் அழிவு ஏற்படும் என்கிறான். அக்கினியால் அது சுட்டெரிக்கப்பட்டு அதிலிருந்து அக்கினி இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் புறப் படும் என்பது, தேவனுடைய நியாயத் தீர்ப்பாகிய அக்கினி தேவனுடைய வீட்டிலே முதலாவது துவங்கும் என்பதைக் குறிக்கிறது (1 பேதுரு 4 : 17).

அடையாளங்கள் பற்றிய அறிவுரை 5 : 5—17.

வச. 5. எருசலேமைப் பல நாடுகளின் மத்தியில் அமைத்தது சிறப்பான நோக்கத்துடனேதான். வச. 6, 7. அவர்களுக்குக் கட்டளைகளையும், நியாயங்களையும் தேவன் கொடுத்தார். அவர்களோ அவைகளை அக்கிரமமாக மாற்றி, புற ஜாதிகளைப் பார்க்கிலும் நீதி கேடு செய்தனர்.

வச. 8. அவர்களை அதிகமாய் ஆசீர்வதித்தார். வச.11. பரிசுத்த ஸ்தலத்தையும் கொடுத்தார். ஆயினும் அவர்கள் தேவ நியமங்கள் பெறாத சுற்று நாடுகளை விடச் சீர்கெட்டு அக்கிரமம் அதிகஞ் செய்தனர். வச. 11. பரிசுத்த ஸ்தலத் தையும் தீட்டுப்படுத்தினர். ஆகையால் வச. 8, 11 பல நாட் டவர் பார்க்க, இஸ்ரவேலர் சிறுமைப்படுவர், குறுகிப்போவார் கள். தண்டனை பயங்கரமாகக் கூறப்படுகிறது. வச. 13. கர்த்தர் தம் வைராக்கியத்தினால் இந்தத் தீர்ப்புச் செய்வார். வச. 15. இஸ்ரவேலரின் பாவத்திற்கு வரும் பயங்கர விளைவு கண்டு பல தேச மக்கள் பயந்து எச்சரிப்படைவார்கள். தேவனே இதைச் செய்தாரென்று அறிந்து, அவரது பரிசுத் தம், வல்லமை, உண்மையை உணர்ந்துகொள்வர். உலகின் உப்பாக, ஒளியாக, சாட்சியாக வைக்கப்பட்ட தேவ மக்கள், சீர்கெட்டு நடப்பதால் ஏற்படும் தீங்குகள் சரித்திரத்தில் சாலக் கிடக்கின்றன. பல இனத்தவர் மத்தியில் தேவ மக்

கள் வைக்கப்பட்டிருப்பதால், அவர்களுக்குள்ள பெரிய பொறுப்புகளை உணர இப்பகுதி ஏவுகிறது. ஆதி. 13 : 7-ல் ஆபிரகாம், லோத்து இவர்களின் வேலைக்காரர் வாக்கு வாதத்தைக் குறிக்கும்போது, அங்குச் சுற்றியிருந்த பிற மக்களைக் குறிப்பிட்டிருத்தலைக் கவனிக்க.

ஆ. பாவ இஸ்ரவேல் பர்வதங்கள் பாழாகும் அதி. 6.

இஸ்ரவேல் நாடு மலைகளும், குன்றுகளும், பள்ளத்தாக்குகளும், ஓடைகளும் நிறைந்த நாடானதாலும், கர்த்தரை விட்டுச் சோரம்போனவர்கள் பர்வதங்களில் பாகால்களை வணங்கி வந்ததாலும், இப்பாரவார்த்தைகள் பர்வதங்களுக்கு எதிராகக் கூறப்படுகின்றன. ஏசா. 65 : 7, எரே. 3 : 6, ஓசி. 4 : 13 ஒப்பிடுக. எசேக்கியா, யோசியா அரசர்களின் சீர்திருத்தங்களால் பாகால் வணக்கம் ஒழியவில்லையெனத் தெரிகிறது (2 ராஜா. 18 : 4, 23 : 5). பாகால் வணக்கமானது விக்கிரகங்களை வணங்கவும், வேசித்தனம் பண்ணவும் ஏவினதுமன்றி, யெகோவாவின் வணக்கத்திலும் நுழைந்திருந்தது. தேசம் முழுவதுமே இவ்வித சோர, விக்கிரக வணக்கத்தில் ஈடுபட்டிருந்தது. வச. 5. ஆகையால் பகைவரின் படையெடுப்பில், அவர்களுடைய பிரேதங்கள், அவர்கள் வணங்கிய விக்கிரகங்களைச் சுற்றிலும்,பர்வதங்கள் மேலும் கிடக்கும். அதனால் அவ்விடங்கள் தீட்டாகும்.

இவ்வதிகாரத்தில் "நானே கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவீர்கள்," என 7, 10, 13, 14-ம் வசனங்களில் காணப்படுகிறது. எசேக்கியேல் தீர்க்க தரிசனத்தில் சிறப்பாக வரும் இச் சொற்றொடர், வேறு இடங்களில் சுமார் 60 முறை காணக் கிடக்கிறது. தேவ தண்டனையின் நோக்கம் கர்த்தரை அறிவதற்கே. தண்டனை பெறுபவர்களும், அதைக் காண்பவர்களும், ஏன், பின்னாட்களில் அதை வாசிப்பவர்களும் கர்த்தரை அறிந்துகொள்ளுவதற்கே. விக்கிரகங்களுக்கு முன் அவர்கள் விழுந்து மடிவதால், அவர்கள் நம்பி ஆராதித்த அவை வெறும் ஊமையான, உயிரற்ற சிலைகள்தாமென்றும்,

தேவனே ஜீவனுள்ள கர்த்தரெனவும் காட்டப்படுகிறது. வச.9. இவ்வாறு சோர இருதயம் உடைக்கப்படும். தண்டிக்கப் பெற்று மக்கள் சுத்திகரிக்கப்படுவார்கள். வச. 8, 9, 10. மீதியாயிருப்பவர்கள் தங்களைச் சுத்திகரித்துக் கொள்வார்கள். அழிவிலும் நம்பிக்கை, மனமடிவிலும் மனந் திரும்புதல் ஏற்படுகிறது. வச. 16, 17. நான்கு சாபங்கள். லேவியராகமம் 26-ல் சொல்லப்பட்ட பஞ்சம், துஷ்ட மிருகங்கள், கொள்ளை நோய், பட்டயம் ஆகிய நான்கு சாபங்கள் இஸ்ரவேல் மேல் வரும்.

இ. அழிவு அதிக சமீபம். அதி. 7.

முந்தின மூன்று அதிகாரங்களிலும் விவரிக்கப்பட்ட அழிவு இவ்வதிகாரத்தில் உச்சநிலையடைகிறது. முடிவு எத்துணை விரைந்து, தீங்கு எத்துணை தீவிரமாய் வருகிறதெனக் காட்டப்படுகிறது. வச. 2. தேசத்தின் நான்கு மூலைகள் மீதும் முடிவு வருகிறது. மனிதனோடு தொடர்பு கொண்டது பூமி. மனிதனுடைய மீட்பில் அதற்கு ஆசீர்வாதமும், மனிதனின் ஆக்கினையில் அதற்கு அழிவும் வரும் (ஆதி. 3 : 17, 4 : 12, ரோமர் 8 : 19—23). கர்த்தருடைய சினம் அக்கிரமக்காரர் மேல் வருவதை உணர்ச்சியுடன் சித்திரிக்கிறான். வச. 5, 6, 7 செய்யுள் நடையில் முதலாவது எழுதப்பட்டிருக்க வேண்டும். அடுக்கடுக்காக ஆபத்து கூறப்பட்டுள்ளது. நியாயத் தீர்ப்பின் நாள் அமளியின் நாள் என்றும் (வச. 8), கர்த்தரின் சினத்தின் நாள் என்றும் (வச. 19) கூறப்பட்டிருக்கிறது. கர்த்தரின் நாளைக் குறித்து எசே. 33 : 3, தானி. 12 : 1, யோவேல் 1 : 15, மல்கியா 4 : 1ல் காண்க. இப்பகுதியில் பல எபிரேயப்பதங்கள் விளங்குவதற்கரிதாயுள்ளன. வச. 11. இஸ்ரவேலரின் சமுதாய வாழ்வும், (வச. 12.) அவர்களின் வியாபார வாழ்வுங்கூட ஒழிந்துபோம். அழிவு உக்கிரமாயிருப்பதால் அழுவதற்கும் இடமில்லாதிருக்கும். வச. 13. அக்கிரமத்தில் வாழுகிறவனுடைய முடிவு அழிவு. வச. 14. விரோதி வருகையில் எக்காளம் ஊதி, ஆயத்தம் பண்ணினாலும், பட்டயம் எடுப்பாரில்லை. ஏனெனில்

வச. 15. பட்டயமும் பஞ்சமும் யாவரையும் வாரிக்கொள்ளும். வச. 18, 19 அவர்களுக்கு இடறலாயிருந்த அக்கிரமத்தின் பலன் அறிவிக்கப்படுகிறது. அழிவுநாளில், அவர்கள் விக்கிரகங்களாக்கியிருந்த, விக்கிரகங்கள்மேல் குவித்திருந்த, வெள்ளியும் பொன்னும் அவர்களை விடுவிக்காது. அவை வெறுப்புடன் எறிந்து விடப்படும். வச. 20—21 தேவஆலயமும் பரிசுத்த குலைச்சலாகும். வச. 23ல், சங்கிலியைப்பண்ணி வை என்பது மூலபதத்தில் தெளிவாயில்லை. இது வேறொரு அடையாள உரைக்காகக் கூறப்பட்டிருக்கலாம். வச. 25, 26 சங்காரம் வரும்போது சமாதானந்தேடி ஆவிக்குரிய வாழ்வின் தலைவர்களிடம் சென்றாலும், கிடைக்காது தரிசனஞ்சொல்லும் தீர்க்கன், வேதம் விளக்கும் ஆசாரியன், ஆலோசனை கூறும் மூப்பன், ஆகிய இம்மூவரிடமும் சமாதான செய்தி இராது. அவர்களும் அழிவார்கள். வச. 27 ராஜா, பிரபு, ஜனங்கள் ஆகிய மூன்று பிரிவினராகிய தேசீய வாழ்வின் கூட்டத்தார் மேலும் ஆக்கினைவரும். இஸ்ரவேலின் ஆவிக்குரிய வாழ்வும் தேச வாழ்வும் படப்போகிற பாடுகள் இவை.

ஈ. இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனையும், தேவமகிமை தூரமாதலும் அதி. 8 — 11

எட்டாம் அதிகாரத்தில் நான்கு தரிசனங்கள் கூறப்பட்டிருக்கின்றன. எசேக்கியேலுக்கு முதலாவது அருளப்பட்ட தரிசனங்களுக்கு (1 : 1), 14 மாதங்கள் கழித்து இவை அருளப்பட்டன (8 : 1). எசேக்கியேல் சிறையிருப்பில் இருக்கையில், இத்தரிசனங்களால் எருசலேம் ஆலயத்தில் நடந்த அருவருப்பான விக்கிரக ஆராதனைகளைக் கண்டான். தீர்க்கன் ஆவியில் மாற்றுநிலைக்குச் சென்ற பரவச அனுபவம் படிப்படியாகக் கூறப்பட்டுள்ளது. வச. 1 கர்த்தரின் கரம் அவன்மேல் அமர்ந்தது; வச. 2 அக்கினிச்சாயலான ஒருவருடைய தோற்றம் அவனுக்குக் காணப்படுகிறது; வச. 3 கைபோலக் காணப்பட்டதால், அவன் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி, வானத்துக்கும் பூமிக்கும் நடுவே கொண்டு போய் எருசலேம் ஆலயத்தில் விட்டார். தான் சரீரத்தோடு

அங்கு போனதாக அவன் கூறவில்லை. பவுல் அப்போஸ்தலன் II கொரி. 12 : 1 — 3 வசனங்களில் மூன்றும் வானம் வரைக்கும் எடுக்கப்பட்ட பரவச அனுபவத்தினை இதோடு ஒப்பிட்டு அறியலாம். எசேக்கியேல் தீர்க்கனைத் திரும்பவும் ஆவியானவர் எடுத்துச்சிறைப்பட்டுப் போனவர்களிடத்திலே கொண்டுபோய் விட்டார் என்று 11 : 24 ல் எழுதப் பட்டுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகளிலே, பிலிப்புவைத் தேவ ஆவியானவர் கந்தாகேயின் மந்திரிக்கு மறைவாகக் கொண்டுபோய், ஆசோத்திலே விட்டதை ஒத்து நோக்குக (அப். 8 : 39). இவ்வித அனுபவங்கள் மனித கற்பனைக்குப் புறம்பானவை, மனதத்துவ விளக்கத்திற்கு அப்பாற் பட்டவை. ஆவியானவர் அருளுகிற, ஆவிக்குள்ளான மாற்று நிலையே இது. சரீரமும் இதில் பங்கு பெறலாம், அல்லது ஆவி மட்டும் பங்கு பெறலாம், சரீரம் முன்னிருந்த இடத்திலே இருக்கலாம் என்று காணப்படுகிறது.

எசேக்கியேலுக்கு அருளப்பட்ட ஆவிக்குரிய தரிசனத்தில் அவன் கண்ட அருவருப்புகள், இஸ்ரவேல் மீது தேவகோபமும் எருசலேம் அழிவதும் சரியானதே என்பதை வலியுறுத்தின. தேவன் அருவருக்கிற நாள், நிமித்தம், குறி இவற்றைப் பார்க்கிற கிறிஸ்தவமக்கள், இரண்டு நினைவுகளால் இன்னமும் குந்திக் குந்தி நடப்பவர்கள், முதலானோர் அறியவேண்டிய வலுவான சத்தியம் இது.

1. வடதிசையிலிருந்த விக்கிரகம் 8 : 1 — 6.

வச. 1. தரிசனங்கண்ட காலம் — கி. மு. 592 ஆகஸ்டு — செப்டம்பர் மாதம், 5ம். தேதி. வச. 3 பிற்பகுதியில் குறிக்கப்பட்ட எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் என்னவென அறிவோம். அதை உண்டுபண்ணினவர்களுக்கல்ல, தேவனுக்கு அது எரிச்சலுண்டாக்குகிறது. ஒருவேளை பலிபீடத்தண்டை வைக்கப்பட்ட திருஸ்தம்பமாக (அஷேரா) இருக்கலாம் (உபா. 16 : 21). தேவன் விக்கிரக வணக்கத்தை

எத்துணை வெறுக்கிறார் (உபா. 32 : 21, யாத். 20 : 5). ஏனெனில் விக்கிரக வணக்கம் தேவனைவிட்டுத் தூரப்போகச் செய்யும், தேவனை நம்மைவிட்டுத் தூரமாக்கிவிடும் (வச. 6), ஒழுக்க மற்ற நடத்தையை நம்மில் உண்டாக்கிவிடும்.

2. ஊரும் பிராணிகள், மிருகங்களான விக்கிரகங்கள் 8 : 7 — 14.

இந்த வணக்கம் இரகசியமாக நடந்தது. வச. 7 — 9. சுவரில் துவாரமிட்டுப் பார்க்கத் தேவன் கூறுகிறார். வச. 10. அருவருப்பான சித்திரங்கள் சுவரில் தீட்டப்பட்டிருக்கக் கண்டான். வச. 11. மூப்பர் 70 பேருடன் யசனியா தூபமிட்டு இந்தக் கொடிய அருவருப்பான இரகசிய வணக்கத்தில் ஈடுபட்டிருந்தான். யசனியாவின் தகப்பன் சாப்பான், முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யோசியா அரசன் காலத்தில் சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தவன் (II ராஜா. 22 : 8 பி). வச. 12. கர்த்தர் கைவிட்டார் என்று வேறு விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணினர் (ஏசா. 29 : 15). தகப்பனுடைய பக்தியும், மகனுடைய அக்கிரமமும் கவனிக்கத் தக்கவை. அந்தரங்கத்திலிருக்கும் அக்கிரமத்தையும் கர்த்தர் காண்கிறார்.

3. தம்மூஸ் வணக்கம் 8 : 14, 15.

விக்கிரக வணக்கத்தில் பெண்களும் பங்குபெற்றனர், தம்மூஸ் பாபிலோனிய விக்கிரகம், இது தாவரங்களின் தேவன் என்றும், வெயில் காலத்தில் தாவரங்கள் வாடிவதங்குகையில், அது மாண்டுவிட்டதெனவும் மாரடித்துப் புலம்புவார்கள். அவர்களுடைய கண்ணீர் மழையைப் பெய்யப் பண்ணும் மந்திரவசியமுடையதென எண்ணினர். இஷ்தார் எனும் தேவதை இறந்து பாதாளத்துக்குச் சென்ற தம்மூசை உயிர் பெறச் செய்து கொண்டு வந்தாளென்பது கதை. ஆகையால் பெண்கள் இவ்வணக்கத்தில் ஈடுபட்டனர். தம்மூஸ் வணக்கம் பல ஒழுக்கக்கேடுகளுக்கு இடமளித்த இயற்கை வணக்கமாகும். நாலாம் மாதம் இவ்வணக்கக் காலமாதலின் அது தம்மூஸ் மாதமென அழைக்கப்பட்டது.

4. சூரிய வணக்கம் 8 : 16 — 18.

மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே ஆசாரியர்கள் நின்று, மகாபரிசுத்தஸ்தலத்தை நோக்கி ஆராதனைகள் நடத்து வார்கள். தேசீய அபாயகாலத்தில், இவ்விடத்தில் நின்று அழுதுஜெபிக்கத் தீர்க்கன் யோவேல் ஆலோசனை கூறினன் (யோவேல் 2 : 17). இங்கேயோ 25பேர் மகாபரிசுத்தஸ்தலத் துக்கு முதுகுகாட்டி, கிழக்கே நோக்கி, சூரியவணக்கஞ் செய் தனர் (வச. 16). யோசியா ஒழித்த சூரிய வணக்கம் (2 ராஜா. 23 : 11), மறுபடியும் தலைதூக்கியது. வச. 17 திராட்சக்கிளையை நாசிக்குநேராகப் பிடித்தல், பாபிலோனியா பாரசீக சடங்காச்சாரத்திற்கு ஒப்பானதாகும். தேவனுக்கு முதுகைக் காட்டினதுமன்றி, தேசத்தைக் கொடுமையால் நிரப்பினர்கள். ஆசாரியர், மூப்பர், பெண்கள், மக்கள் யாவருமே விக்கிரகாராதனையில் ஈடுபட்டனர். வச. 18. ஆகையால் தேவன் உக்கிரகோபம் கொண்டு அவர்களைத் தப்பவிடாமல் அழிப்பார். இரங்கமாட்டேன், செவிகொடுக்க மாட்டேன் என்பதை அறியும்போது, நாம் எச்சரிப்படைய வேண்டும்.

பாவிகளைத் தப்பவிடாத தண்டனை. அதி. 9.

தப்பவிடாமலும், இரங்காமலும் சங்கரிக்கும்படி நகர விசாரிப்புக்காரராகிய தூதர்களுக்குக் கட்டளையிடுகிறார்.

ஆயுதங்களைப் பிடித்த ஆறு பேர் மைக்கூட்டை வைத்திருந்த ஒருவன், ஆக ஏழு பேர், வெளி. 8 : 2—6லும் ஏழு தூதர்கள், எக்காளம் ஊதி அழிவை அறிவித்து, நடப்பிப்பதைக் காண் கிறோம். இத்துணை கேடுபாடுள்ள இஸ்ரவேலிலும், அதன் அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சுவிடுகிற மக்களும் இருந் தனர் (வச. 4). அவர்கள் அடையாளமிடப்பட்டு, மீட்கப் பட்டனர். (யாத். 7 : 23, வெளி. 7 : 3—8, 13 : 16—18, 14) அடையாளமிடப்பட்டு மீட்கப்பட்டவர்களைப்பற்றி மேற்காட் டும் பகுதிகளில் கூறப்பட்டுள்ளதை ஒத்துக் காண்க.

வச. 1. விசாரிப்புத் தூதர்களே சங்காரத் தூதர்களாக் கப்படுகின்றனர். அழித்தவர்கள், சங்கரித்தவர்கள் பாபி லோனியரல்ல, அதற்கு முன்னரே சங்காரத் தூதர்கள் சங்க ரித்துவிட்டனர். தேவன் ஒப்புக்கொடுத்திராவிடில், அழிவு ஏற்பட்டிராது.

வச. 4. நெற்றிகளில் "அடையாளம் போடு" என்ப தன் மூல வார்த்தையாகிய எபிரேய மொழியில், அந்த எழுத் துச் சிலுவை போன்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வச. 6. அடையாளமிடப்பட்டவர்கள் ஆபத்திற்குத் தப்பினர். சங்காரம் பரிசுத்த ஸ்தலத்தில் மூப்பரிடம் துவங் கிற்று (1 பேது. 4 : 17). இரங்காமலும், தப்பவிடாமலும் நிறைவேற்றப்பட்ட சங்காரம் நமது கற்பனைக்கு விடப்படு கிறது.

வச. 8. அதைக் கண்ட தீர்க்கன் முகங்குப்புற விழுந்து மன்றாடுகிறான். பக்தர் பரிந்து பேசியும் பாவத்தின் தண் டனை நிறுத்தப்படுவதில்லை (1 சாமு. 16 : 1). வச. 9, 10. தேவனுடைய பதில், மீதியான உண்மையுள்ள ஒரு சிறு கூட்டத்தார் அருவருப்புகளினிமித்தம் அழுது புலம்புவோ ராய், பாகாலுக்கு முன் பணியாத பரிசுத்த கூட்டமாயிருப்பர். நான் அதில் உண்டா என்பதே தலையாய கேள்வி.

எருசலேம் எரிக்கப்பட்டது. அதி. 10.

தேவதண்டனை பாவிகளைத் தப்பவிடவில்லை. அவர்கள் நகரமும் எரிக்கப்படும் என்று அடையாளம் கொடுக்கப் பட்டது. பரிசுத்த ஆலயத்தோடும், பரிசுத்த நகரத்தோடும் எப்போதும் இணைத்துக் கூறப்பட்ட பரிசுத்த தேவன், அந் நகரைக் கைவிடவே மாட்டார் என இஸ்ரவேலர் எண்ணியிருந் தனர். அவரே அக்கினியால் நகரை அழிக்க ஆணையிட்டார் என்பது மட்டுமல்ல, அவர் தேவாலயத்தையும், நகரையும் விட்டுப் போய்விடுவார் என்பது இவ்வதிகாரத்தின் கருத்து. வச. 1. சிங்காசனம் வெறுமையாயிருக்கிறது. அதி. 9:3-ல்

ஆலயத்திற்குச் சென்ற தேவனுடைய மகிமை திரும்பிவரச் சிங்காசனம் காத்திருக்கிறது.

வச. 2. முந்தின அதிகாரத்தில், மீந்திருப்பவர்கள் மேல் அடையாளமிட்ட சணல் நூல் உடை தரித்த புருஷனுக்கு வேறொரு கட்டளை அருளப்படுகிறது. இந்த ஏழு தூதர்களும் ஆக்கினை நிறைவேற்றும் தூதர்களாவர் (வெளி 8:1-9 : 15). அவன் அக்கினியை எடுக்க உள்ளே சென்றான். வச 7. அவன் அக்கினியைக் கேரூபினிடமிருந்து பெற்றான். நகர்மேல் இறைத்த காட்சி கூறப்படவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது கி. மு. 586-ல், பாபிலோனிய சேனை எருசலேமை இடித்து எரித்தபோது. ஆனால் தேவன் இதை முன்னே செய்ததாலே, எருசலேம் எரிக்கப்பட்டது. (2 ராஜா 25 : 9). "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" என்று நமதாண்டவர் பிலாத்துவிடங் கூறினார். (யோ. 19:11). அதுபோலவே எருசலேமின் மேல் அதிகாரங் கொடுத்தது தேவனே.

வச. 9-22 முதலாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட தேவ தரிசனம் மறுபடியும் கூறப்படுகிறது. மூலத்தில் இப்பகுதியில் சிக்கலான பல இடங்கள் இருக்கின்றனவெனப் பண்டிதர் கூறுகின்றனர். தமது மக்கள் மத்தியில் மகிமையுடன் தங்கியிருந்த தேவன், அவர்கள் துரோகத்தினிமித்தம், அவர்களைச் சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டு, வச. 18. அவர் மகிமையின் பிரசன்னம் ஆலயத்தைவிட்டு அகலச் செய்கிறார். பின்னர் அதி. 11:22,23-ல் தேவ மகிமை தேசத்தைவிட்டே சென்றுவிட்டதை வாசிக்கின்றோம். தேவன் தேசத்தின் தீட்டைச் சுத்திகரிப்பதை அறிவதுமன்றி, பாவத்தை மனதாரவிரும்பித் துரோகஞ் செய்யுமிடத்தில் அவர் தங்குவதில்லையென்பதையும் இப்பகுதி உள்ளங்கை நெல்லிக்கனிபோல எச்சரித்தறிவிக்கிறது.

எருசலேமில் எதிர்த்து நிற்பவர்களுக்கு அழிவு: 11 : 1—13.

சிறையிருப்பிற்குச் சென்றவர்களுக்கு, அங்கு வீடுகட்டி, தோட்டங்களை நாட்டி வாழும்படி எரேமியா ஆலோசனை

கூறினன் (எரே. 29:4,5). ஆயினும் எழுபது ஆண்டுகளில் அவர்களைத் திருப்பிக் கொண்டு வருவோம் என்று தேவன் வாக்குக் கொடுத்ததையும் அறிவித்தான் (எரே 29 : 10), எருசலேமில் இருந்தவர்கள் பாபிலோனுக்கு அடங்கி வாழக் கூறினன் எரேமியா. இக்கருத்துக்களை இப்பகுதியில் எசேக்கியேலும் கூறுகிறன். ஏனென்றல் எருசலேமிலிருந்த 25 அதிபதிகள் அக்கிரமசிந்தையுடன், அபத்த ஆலோசனை பண்ணுவதை ஆவியில் தீர்க்கன் அறிந்தான். அதிபதிகளின் ஆலோசனை தேசபக்தி யுள்ளது போலவும், தீர்க்கனின் தேவ வாக்கு தேசத்துரோகம் போலவும் மேற்பரப்பில் காணப்படலாம். ஆனல் தேவநீதியில் நிலைத்திராத தேசபக்தி வீண் என்பது சரித்திரம் திரும்பத் திரும்பக் கூறும் சத்தியம்.

வச. 1, 2. ஆவியானவர் எசேக்கியேலுக்கு அதிபதிகளையும், அவர்கள் அபத்தமான துராலோசனை செய்வதையும் காட்டுகிறர்.

வச. 3. இதன் முதற்பாகம் தெளிவாயில்லை. வீடுகளைக் கட்டாமல் யுத்தத்திற்கு ஆயத்தமாவோம் என்று இதற்கு விளக்கங் கூறலாம்: அல்லது மூலபதத்தின் சில வேறுபாடுகளுடன், முன் அழிக்கப்பட்ட இடங்களில் புதிய வீடுகளைக் கட்டிவிட்டோமே என்றும் திருப்பலாம்.

வச. 3. பின்பாகம், பானைக்குள் இருக்கும் இறைச்சி போல, வெளியே அக்கினி எரிந்தாலும் எருசலேமுக்குள் இருக்கிற நாங்கள் தப்புவோம் என்று பொய்யான பாதுகாப்பின் வார்த்தைகளைக் கூறினர். ஆனல் வச. 7, 10-ல் நீங்கள் தப்புவதில்லை. உங்களைப் புறம்பே எறிந்துவிடுவேன் என்று தேவன் கூறினர். அவர்களால் கொலை செய்யப்பட்டு எருசலேமின் வீதிகளில் நிரப்பப்பட்டவர்கள் மட்டுமே தப்புவார்கள் என்கிறன் தீர்க்கன் வச. 13. இச் செய்தி அறிவிக்கப்படும்போதே சதிகாரரில் ஒருவனன பெலத்தியா செத்தான். எசேக்கியா அவர்களுக்காக முகங்குப்புறவிழுந்து விண்ணப்பஞ் செய்தான் (எசே. 9:8). இப்பகுதியின் நிறை

வேறுதல் 2 இராஜா. 25:18-21-ல் காணப்படுகிறது. ரிப்லாவுக்கு அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர்.

வாக்குத்தத்தங்கள் :- 11:14-25.

சிறைப்பட்டுப்போனவர்களுக்கு தேவன் ஏழு வாக்குத்தத்தங்கள் அருளுகிறார். வச. 16 சிறைப்பட்டுப்போன இடத்திலும் அவர்களுடன் இருப்பேன் எனத் தேவன் கூறுகிறார்.

வச. 17. சிதறடிக்கப்பட்டவர்களைச் சேர்த்து, கூட்டிக்கொண்டு வந்து, இஸ்ரவேல் தேசத்தைக் கொடுப்பேன் எனும் மூன்று வாக்குகள், அவர்களை மறுபடியும் நிலைப்படுத்துவதை அறிவிக்கின்றன.

வச. 18. அதைக் கண்டு மக்கள் அருவருப்புகளை அகற்றிவிடுவார்கள்.

வச. 19. பின்னர் தேவன் அவர்களுக்கு ஏக இருதயம் ஈந்து, புதிய ஆவி கொடுத்து, கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தைக் கொடுப்பார் என்று நான்கு வாக்குகள் அருளப்பட்டன. (எசே. 36:25-27, எரே. 32:39,40).

வச. 20. இவ்விதமாய்த் தண்டித்து, சீர்திருத்தி, திரும்ப நிலை நிறுத்தி, ஆவி அருளுவது "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" எனும் உயிருள்ள தேவன் மனிதன் உறவு ஏற்படுவதற்காகவே (வெளி. 21:3).

வச. 21. எருசலேமில் எதிர்த்து நிற்பவர்களோ கைவிடப்படுவார்கள்.

வச. 22—24. நகரத்தைவிட்டு நீங்கிய தேவ மகிமை, தேசத்தையும் விட்டு அகன்றது. அதி. 43:24-ல் மகிமை திரும்ப வரும்வரை, அதைக் காண இயலாது. இனி நாட்டிற்

கும் ஆலயத்திற்கும் நம்பிக்கையில்லை. ஆனால் சிறையிருப்பில் மீந்திருப்பவர்களுக்கோ நம்பிக்கையுண்டு. தேவமகிமை ஒலிவ மலையில் போய் நின்றது.

(வச. 23.), ஒலிவமலையில் இயேசுக்கிறிஸ்து பரலோகத் திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (லூக். 24 : 50,51), கடைசி நாட்களில் ஒலிவமலையில் தேவனுடைய பாதம் நிற்பது (சகரியா. 14:4) ஒத்து ஆராயற்பாலது.

2. சிறையிருப்பு சீக்கிரமே வரும் அதி. 12—14.

இஸ்ரவேலர் தீர்க்கதரிசனத்தை நம்பினார்கள். தீர்க்கர் கூறுவதைக் கேட்க விரும்பினார்கள். அவர்களிடஞ் சென்று விசாரித்தார்கள். ஆனால் தங்களுக்குப் பிரியமில்லாத செய்திகளைத் தீர்க்கர் கூறினபோது அவற்றை அசட்டை பண்ணினார்கள். அச்சமயங்களில் மக்களைப் பிரியப்படுத்த இதமான ஆனால் பொய்யான வார்த்தைகளைக் கூறின வஞ்ச கத்தீர்க்கர் எழும்பினார்கள். இப்பகுதியில் கடினமான, கலக்கந் தருகிற தேவ செய்தியை எசேக்கியல் கூறுவது மட்டுமின்றி நடித்துங் காட்டுகிறான். எனினும் மக்கள் மனந்திரும்பினா ரில்லை. இந்நிலை நமது சபைகளிலுங் காணப்படுகிறதன்றோ. ஆவலாக ஆலயம் வருகிறார்கள், ஆராதிக்கிறார்கள். ஆனால் ஆண்டவர் வசனத்துக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படி வதில்லை.

1. நாட்டை விட்டோடுவது நடித்துக் காட்டப்பட்டது 12 : 1—20

வச 1,2. கண்களிருந்தும் காணாமல், காதுகளிருந்தும் கேளாத கலகக்காரருக்குக் கர்த்தர் கட்டளையிட்ட அடை யாளம். இவ்வித கடினமனமுடையவர் பற்றி ஏசா. 6 :9 மத். 13 : 13, யோ. 12 : 40, அப். 28 : 26, 27, ரோமர், 11 : 8, 2 கொரி. 3 : 14-ல் அறியலாம். வச, 3-6 இஸ்ரவேலருக்கு அடையாளமாக்கப்பட்ட எசேக்கியேல், அவர்கள் கண்கள் முன்பாக, திருட்டளவாய்த் தப்பியோடுகிறவனைப் போல, மூட்டை கட்டி, சுவரில் துவாரமிட்டு ஓடுகிறான். வச. 6.

பின்பகுதியில், "முகத்தை மூடிக்கொள்" என்பது, ரிப்லாவில் வைத்து அரசனுடைய கண்கள் குருடாக்கப்பட்டதைக் குறிக்கலாம். (2 இராஜா. 25 : 5—7).

வச. 7—15. அடையாளஞ் செய்து காட்டி, அதைக் கேட்டவர்களுக்குச் சிறைபிடிப்புப் பற்றித் தெளிவாகக் கூறு கிருன். இதில் சந்தேகமே வேண்டாம் என்று எச்சரிக்கிருன். வச. 12, எசேக்கியேல் செய்ததை விடக் கேவலமான நிலைமையில் அதிபதி சிதேக்கியா தப்பி ஓடுவான். இது நிறைவேறினதை 2. இராஜா. 25, 3, 4-ல் காணலாம்.

வச. 16. என்ருலும் மீந்திருப்பவர் பற்றிய வாக்கு கொடுக்கப்படுகிறது,

வச. 17—20. அடுத்த அடையாளம் நடுக்கத்தோடு அப்பம் புசித்து, தத்தளிப்புடன் தண்ணீர் குடித்தது. முற்றுகை, சிறையிருப்பு இவற்றின் சிறுமையைக் காட்டு கிறது. "நான் கர்த்தர் என்று அறிந்துகொள்" என்று வச. 15,16,20-ல் கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

2. தீர்க்கதரிசனத்தைப் பற்றிய தவருன கொள்கைகளின் அறிவீனம் 12 : 21—14 : 11.

இப்பகுதியில் தீர்க்கத்தரிசனத்தைப் பற்றிய ஐந்து திருவுரைகள் காணப்படுகின்றன. உண்மையான, பொய் யான தீர்க்கத்தரிசனங்கள், அவற்றை மக்கள் ஏற்றவிதம், அதன் பலன் இவை திட்டவட்டமாய்த் திரும்பத் திரும்ப அறிவிக்கப்படுகின்றன. இரு வழிகளில் மக்கள் தங்களையே ஏமாற்றிக் கொண்டனர் — முதலாவதாக மெய்த் தீர்க்கத் தரிசிகளையும் அவர்கள் திருவாக்கையும் அசட்டை செய்தனர். இரண்டாவதாக, கள்ள, வஞ்சக, இச்சக தீர்க்கத்தரிசிகளுக்கு இணங்கினர். இக்குறை அன்றுபோல இன்றும் மக்களிடை மலிந்து கிடக்கிறது.

வச. 12 : 21—25. முதல் உரை. நாட்கள் நீடிக்கும். தரிசனம் அவமாகும் என்று பழமொழி கூறி, தீர்க்கதரிசனம்

நிறைவேருது என்று இறுமாந்திருந்தனர் இஸ்ரவேலர். பின்னுட்களில் இவ்வித மக்கள் எழும்புவார்களென 2 பேதுரு. 3 : 4-ல் காண்கிருேம். வச. 24. இவ்விதம் மக்கள் கூறினதால், அவர்கள் மன துக்கிசைய முகஸ்துதியான குறிசொல்லக் கள்ளத்தீர்க்கர் எழும்பினர். வச 25· ஆகையால் பழமொழியும், கள்ளத் தீர்க்கரும் ஒழிய, அழிவை அறிவித்தது மட்டுமல்ல அதை நிறைவேற்றுவேன் என்ருர் கர்த்தர். நோவாவின் நாட்கள் போல, லோத்தின் காலம் போல எப்போதுமே மக்கள் எச்சரிப்பை அசட்டை செய்கின்றனர்.

வச. *12 : 26...28.* இரண்டாம் உரை. காலதாமதமின்றி, உங்கள் நாட்களிலே அழிவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்கிருர்.

வச. *13 : 1—16.* மூன்ரும் உரை. மெய்யான தேவ வாக்குகளே அசட்டைபண்ண அடுத்த காரணம் கள்ளத் தீர்க்கர்களின் பொய்ப் போதனைகள். தீர்க்கன் எரேமியாவுக்குக் கள்ளத் தீர்க்கரோடு கடும் போராட்ட மிருந்தது. (எரே. 5 :30, 31, 14 : 13-18, 23 : 9-40, 29 : 8-10, 21-23). தீர்க்கரின் உண்மையைப் பரிசோதிக்க உபாகமம் 13 : 1—5, 18 : 21, 22 காண்க. ஆண்டவர் மத். 24 : 11, 24-ல் விடுத்த எச்சரிப்பையும் ஒத்திடுக. கள்ளத் தீர்க்கர்கள் எப்படிப்பட்டவர்களென இப்பகுதியில் எசேக்கியேல் கூறுகிருன். அவர்கள் வச. 2. தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே சொல்லுகிறவர்கள், வச. 3. தரிசியாயிருந்தும் தங்களுடைய ஆவியைப் பின்பற்றுகிற மதிகேடர், வச. 4. நரிபோன்ற தந்திரக்காரர், வச. 5. இஸ்ரவேலருக்காக எதுவும் செய்யாதவர்கள், வச. 6, 7. கர்த்தர் கூருதிருந்தும், கர்த்தர் அனுப்பினுரென்று பொய் கூறுகிறவர்கள், வச. 10, 16 சமாதானமென்று மக்களே மோசம் போக்குகிறவர்கள். நம் நாட்களில் பல நூதனமான கள்ளப் போதகங்கள் மலிந்து கிடக்கின்றன. கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருப்போம். உத்தம ஊழியரைப் பற்றி அப்போஸ்தலன் போதித்தது, "அநேகரைப் போல நாங்கள் தேவ வசனத்தைக்

கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனுல் அருளப் பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்'' (2 கொரி. 2 : 17).

வச. 17—23. நான்காம் உரை. கள்ளத் தீர்க்கத்தரிசி களுக்குக் கடும் எச்சரிப்புக் கொடுக்கப்படுகிறது. தேவ னுடைய ஊழியத்தில் பெண்கள் எடுத்த பங்கு வேதாகமம் முழுவதும் மேன்மையாகக் கூறப்பட்டுள்ளது. இப்பாகத் திலோ கள்ளத் தீர்க்கத்தரிசினிகளின் குணங்கள் கூறப்பட்டு, ஆக்கினை அழிக்கப்படுகிறது. அவர்கள் வச. 18. அந்தந்த வயதுடையவர்களுக்கு ஏற்ற தாயத்துத் துணிகளை உண் டாக்கி, அவர்கள் ஆத்துமாக்களை வேட்டையாடும் சுயநலப் பிரியர், வச. 19. அற்ப ஆகாரமான கூலிக்காகப் பொய் சொல்லுகிறவர்கள், வச. 22. நீதிமான்களின் இருதயத்தை மனமடியப்பண்ணி, துன்மார்க்கருடைய கைகளைத் திடப் படுத்துகிறவர்கள். வச. 18, 20, 21-ல் தமுவணை, தலையணை என்பது கைகளில் தாயத்துப் போலக் கட்டப்பட்ட துணி யாகவும், தலையில் கட்டி நீளமாகத் தொங்கவிடப்பட்ட துணி யாகவுமிருக்கலாம். கள்ளத் தீர்க்கதரிசிகள், தீர்க்கதரிசினி கள் மேல் தேவதண்டனை கடுமையாய் இருக்குமென எச்சரிப் புக்கள் ஏராளமாய் கொடுக்கப்பட்டன.

வச. 14 : 1—11. ஐந்தாம் உரை. இஸ்ரவேலரின் மூப்பரில் சிலர் தீர்க்கனிடம் விசாரிக்க வருகின்றனர். வஞ்சகரான அவர்களுக்குக் கடினமான எச்சரிப்பு கொடுக் கப்படுகிறது. தன் அருவருப்பை விட்டுத் திரும்பாமல், கர்த்தரிடம்விசாரிக்கவருகிறவர்களைத் தேவன் அழிப்பேனென் கிறார். சங். 66 : 18-ல் அக்கிரம சிந்தை கொண்டிருப்பவன் ஜெபத்தைத் தேவன் கேட்கமாட்டார் என்பதையும், தேவ னிடத்தில் சொல்லுகிறவர்களின் மனநிலை மனந்திரும்பின தாக இருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவதையும் ஜெபிக்கிற யாவரும் நன்கு உணரவேண்டும். மூப்பருடைய பாவங்கள், வச. 2, 3. நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தில் நாட்டி, அக்கிரமமாகிய இடறலைத் தங்கள்

முகத்துக்கு நேராக வைத்து, வச. 5. தேவனை விட்டுப் பேதலித்துப் போனவர்கள் (வச. 5). அவர்களுக்கும், அவர்கள் விசாரித்த கள்ளத் தீர்க்கருக்கும் தண்டனை ஏன் என்று வச. *11* கூறுகிறது — இஸ்ரவேல் எச்சரிப்படைய, இனி வழிதவருதிருக்க, தேவனுடைய மக்களாய் வாழுவதற்கே.

3. நியாயத் தீர்ப்பிற்கு நியாயமான காரணம் 14 : 12—23.

வச. *13.* "தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணிக்கொண்டேயிருந்தால்" அதற்கு நாசம் வரப் பண்ணுவார். இஸ்ரவேலரைப் போல மீட்பு பெற்றவர், அன்பு பெற்றவர், தேவப்பிரமாணங்கள் பெற்றவர், தீர்க்கரைப் பெற்றவர் எச்சரிக்கப்பட்டும் பாவத்திலே நிலைத்திருந்தால், தண்டனை பெறுவது நியாயமல்லவா? தண்டனை பெருதிருந்தால்தான் அது உலக நீதியும் தேவ நீதியுமாகா. ஆகவேதான் இத்தனை பெரிய இலவச, அன்பின் ஆதாரமான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றவர் மேல் வருங் கடின தண்டனை எபி. 2:4-ல் கூறப்பட்டுள்ளது. தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள ஆள் சம்பந்தத்தை அகற்றிவிடுகிற தன்மை பாவத்தில் இருப்பதால் தான் அதைத் துரோகமென்கிறார்.

இப்பகுதியில் நாம் கவனிக்க வேண்டிய ஒரு பொதுவான தேவப் பிரமாணம், சிலருடைய நீதியினுலோ, ஜெபத்தினுலோ துன்மார்க்கர் மேல் கூறப்பட்ட தண்டனை குறைக்கப்பட மாட்டாது. சோதோமுக்காக ஆபிரகாமும் (ஆதி. *18*), இஸ்ரவேலருக்காக மோசேயும் (யாத். *32*), சாமுவேலும் (*1* சாமு. *12*) விண்ணப்பஞ் செய்ததை நினைவுகூர்ந்திருப்பார்கள். அதே போல நோவா, தானியேல், யோபு இம் மூன்று பரிசுத்தர் அவர்கள் மத்தியிலிருந்து மன்ருடினுலும், தண்டனைக்குத் தேசம் தப்பாது. இந்த ஜனங்களுக்காக விண்ணப்பஞ் செய்ய வேண்டாமென்று எரேமியாவுக்குச் சொல்லப்பட்டது (எரே. *7 : 16, 15 : 1—4*). நான்குவித ஆக்கினை கூறப்படுகிறது— வச. *13*, பஞ்சம், வச. *15, 16*. துஷ்ட மிருகம், வச. *16. 18*. பட்டயம், வச. *19, 20*. கொள்ளை நோய். ஒன்றல்ல நான்கு

அழிவுகள் வரும். தனித்த மனிதரின் பொறுப்பும் இப் பகுதியில் வலியுறுத்தப்படுகிறது. வச. 14, 16, 18, 20-ல் அந்த மூன்று புருஷரும் தாங்கள் மாத்திரமே தப்புவார்களே யல்லாமல், தங்கள் குமாரரையாகிலும், குமாரத்திகளையாகிலும் தப்புவிக்கமாட்டார்களென தேவன் தம் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார். தனித்த மனிதனின் பொறுப்பு 18-ம் அதிகாரத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நோவா தானியேல், யோபு இம்மூவருடைய சரிதைகளை மக்கள் அறிந்திருக்க வேண்டும். தானியேல் சிறைக்கு வந்து 16 வருடங்களாயிருக்கும். அவனது பரிந்து பேசும் ஜெபமும், பக்தி வாழ்க்கையும் சிறையிருப்பில் பிரபலமாயிருக்கலாம். ஆயினும் பண்டிதர் சிலர், தானியேல் என்று இங்கு கூறப்படுவோனும் எசே. 28 : 3-ல் ஞானவானாகக் கூறப்படும் தானியேலும், கி. மு. 1200 ஆண்டுக்கு முன் வரையப்பட்ட ராப்ஷம்ரா ஏடுகளில் காணப்படும் புகழ் பெற்ற தானியேல் என்று கூறுவர். வச. 22, 23-ல் தண்டனை கொடுத்ததின் வேறொரு நியாயம் கூறப்படுகிறது. தப்பி மீந்தவர்களின் சீர்திருத்திய, பரிசுத்த மார்க்கத்தையும், கிரியைகளையுங் காணும்போது, தேவன் முகாந்திரமில்லாமல் செய்யவில்லை என்பதை அறிவீர்கள்.

ஊ. எருசலேமின் இருதயம் அதி. 15—19.

உருவகக் கதைகளால் எருசலேமின் திருக்குள்ள இருதயம் படம் போலக் காட்டப்படுகிறது. இஸ்ரவேலரின் பலன் தரா பக்தி வாழ்வையும், துரோகஞ் செய்யுந் துன்மார்க்க வாழ்வையும், உண்மையற்ற அரசியல் வாழ்வையும் கேலிச் சித்திரங்கள் போலத் தீட்டி, புலம்பலோடு இப்பகுதி முடிகிறது.

1. எருசலேம் கனியற்ற திராட்சச் செடி அதி. 15.

முதல் ஐந்து வசனங்கள் ஒப்புவமையையும், 6—8 வசனங்கள், அதை இஸ்ரவேலருக்கு ஒப்பிட்டு விளக்கப்படுவதையுங் காண்கிறோம். ஏசாயா 5, சங். 80-ல் இஸ்ரவேல் திராட்சைச் செடிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. யோவான் 15-ல் சீடர்கள்

திராட்சைக் கொடிக்கு ஒப்பிடப்பட்டனர். கனி கொடுப்பது பற்றி இப்பகுதியில் நேராக ஒன்றுங் கூருமல், அதன் மரத்தைப் பற்றி மட்டுமே கூறியிருக்கிறது. திராட்சையின் ஒரே பலன் கனி தருவதே. மரத்துக்காக, ஒரு முளை செய்யக் கூட அது உபயோகப்படுவதில்லை. காட்டுத் திராட்சச் செடியான எருசலேம் கனி தராவிட்டால், சுட்டெரிக்கப்படுவதே அதன் முடிவு. வச. 4. அச்செடி இரு புறமும் சுட்டெரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பது, கி. மு. 721-ல் வட இஸ்ரவேலும், கி. மு. 597-ல் முதலாவதாக யூதாவும் சிறையிருப்புக்குச் சென்றதைக் குறிக்கும்.

2. எருசலேம் நன்றியற்ற, விசுவாசமற்ற மனைவி அதி 16.

இவ்வதிகாரம் நான்கு பிரிவுகளாக வளர்கின்றது. முதலாவதாக இஸ்ரவேலின் ஆரம்பத்தைப் பெண் குழந்தை யொன்றின் பிறப்பும் வளர்ப்பும் எனும் ஒப்புவமை கூறி விளக்குகிறுன். இரண்டாவதாகக் கொண்டவருக்குத் துரோகமிழைத்த அப்பெண்ணின் சீர் கெட்ட நடத்தையைச் சித்திரித்துக் கதை வளருகிறது. பின்னர் அவள் சகோதரிகளின் சீர்கேட்டையுஞ் சேர்த்துக் கூறினுன். கடைசியில் அவர்களைத் தண்டித்துத் திரும்பச் சேர்த்துக் கொள்ளும் தேவ அன்பின் நன்நம்பிக்கையில் முடிக்கிறுன். இதே போன்ற உருவகக் கதை ஏனைய தீர்க்கராலுங் கூறப்பட்டிருக்கிறது (ஏசா. *1 : 21*, எரே. *3 : 11*, ஓசியா 2 : 2—23). மற்றவர்கள் கோடுகளாய் மாத்திரந் தீட்டி, இஸ்ரவேலின் துரோகத்தை விபசாரியாய்ப் போன மனைவிக்கு ஒப்பிட்டதை, எசேக்கியேல் பெருங் கேலிச் சித்திரமாகத் தீட்டிவிட்டான்.

வச. *1—14*. பெண்ணின் பிறப்பும் வளர்ப்பும் வருணிக்கப்படுகின்றன. வச. 3. கானுன் உன் பிறப்பிடம், உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி என்று இஸ்ரவேலரின் பூர்வீகம் தேவனற்ற குலம் என்கிறுன். இஸ்ரவேல் ஆரம்பத்திலிருந்தே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுக்குப் பின்னர் அவர்கள் கானுனியரோடு கலந்துவிட்ட கலப்பை

இவ்வசனம் காட்டுகிறது. அவர்களுடைய உண்மையான குலத்தைக் கூற அல்ல, ஒழுக்கத்திலும் அவர்கள் தேவனற்றவர்களுடன் கலந்தவர்கள் என்பதைக் காட்ட இப்பெயர்கள் கூறப்பட்டன. எமோரியன் என்பது கானான் வாசிகளுக்குக் கூறப்பட்ட பொதுப் பெயர் (ஆமோஸ் 2 : 9). அசீரியர் கானான் தேசத்தை "அம்முருவின் தேசம்" என்றழைத்தனர். ஏத்தியர் இஸ்ரவேலின் பெரும் படையெடுப்பில் விட்டுவிடப்பட்ட கானானிய மக்கள். வச. 4. பிறந்தபோதே கைவிடப்பட்ட பெண் குழந்தையாயிருந்தது இஸ்ரவேல். உப்பால் சுத்திகரித்தல், குழந்தையைப் பலப்படுத்தும் என்ற எண்ணம் இருந்தது. வச. 5, 6. தேவன் அந்தப் பச்சைக் குழந்தையின் மேல் இரங்கினதாலே அது பிழைத்தது. வச. 7, 8. பெண்ணின் வாலிப அழகு வர்ணிக்கப்படுகிறது. நிர்வாணமாயிருந்த அவளுக்குத் தன் வஸ்திரத்தைக் கொடுத்து, ஆணையிட்டு, உடன்படிக்கை பண்ணி அவளைத் தனக்குத் தேவன் சொந்தமாக்கினார். அவளுடைய இயற்கை வனப்பினாலல்ல, இரக்கத்தாலும், சுத்தக் கிருபையாலும் தேவன் அவளைத் தெரிந்துகொண்டார். இஸ்ரவேலின் இள வயதின் தெரிந்துகொள்ளுதலும், பக்தியும் எரே. 2:2, ஓசியா 2 : 15-ல் காண்க. வச. 9—14. தேவன் இஸ்ரவேலை அலங்கரித்தது அழகுடன் கூறப்படுகிறது. இஸ்ரவேல் குறைவற்றதாய், புற ஜாதிகளுக்குள்ளே பிரசித்தமானது, தேவன் அதன் மேல் வைத்த அவருடைய மகிமையால்தான் (வச. 14), தேவனுடைய பிள்ளை தன்னில் ஏற்பட்ட மாறுதலும், நற்குணங்களும் தேவ கிருபையால்தான் என்பதை என்றும் தாழ்மையாக உணருவான்.

அழகியின் ஆபாச நடத்தை 16 : 15–43.

இங்கு வேசித்தனமென்பது விக்கிரக ஆராதனையையும், அன்னிய நாடுகளை நம்பி அவர்களோடு தன்னைப் பிணைத்துக் கொள்ளும் தகாத அரசியல் உறவுகளையுங் குறிக்கிறது. இஸ்ரவேல் விக்கிரக ஆராதனையான வேசித்தனஞ் செய்ததற்குக் காரணம்.

வச. 15. அது தன் அழகை நம்பினதால்தான். தான் என்பது வழி விலகுதலின் வேராயிருக்கிறது. அவர்களின் அருவருப்பான விக்கிரக ஆராதனை எப்படிப் பயங்கரமானது என வச. 16 — 22 கூறுகின்றன. தேவன் கூறுகிறார், "நான் உனக்குக் கொடுத்த ஆப ரணங்கள் (17), வஸ்திரங்கள், எண்ணெய், தூபவர்க்கம் (18), ஆகாரம் (19) இவைகளைப் பேய்களுக்குப் படைத்தது மன்றி, எனக்கு நீ பெற்ற பிள்ளைகளையும் (20) பலிகொடுத்து தீக்கடக்கப்பண்ணி (21), கொலை செய்தாய்". தேவன் ஈவாக நமக்கு அருளினவற்றை வேறு வணக்கத்திற்கும், தவறாகவும் பயன்படுத்துவதைத் தேவன் வெறுக்கிறார். (ஓசியா. 2 : 8, 13 : 2, 1. கொரி 6 : 15 ஒத்திடுக) யோசியா அரசன் நரபலியை முற்றிலும் அகற்றிவிட்ட போதிலும் (2 இராஜா 33 : 10), இக்கட்டான நேரங்களில் அது மறுபடியும் தலை தூக்கியிருக்க வேண்டும். வச. 22 — 29, எகிப்து, அசீரியா, கல்தேயர் நாடுகளோடு இஸ்ரவேல் சமயத்துக்குத் தகுந்தவாறு உண்டுபண்ணின தவறான தேசீய உறவுகளும் விபசாரமெனக் கண்டிக்கப்படுகிறது. வல்லரசுகளின் மத்தியில் தேவன் சிறு இஸ்ரவேலை வைத்ததன் நோக்கமே, முதலாவதாக அவர்கள் வலது இடது புறமாக வல்லரசுகளை நோக்காமல், தேவனையே தேடவும் நம்பவும் வேண்டுமென்பதற்காகவும், நாடுகளின் மத்தியில் நடப்பட்டிருப்பதால் அவர்கள் நற்செய்தி அறிவிப்பவர்களாகவும், நல்லுறவுப் பாலங்களாக அமைய வேண்டுமென்பதற்காகவுமே. இஸ்ரவேல் அங்ஙனமிராமல், நாடுகளின் பகைமையைப் பயன்படுத்தி வலியவனோடு சேர்ந்து, உடன்படிக்கைகளை மீறி அரசியல் துரோகமிழைத்தது.

வச. 30-34 மேற்கூறிய அரசியல்துரோகமான விபசாரத்தால் அவர்கள் களைத்துப்போயினர் என்று சுட்டிக்காட்டுகிறான். இந்தச் செயல் பணையங்கொடுத்து நேசரைத்தேடும் விபசாரிபோலப் பரிதாபமாயிருக்கிறதெனக் கூறப்படுகிறது. ஆகாஸ் போன்ற அரசர்கள் வல்லரசுகளின் உதவிக்காக

ஆலயப் பொன்னையும் பணிமுட்டுகளையும் அனுப்பிய செயல் இதில் உணர்த்தப்படுகிறது (2 நாளா 28:21).

வச. 35-43. உண்மையற்றவளுக்கு வரும் தண்டனை இங்கே உரைக்கப்படுகிறது. அதன் அழிவாகிய அம்மணம் எல்லார் முன்பாகவும் நடைபெறும். (வச.37.) இரத்தப்பழி சுமத்தப்படும் (வச.38), மண்டபங்கள் இடிக்கப்படும் (வச.39) கல்லெறியப்பட்டு, பட்டயத்தால் குத்தப்பட்டு (வச - 40.) அக்கினியால் சுட்டெரிக்கப்படும் (வச. 41). இனிப் பணையங் கொடுக்க ஒன்றுமில்லாமற் போவதால் அதன் வேசித்தனம் ஒழிந்துபோம். (வச. 42). 16:22, 43-ல் இஸ்ரவேல் தன் இள வயதின் நாட்களை நினையாததால் இச்சோரம் போதல் ஏற் பட்டது என்கிறார் கர்த்தர். பலர் பெருமை கொண்டு வழி விலகி விழுவது தங்கள் பழைய நிலையைப் பார்க்காததால் அல்லவா? சங்கீதங்களில் பல, இஸ்ரவேலுக்கு அதன் அற்ப ஆரம்பத்தைக் காட்டியது, நன்கு உணரவேண்டியது. "நம் முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்."

(சங். 136:23)

துரோக ஸ்திரீயின் சகோதரிகள் 16:44-59.

சமாரியா, சோதோம் இவ்விரு நாடுகளையும் எருசலேமின் சகோதரிகள் என அழைக்கிறார். அவர்களின் தாயாகிய ஏத் தித்தியும் புருஷனையும் பிள்ளைகளையும் அருவருத்தவள் என் கிறார். இவ்வாறு உன்தாயைப் போலும், உன் சகோதரிகள் போலும் நீயும் கெட்டவள் என்று மட்டுமல்ல வச. 47. அவர் களைப் பார்க்கிலும் நீ கேடாய் நடந்தாய் என்று தேவன் குற்றஞ்சாட்டுகிறார்.

வச. 51. உன் பாவத்தை அவர்களோடு ஒப்பிட்டால், அவர்கள் அரைவாசிகூட செய்யாததால் உன்னைப் பார்க்கி லும் நீதியுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். வச. 52-58 அதுவுமின்றி அவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்த நீ அவர்களைப் பார்க்கிலும் கேடுள்ளவளாய் நடந்ததால், ஆக் கினை உனக்கு அதிகம் என்று உணர்த்தப் படுகிறது இப்பகுதி

மற்றவர்களைக் குற்றஞ்சாட்டி, குறைகூறியும் கேடாய் நடக்கிற கிறிஸ்தவ மக்கள் ஊன்றிக் கற்க வேண்டும், மற்றவர் நடத்தை நமக்கு எப்போதும் எச்சரிப்பாயிருக்க வேண்டும். வச. 59. இஸ்ரவேலின் பாவம், அது தேவனோடு கொண்டுள்ள சம்பந்தத்தினால், மிகவும் பெரிதாகிறது. அதனால் அதன் தண்டனையும் அதிகமாகிறது. (ஆமோஸ். 3:2)

கிருபையின் வாக்குகள் 16 : 60—63

எசேக்கியேலில் முதன் முறையாக வருகிற அழகிய ஆறுதல் வாக்குகள். தேவனுடைய திட்டத்தில் கிருபையே முந்துவதுமின்றி வெற்றியும் பெறுகிறது. கடினமான சிட்சைக்குப் பின்னர் வச. 60, தேவன் தன் பழைய உடன்படிக்கையை நினைவுகூருகிறார். வச. 61. இஸ்ரவேல் தன் பாவத்தின் நீண்ட சரிதையை நினைவுகூர்ந்து நாணுகிறாள். ஆயினும் அவளுடைய மனஸ்தாபத்தைப் பார்த்தல்ல, கிருபையாலே தேவன் புது உடன்படிக்கை ஏற்படுத்துகிறார். வச. 62. அப்போது கர்த்தரையும், வச. 63. அவருடைய மன்னிப்பின் அன்பையும் அறிந்து மனஸ்தாபமடையும். நாணமடைந்த இஸ்ரவேல் இனிக்கெட்டுப்போகாது. தேவகிருபை முந்துங் கிருபை என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர் கிருபை நம்முடைய நன்னடத்தைக்குப் பலனல்ல, மனஸ்தாபத்திற்குக் கூலியுமல்ல. அவர் முந்தி நம்மில் அன்புகூர்ந்து, மன்னித்ததால், மனஸ்தாபமும், சீர்திருந்திய நடத்தையும் மனிதரில் ஏற்படுகிறது.

3. துரோகமிழைத்த அரசன். அதி. 17.

இரண்டு கழுகுகளைப் பற்றிய உருவகத்தைக் கூறி, சிதேக்கியா அரசனின் உண்மையின்மையை விளக்கி, அதற்கு ஏற்படும் தண்டனையை அறிவிக்கிறது. கடந்த காலத்தில் இஸ்ரவேலரிடங் காணப்பட்ட மீறுதல்களுக்கு மாத்திரமல்ல, நிகழ் காலத்தில் அரசர்களோடு சேர்ந்து கலகம் பண்ணுவதற்கும் தண்டனை வரும். விடுகதை, உவமை என்று கூறப்படும் மிகுதி 1-10 வசனங்கள், அதன் விளக்கம் 11-21 வசனங்கள்

வச. 3. அழகிய மாபெருங் கழுகு வச. 12. பாபிலோன் அரசனைக் குறிக்கும். அது லீபனேனில் பாய்ந்திறங்கி வச. 4. கேதுருவின் நுனிக் கிளையைக் கொய்தது.

வச. 12. அது அரசன் யோயாக்கீனை கி. பி. 597-ல் சிறைக்குப் பிடித்துச் சென்றது. (2. இராஜா. 24:10-16). அதை வச. 4. வர்த்தக நகரிலே, அதாவது, வச. 12. பாபிலோனில் வைத்தது. பிறகு அது, வச 5. தேசத்தின் விதையில் ஒன்றை,

வச. 13. சிதேக்கியாவை, யூதாவுக்கு அரசனுக்கிற்று' வச. 6. பத்திரமாய் நடப்பட்ட அவ்விதை, கழுகின் ஆதரவில், அதாவது பாபிலோனுக்கு அடங்கினதாய், கிளை வீசித் திராட்சைச் செடியாய்ப் படர்ந்தது. (வச. 14) வச. 7. இதன் அருகே வேருெரு பெரும் கழுகு, முந்தியதைவிட மகிமை குறைவானது. வச. 15. எகிப்து தேசம், இந்தத் திராட்சைக்கு நேராக வேர்விட்டு அதைத் தன்பக்கமாக இழுத்தது. வச. 8, 9, 15—21, சிதேக்கியாவும் எகிப்தும் சேர்ந்து செய்த துரோகம் சித்திபெருது. அவர்கள் தண்டனை பெறுவார்கள். சிதேக்கியாவும் அவனேடு சேர்ந்து கலகம் பண்ணினவர்களும் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படுவார்கள். எகிப்தை நம்பக் கூடாதென்று ஏசாயா 30:1-5, 31·1–3, எரேமியா, 2:36-ல் காரணங் கூறப்படுவதைக் காணலாம். சிதேக்கியாவின் துரோக முடிவு எரே. 52:1-11-ல் காண்க.

வச. 22—24. திரும்பக் கொண்டுவரப்படுவதையும் மேசியா எனும் இளங்கிளை பற்றியுமுள்ள உருவகம் இதிலடங், கியுள்ளன. இவ்வதிகாரத்தில் 3ம், 4ம் வசனங்களில் கூறப் பட்ட இளங்கிளை வித்தியாசமான முறையில் கூறப் பட்டிருக்கிறது. முந்தியது, கழுகினுல் கிள்ளியெடுத்து நடப் பட்டது(வச.3,4), இதுவோ கர்த்தரால் உயரமான சிகரத்தில் நாட்டப்பட்டது.(வச.22-23).இளங்கிளைபற்றியதீர்க்கதரிசனம் மேசியாவைக் குறிப்பதாகும் (எரே. 23 : 5மீ, 33 : 15, ஏசா. 11 : 1). வச. 21 இது சீயோன் மலையில் யாவருக்கும்

அடைக்கலமாகத் தேவனுல் வைக்கப்பட்ட விருட்சம் (மத். 13 : 32).

4. தனி மனிதனின் பொறுப்பும் பிரதிபலனும், அதி. 18.

அவிசுவாசத்தினுலல்ல, சோம்பலால் ஏற்பட்ட ஊழ் வலிக் கொள்கைக்காரர் பற்றிக் கூறுகிறது இவ்வதிகாரம். இவர்கள் தனிமனிதன் உத்தரவாதத்தை உணராமல் உதறி விட்டு, தங்கள் பிதாக்களைக் குறைகூறின குமாரர். இது எங்கள் குற்றமல்ல, எங்கள் தலைவிதி என்று வாழாவிருப் போர் இவர்கள். தனித்த மனிதனின் பொறுப்பை மிகத் தெளிவாக விளக்கிய முதல் தீர்க்கன் எசேக்கியேல்தான். இக்கொள்கைக்கு முன்னோடியா யிருந்தமையாலும், முந்தின தலைமுறை மக்களின் துரோகத்திற்குத் தண்டனை பெறுகிறோ மென்று கூறி தங்கள் செயலைத் திருத்த, மனந்திரும்ப மன மற்றிருந்தவர்களுக்குக் கூறினதாலும், தனி மனிதனின் உத்தரவாதம் வெகுவலிவுடன் வற்புறுத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்தப்பட்ட மார்க்கத்தின் அஸ்திபாரமான திட்டங் களில் இது ஒன்று. வச. 20 இப்போதனையைச் சுருக்கி, விளக்கிக் கூறுகிறது. தனி மனிதனின் உத்தரவாதம் இத்துணை வற்புறுத்தப்படுவதால், சமுதாய எண்ணத்தை எசேக்கியேல் ஒதுக்கவில்லை. தேசீய ஒருமையில் தனித்தவர் தங்கள் உத்தரவாதத்தை உணராது, மனந்திரும்ப மனமற் றிருந்தபோது கூறப்பட்டது என்ற சந்தர்ப்பத்தை மனதில் வைத்து இதைக் கற்கவேண்டும் வச. 2. பழமொழி கூறி, நாங்கள் என்செய்வோம், எங்கள் பிதாக்களே இத்தீமைக்குக் காரணமெனக் கூறினர்.

இதே பழமொழியும், இதே கொள்கையும் எரே. 31 : 29 பீ காண்க. வச. 5—9. நீதிமானுடைய படம் சித்திரிக்கப் பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட காரியங்கள் விவர மாகக் கற்கச் சிறந்தது. தேவ கட்டளை கைக்கொண்டு, தன் சகோதரனிடத்தில் அன்பு கொண்டு, அயலானிடம் இரக்கங் காட்டி, பரிசுத்த வாழ்வு வாழ்பவன். ஆனுல் வச 10—13

அவனுடைய குமாரன் அக்கிரமக்காரனுனல், அவன் மேல் இரத்தப்பழி சுமரும். தெய்வீக, சன்மார்க்க, சமுதாய நீதி மீறப்படுகிறதைக் காண்க. ஆயினும் வச. 14—17, இவனுடைய குமாரன் அதாவது நீதிமானுடைய பேரன், நீதி செய்வதால் அவன் ஆசீர்வதிக்கப்படுவான்.

வச. 18—22 உண்மை தொகுத்து, வலியுறுத்திக் கூறப்படுகிறது. ஒருவன் சித்தங்கொண்டால் தேவனிடம் மனந்திரும்பி வரவும், நீதியின் வழியில் வாழவும் இயலும் என்பது வலியுறுத்தப்படுகிறது. தன் முற்பிதாக்களின் செய்கையால் ஒருவனும் கட்டுண்டவனல்ல. "நீ மனந்திரும்பு" என்பதே முக்கியமானது. வச 23 எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தின் உன்னத வசனம். அன்பின் சுத்த சுவிசேஷ வசனம் இது. "துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்" (1 தீமோ 2 : 4, 2 பேது. 3 : 9 ஒத்திடுக). தனி மனிதனின் பொறுப்பு, சித்தம், தீர்மானத்தை வலியுறுத்துவது மட்டுமல்ல, தேவ கிருபையைக் காட்டுவதும் இவ்வதிகாரத்தின் சிறப்பு.

வச. 25. தேவனுடைய வழியை வினவுகிறுர்கள்.

வச. 26—31 தன் வழியின் நியாயத்தை, மேன்மையை, ஆசீர்வாதத்தை தேவன் உரைக்கிறுர். நீங்கள் மனந்திரும்புங்கள், எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள், நியாயத்தையும் நீதியையும் செய்யுங்கள். துரோகங்களை விலக்கி, புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டு பண்ணிக்கொள்ளுங்கள் (வச. 31), அப்பொழுது பிழைப்பீர்கள். "சகல" "எல்லா" பாவங்களையும் விட்டுத் திரும்ப வேண்டுமென வச. 21, 24, 30 வசனங்களில், முழுமாறுதலைக் குறிப்பதைக் கவனிக்கவும் (பிலி. 2 : 12, 13). தேவ கிருபை, மனிதனின் தீர்மானம் இவையிரண்டிற்கும் எதிராகவல்ல, இணைத்து, சரியான முறையில் வலியுறுத்துவதே, புத்துயிர் பெறவும், புத்துயிர் நிலைத்திருக்கவுஞ் செய்யும்.

5. பிரபுக்கள் மீது பிரலாபம். அதி. 19.

இருபகுதிகளாகப் பகுக்கப்பட்ட இப்பிரலாபம், இரு உருவகங்களைக் கூறுகிறது. இரு குட்டிகளை ஈன்ற பெண் சிங்கத்தையும், திராட்சைச் செடியையும் உருவகங்களாகக் கொண்டு அக்கால அரசர்களை ஒப்பிட்டு அவர்கள் அழிவைக் கூறுகிறது.

வச. 2. பெண் சிங்கமாகிய தாய், யூதா (ஆதி. 49 : 9 பி).

வச. 3. சிம்மக்குட்டிகளில் ஒன்று, யோவகாஸ் அரசன்.

வச. 4. அவன் எகிப்திற்கு கி. மு. 608-ல் இழுத்துச் செல்லப்பட்டான். யோவகாஸ் 3 மாதங்கள் மட்டுமே அரசாண்டான் (2 இராஜா 23 : 31—34). வச. 5, 6. தாய்ச் சிங்கம் பின் ஒரு குட்டியைப் பால சிங்கமாகப் பழககிற்று. இது 11 ஆண்டுகள் அரசாண்ட யோயாக்கீம் அரசன் (2 இராஜா. 24 : 1—6, 2 நாளா. 36 : 4—8). அவனுக்குப் பின் யோயாக்கீன் 3 மாதங்கள் மட்டுமே அரசாண்டான் (2 இராஜா 24 : 7—15, 2 நாளா. 36 : 9—10). இருவருமே பாபிலோனுக்குச் சிறையாகச் சென்றனர்.

வச. 7—9. இருவருக்கும் நேர்ந்த அழிவு கூறப்படுகிறது.

வச. 10—14. செழித்த திராட்சை யூதா, அதன் செழித்த செங்கோல் சிதேக்கியா அரசன் (2 இராஜா 24 : 17—20), அவனது உண்மையின்மையால், அவன் அழிந்தான். யூதா பிடுங்கப்பட்டு, காய்ந்து போய், அக்கினிக்கு இரையாக்கப்பட்டது. நமது வாழ்வின் எப்பகுதியிலும் உண்மைக் குறைவைத் தேவன் வெறுக்கிறார்.

6. துரோக இஸ்ரவேலின் தோற்றுவாய் அதி. 20.

இஸ்ரவேல் மூப்பர் விசாரிக்கும்படித் தீர்க்கனிடம் வந்தனர் (எசே. 8 : 1, 14 : 3). அழிவு நெருங்கிவிட்டது,

ஆகையால் தீர்க்கன் ஆத்திரத்தோடு, இஸ்ரவேல் சரித்திரத்தைச் சுருங்கக்கூறி, அவர்கள் என்றும் எதிர்த்து நின்றதையுங்கூறி, ஆக்கினை வருமென்கிறுன். விசாரிக்க வந்தவர்கள் தங்கள் மனதில் விக்கிரகாராதனையை விட்டுவிடவில்லை (வச. 32).

வச. 1. ஏழாம் வருடம் 5-ம் மாதம், கி. மு 591, ஜூலை—ஆகஸ்ட் மாதம். இஸ்ரவேலருடைய சரித்திரம் உற்று நோக்கப்படுகிறது. தேவன் அழைத்த நாளிலிருந்தே, அவர்கள் விக்கிர வணக்கமும் ஒழியவில்லை. எத்தனை வாக்குகள், பிரமாணங்கள் அருளினுலும் அவர்கள் திரும்பவில்லை. வச. 5—8. இஸ்ரவேலர் எகிப்திலும், வச. 13 வனந்தரத்திலும், வச. 27—29 கானனிலும், வச. 30—32 இனிமேல் பாபிலோனிலும் செய்து வந்த, செய்யப்போகும் அருவருப்பான விக்கிரகாராதனை கூறப்படுகிறது. மீண்டும் மீண்டும் தவறும் இம்மக்களுக்குத் தேவன் தமது நாமத்தினிமித்தஞ் செய்த கிருபைகள் வச. 9, 14—17, 22—26-ல் கூறப்படுகின்றன. வச. 33—44 சிறையிருப்பிலிருந்து திரும்பவும் மீட்டு, தேசத்திற்குத் திருப்பிக் கொண்டு வந்து தேவன் செய்யப்போகும் கிருபைகள் கூறப்படுகின்றன. அவருடைய நிலையான கிருபையால் மக்கள் அவரை அறிந்து, தங்கள் அருவருப்புகளை அகற்றுவார்கள். நமது தனிப்பட்ட வாழ்வில், சமுதாய வாழ்வில் தேவ கிருபை எத்துணை பெரிதென்பதை உணர்ந்தறிந்து, தேவனுக்கே உடன்படுவோம்.

7. உருவின பட்டயப் பாடல். அதி. 21.

எபிரேய மூலத்தில், அதி. 20 : 45-ல் புது அதிகாரம் துவங்குகிறது. இதில் நான்கு பிரிவுகளுண்டு :— 20 : 45—21 : 7 எருசலேம் நெருப்பினுல் பாழாகும்; 21 : 8—17 உருவின பட்டயப் பாடல்; 21 : 18—27 இருவழி முனையில் நேபுகாத் நேச்சார்; 21 : 28—32 அம்மோன் மேல் தீர்ப்பு. தீர்க்கன் உவமைகளாகப் பேசுகிறுன் என்று மக்கள் குறை கூறினுர்கள் (20 : 49). அதற்கு எசேக்கியேல் கொடூரத் தெளிவுடன் அழிவை விளக்குகிறுன்.

வச. 20 : 45—49. காட்டுத் தீ தெற்கே கொளுத்தப் பட்ட எல்லாவற்றையும் ஏகமாய்ப் பட்சித்துப்போட்டது. தெற்கு என்பதற்கு உபயோகப்படுத்தியிருக்கும் எபிரேய பதம் (நேகேப்), யூதாவின் தெற்கேயுள்ள மலைப் பகுதிக்கான சிறப் புச் சொல்லாகும். வச. 21 : 1—7. மேலே கூறின காட்டுத் தீ உவமையின் விளக்கம் இது. தேவன் தம் பட்டயத்தை உருவி சகலரையும் சங்காரம் பண்ணும் கொடூரமான செய்தி.

வச. 6. இடுப்பு நொறுங்கப் பெருமூச்சு விட, மனங் கசந்து பெருமூச்சு விடச் செய்யும் பயங்கர அழிவு. இப்பகுதி யாவும் மன உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில் அமைந்துள்ளது,

வச. 8—17. பட்டயப் பாடல். பட்டயத்தின் கூர்மை யும், அது பட்சிக்கும் பயங்கரமும் திகிலூட்டுகிறது. வச. 12. ஓலமிட்டு அலற, வச. 15. இருதயம் கரைய, வலது புறமும் இடது புறமும், திரும்புகிற திக்கெல்லாம் பட்டயம் வெட்டு கிறது.

வச. 17. இதைச் செய்தது தேவனுடைய திட்டமே. பகைவன் கையில் பயங்கரமாய் மின்னும் பட்டயம், தேவன் கையால் அனுப்பப்பட்டதால், அது அவர் கைக்கோல். அது அடித்துச் சீர்திருத்த அனுப்பப்பட்டது (ஏசா. 10:5). வச. 12. விலாவிலே அடித்துக்கொள், துக்கத்தைக் காட்டுவதற்கு (எரே. 31 : 19).

வச. 18—27. இரு வழி முனையில் நேபுகாத்நேச்சார் நின்று குறிபார்க்கிற முறை கூறப்பட்டுள்ளது. அதை எசேக்கியேல் அடையாளமாகச் செய்து காட்டுகிறான். வச. 19. இரு வழி முனை யில் எசேக்கியேல் நிற்கிறான். வச. 20. எருசலேம் ஒரு வழியில். அம்மோன் மறு வழியில் குறிக்கப்படுகிறது. வச. 21. இரு அம்புகளில் பட்டணங்களின் பெயர் எழுதி, தீட்டி அவைகளை போட்டு சீட்டு எடுப்பது போல, சகுனம் பார்க்கப்படுகிறது. ஈரலில் மிருகத்தின் உயிர் இருக்கிறது என்பது பூர்வ கால நம்பிக்கை. உசாவி ஏவும்போது, அதின் வாயிலாகக் குறி காட்டப்படுகிறது என விளக்கலாம். வச. 22. சீட்டு எருச

லேமின் மேல் விழுந்தது. ஆயினும் வச. 23. எருசலேமியர் அதைப் பொய்யென்றெண்ணினர். துஷ்டனும், பொல்லாதவனும், வாக்கை மீறினவனுமான சிதேக்கியாவின் அழிவு வச. 24—27-ல் கூறப்படுகிறது. வச. 27. மூன்று முறை கவிழ்ப்பேனெனக் கூறப்படுவது நிச்சயமாகச் சம்பவிப்பதைக் கூறுகிறது.

வச. 28—32. அம்மோனின் அழிவுங் கூறப்படுகிறது. தேவ அன்பை மட்டுமல்ல, அவர் நியாயத் தீர்ப்பையும் நாம் அறியவும், கூறவும் கடமைப்பட்டுள்ளோம். நியாயத் தீர்ப்பின், தண்டனையின் நோக்கத்தைத் தீர்க்கர் கூறுகிறபடி கற்று, புதிய ஏற்பாட்டின் கடைசித் தீர்ப்போடு ஒப்பிட்டு ஆராய்வது பயன் தரும்.

8. எருசலேமின் பாவங்கள் எண்ணப்படுகின்றன. அதி. 22.

நியாயத் தீர்ப்பின் மூன்று திருவுரைகள் இதில் அடங்கியுள்ளன. இரத்தஞ் சிந்துகிற நகரின் பாவங்கள் (1—16), இஸ்ரவேலைப் புடமிடும் யெகோவாவின் நெருப்புக் குகை (17—22), மக்கள் பிரிவுகளும், கூட்டமும் குற்றஞ் சாட்டப்படுகிறது (23—31). எருசலேம் இரத்தஞ் சிந்துகிற நகரெனப் பன்முறை கண்டிக்கப்படுகிறது. நமது ஆண்டவரும் எருசலேமைக் கொலை செய்கிறவன் என்றார் (மத். 23 : 37) ஏழு அருவருப்பான பாவங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன 1) வச. 3, 4. விக்கிரக ஆராதனை, (2) வச. 7. பெற்றோரை அவமதித்தல், (3) வச. 7. ஏழைகளை ஒடுக்குதல், (4) வச. 8 ஓய்வு நாளை அசட்டை செய்தல், (5) வச. 9. கோள், பொய் சாட்சி கூறுதல், (6) வச. 10, 11. வேசித்தனம், விபசாரம், (7) வச. 12, 13. பரிதானம் வாங்குதல், அநியாய வழியில் சம்பாதித்தல். இப் பயங்கர பாவ நிலை இக்காலத்திலும் பொருத்தமாகக் கண்டிக்கப்படவேண்டியவை.

வச 17—22. முற்றுகையிடப்படுகையில் யாவரும் எருசலேமுக்குள் பாதுகாப்பிற்காக வந்து சேருகிறார்கள். ஆனால் அதுவோ தேவனுடைய தீச்சூளையாகிறது. களிம்பை

நீக்கக் குகைபோல் இருக்குமென்ருல், வச. 18, 19. யாவரும் களிம்பாகப் போய்விட்டனர். ஆகையால், யாவரும் வெந்து ஒன்றுமில்லாது போவார்கள் (சங். 119 : 119).

வச. 23—31. மக்கள் பிரிவுகள், கூட்டத்தினர் யாவரின் அக்கிரமங்கள் அறிவிக்கப்படுகின்றன. வச. 25, 28. தீர்க்கரின் திருட்டுத்தனம், வச. 26. ஆசாரியரின் அநியாயம், வச. 27. பிரபுக்களின் பாவம், வச. 29. மக்களின் மாசுகள் கூறப்படுகின்றன. அந்தரங்கப் பாவங்கள், பகிரங்கப் பாவங்கள் எல்லாப் பிரிவினராலும் செய்யப்பட்டன. அதிபதிகளும், ஆசாரியரும், தீர்க்கரும், மக்களும் சீர்கெட்டால் அந்நாட்டிற்கு ஐயோ! வச. 30. திறப்பிலே நிற்க ஒருவனையுங் காணேம். எத்தனை பரிதாபம். வச. 31. முழு நாசம் அவர்கள் மேல் விழுந்தது.

9. சோரம்போன சோதரிகள். அதி. 33.

இவ்வதிகாரம் இரு பிரிவுகளாலானது. வச. 1—35-ல் இரு சகோதரிகள் பற்றிய உருவகக்கதை கூறப்படுகிறது. வச. 36—49-ல் இதே உருவகம் வேறு விதமாக மாற்றப்படுகிறது. 16-ம் அதிகாரத்தில் உபயோகிக்கப்பட்ட பொருளே இங்கேயும், சற்று விரிவாக வருகிறது. அகோலாள், அகோலிபாள் எனும் இரு சகோதரிகள், ஒரே புருஷனுடைய மனைவிகள். அவர்கள் செய்த துரோகமும், அவர்களைத் திருத்தும் விதமும் கூறப்பட்டுள்ளன. எசேக்கியேல் கேலிச் சித்திரமாகத் தீட்டும் இக்கருத்துக்கள், ஓசேயா தீர்க்கத்தரிசனத்தில் அவன் வாழ்க்கையின் வாயிலாகக் காணப்படுகிறது. இரண்டிற்கும் ஒற்றுமை பலவுண்டு. அன்புள்ள கணவன், மனைவியோ புத்தியீனமான சோர ஸ்திரீ. கணவனின் நன்கொடை, அன்பை அவள் மறந்து வேசியாக மாறி ஓடுகிருள், பின்னர் அவள் நேசித்தவர்களால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகிருள். அன்புள்ள கணவனே, அவளைத்திருத்தி, சுத்திகரித்து, மீண்டுஞ் சேர்த்துப் புதுவாழ்வு அளிக்கிருன். வச 4. அகோலாள், அகோலிபாள், சமாரியா, எருசலேம் நகர்களுக்கு

ஒப்பிடப்பட்டுள்ளன. அகோலாள் என்றால் 'அவள் கூடாரம்' அகோலிபால் என்றால் 'என் கூடாரம் அவளில் இருக்கிறது' என்று அர்த்தம். ஓகேல் என்பது கூடாரம்.

வச. 4. அவர்கள் என்னுடையவர்கள் என்று தேவன் கூறும் உரிமை உணரவேண்டியது. நமது பிறப்பிலும், நமது மீட்பிலும் நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் (1 பேது. 1 : 18, 19). நம்மை வேறொருவருக்கு அளிப்பது துரோகமாகும்.

வச. 6—9 அகோலாள் — வட இஸ்ரவேலரின் காதலன் அசீரியா. அவனுக்குக் கப்பமளித்தது 2 இராஜா. 15 : 19, 17 : 3, ஓசியா. 8 : 9-ல் காணப்படுகிறது.

வச. 11—21. சகோதரியின் துன்மார்க்கம், தகாத உறவு, அழிவைக்கண்டும் எச்சரிப்படையாத அகோலிபாளின் காதலன் கல்தேயன். அவள் மேல் அழிவு கூறப்படுகிறது.

வச. 48, 49. தண்டனையின் நோக்கம் கூறப்படுகிறது. முறைகேட்டைத் தேசத்தை விட்டு ஒழியப் பண்ணவும், கர்த்தராகிய ஆண்டவரை அறிந்து சேவிக்கவுமே. இது மற்றவர்கள் புத்தியடைய ஏதுவாயுமிருக்கும்.

10. முற்றுகைக்கு முந்திய கடைசிக் காட்சிகள். அதி. 24.

இவ்வதிகாரத்தில் கருத்துத் தொடர்பாயுள்ள மூன்று பகுதிகளுண்டு. நிறைந்திருந்து பின் வெறுமையாக்கப்பட்ட களிம்புள்ள பானை (வச. 1—14), எசேக்கியேலின் மனைவியின் மரணம் அடையாளமானது (வச.15 –24), தீர்க்கன் மௌனியாயிருந்த காலம் முற்றுப்பெற்றது (வச 25—27). எருசலேம் அழிக்கப்படுகிறது யாவரும் நாசமாகிறார்கள் என்ற ஒரே கருத்தைப் பயங்கரமாக இப்பகுதி உணர்த்துகிறது. அழிவுக்கு முந்தின கடைசி உரை இது.

வச. 1, 2. சிறையிருப்பின் 9-ம் வருடம், 10-ம் மாதம் 10-ம் தேதி, அன்று எருசலேம் மேல் பாபிலோன் அரசன்

பாளையமிறங்கினுன் (கி. மு. 598). இது பின்னுளில் உபவாச நாளாயிற்று (சகரியா. 8 : 19). வச.1—8. நிறைந்திருந்த பாணைக்கு அடியில் பெருங்கட்டைகளைக் குவித்து அக்கினி மூட்டப்படுகிறது. எலும்பும் வெந்து போகும்படியாக அக்கினி எரிகிறது, பாணை பொங்குகிறது. முற்றுகையின் கடூரத்தை இவை காட்டுகின்றன. வச. 4. நல்ல கண்டங்கள் பிரம்புக் களையும், எலும்புகள் சாதாரண மக்களையும் குறிக்கலாம். யாவர்மேலும் அழிவு வருகிறது. இதைச் செய்து காட்டிய தீர்க்கன்,கொப்பரைக்குள் இருக்கும் இறைச்சி, எலும்பு யாவை யும் எடுத்துப்போட்டு,தரையிலே யாவையும் ஊற்றிவிடுகிருன்.

வச. 6. சீட்டுப்போடலாகாது. கி. மு. 597 சிறைக்குச் சீட்டுப்போட்டு சிலரைக்கொண்டு போனுன்; இப்போது யாவ ருமே அழிக்கப்படுவார்கள் அல்லது சிறைக்கு ஊற்றிவிடப் படுவார்கள்.

வச. 9—14. வெறுமையான பாணை அடுப்பின்மேல் களிம்பு நீங்கும்படி, சுத்திகரிப்புக்கு வைக்கப்படுகிறது, எரு சலேம் அழிந்துகிடப்பதையும் பலகாலம் வெறுமையாயிருக்கப் போவதையுங் காட்டுகிறது. இறுகிய களிம்பு, எருசலேமின் இருதயக் கடினத்தைக் குறிக்கிறது.

வச. 15—27. எசேக்கியேல் மனைவியின் மரணம். தீர்க்க தரிசிகள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பமே தேவ அடையாள மாயிருக்கின்றனர். ஒசியா தன் மனைவியைஓடக்கொடுத்தான், ஏசாயாவின் குமாரர் அடையாளப் பெயர் தரித்தனர் (ஏசா 8 : 18). எசேக்கியேல் துக்கங் கொண்டாடக் கூடாதெனக் கட்டளை பெற்றுன். ஏன் என்று கேட்ட ஜனங்களுக்கு (வச. 19.) விளக்குகிருன். எருசலேம் அழிவைக்கேட்ட மக்கள் துக்கங் கொண்டாடினுல் அது பாபிலோனுக்கு விரோதமான கலகமாகுமென்று, வழக்கமாகத் துக்கங்கொண்டாடும் முறை களை (வச. 22, 23) அவர்கள் செய்யமாட்டார்கள் என்பதைக் காட்டவே எசேக்கியேலும் துக்கங்கொண்டாடவில்லை (வச. 17). திகில் ஜனங்களைப் பிடித்தது.

வச. 25—27 எருசலேம் விழுந்தது என்ற செய்திவந்தது. இனி எசேக்கியேல் மௌனமாயிராதபடி பேசக்கட்டளை பெற்ருன். யாவரும் கவனமாகக் கேட்டனர் (எசே. 3:22—27). இஸ்ரவேல் அரசராக இராதபடி அழிந்தனர். ஆயின் அவர்கள் தேவசபையாகத் திரும்பவும் உயிர்பெறச் செய்யும் பணியில் எசேக்கியேல் இறங்குகிருன்.

அண்டை நாடுகளின் அழிவு அறிவிக்கப்பட்டது. அதி 25—32.

1—24 அதிகாரங்களில் இஸ்ரவேல் நாடு அழிக்கப் படுவதற்குள்ள நியாயமான காரணங்கள் காட்டப்பட்டு, அழிவின் பயங்கரமும் வர்ணிக்கப்பட்டன. எருசலேம் எருக் களமாக்கப்பட்டது; ஆலயம் அழிக்கப்பட்டது; தேவமகிமை யும் தூரமாயிற்று. இனிமேல் தேசம் புதுப்பிக்கப்பட வேண்டிய நற்செய்தி நவிலவேண்டும். புது உடன்படிக்கை யும், புது இருதயமும், புது ஆவியும் பெற்ற மக்கள் புதுவாழ் வில் புகும்படித் திரும்பவேண்டும். ஆனல் இஸ்ரவேலரை இகழ்ந்த அண்டை நாடுகள் தைக்கிற முள்ளும், நோவுண்டாக் கும் நெரிஞ்சிலும் போலிருந்தனர் (எசே 28:24). புது இஸ்ர வேல் சமுதாயம் சமாதானமாய், பயமின்றி வாழ, முட்கள் போன்ற இப்பகைவர் முற்றிலும் ஒடுக்கப்படவேண்டும். அண்டைநாடுகளின் துன்மார்க்கமும் அளவுமீறிவிட்டதாகை யால், அவை தீர்ப்புக்குட்பட்டாயிற்று. இஸ்ரவேலைச் சுற்றி உள்ள ஏழு அண்டைநாடுகள்மேல் அழிவின் தீர்க்கதரிசனம், எட்டு அதிகாரங்களில் (25—32) கூறப்படுகிறது. ஆமோஸ், ஏசாயா, எரேமியா தீர்க்கரும், அயல்நாடுகளின் அழிவுபற்றி முன்னறிவித்துள்ளனர். தேவனுடைய மக்கள்மீது பகைமை பாராட்டி, பொருமைகொண்டு, அவர்கள் அழிவில் ஆனந்தங் கொண்டாடினவர்களும், துன்மார்க்க தேசங்களும் தேவ தீர்ப்புக்குத் தப்பமாட்டார்கள். அழிக்கப்படவேண்டிய ஏழு நாடுகளில் பாபிலோன் இடம் பெருதது ஆச்சரியமே. பாபிலோன் தேசம் தேவனுடைய தண்டனையின் கோலென்று தீர்க்கர் பலரும், எசேக்கியேலும் கூறினதால், அல்லது எரேமியாவும் எசேக்கியேலும் பாபிலோனியச் சிறை

யிருப்புக்குப் பயமின்றி செல்லுங்களென்று அதற்குச் சார்புள்ள கட்சியில் இருந்ததால், அதன் அழிவைப்பற்றி அறிவிக்கவில்லை எனலாம். பாபிலோனின் அழிவை ஏசாயா தீர்க்கன் திட்டமாக அறிவித்துள்ளான் (ஏசா. 47). எனினும் எசேக்கியேல் பாபிலோனை அழிவுக்குரிய நாடுகளில் சேர்க்காதது, அரசியல் விவேகமாயிருக்கலாம். சிறையிலிருப்போர் பாபிலோனின் அழிவைக் கேட்டு, கலகம் பண்ணுதிருக்க இவ்வாறு அந்நாட்டை எசேக்கியேல் சேர்க்காதிருக்கலாம். நம் நாட்களிலும் இஸ்ரவேலைச் சுற்றிப் பகைமை பாராட்டி, முட்களாகக் குத்திக்கொண்டிருப்போர் அறியவேண்டிய சத்தியம் இவ்வதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது.

அ. அம்மோன். 25 : 1—7.

ஏதோமியர், மோவாபியரோடு சேர்ந்துகொண்டு, பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ண யூதாவைத் தூண்டிவிட்டவர்கள் அம்மோன்புத்திரர் (எரே. 27:1—11). நேபுகாத்நேச்சார் அம்பினுல் குறியிட்டு, எந்தப் பட்டணத்துக்கு விரோதமாகச் செல்ல, என்று அம்மோன், எருசலேம் இரண்டையுங் குறித்துச் சீட்டுப்போட்டான் (எசே. 21 : 18 பி). சீட்டு எருசலேம் மேல் விழுந்தது. எருசலேம் பிடிபட்டபோது, அதன்மேல் அதிகாரியாகப் பாபிலோனியர் வைத்த கெதலியாவைக் கொல்லச் சதித்திட்டம் வகுத்தான் அம்மோன் அரசன் (எரே. 40 : 14 பி). யூதா விழுந்தபோது, நகரத்தை இடிக்கவும், கைப்பற்றவும் இவர்கள் பகைவருடன் சேர்ந்துகொண்டனர் (எரே. 49 : 1, 2).

வச. 3, 6ல் எருசலேமின் அழிவில் ஆனந்தித்து, யூதாவை நிந்தித்து, ஆகடியம் பண்ணினர் அம்மோன்புத்திரர்.

வச. 4, 7. ஆகையால் வேரற்றுப் போவாய், தேசங்களுக்குள்ளே அழிவாய் என்று ஆக்கினை அறிவிக்கப்படுகிறது.

பிறருக்கு, சிறப்பாய் தேவமக்களுக்கு வரும், தீங்கைக் கண்டு களிகூர்ந்து, கேலி செய்வது பயங்கர விளைவை

உண்டுபண்ணும். அதனாலே பரியாசக்காரர் உட்காருமிடத்தில்கூட உட்காராதே என்கிறான் சங்கீதக்காரன் (சங். 1 : 1).

ஆ. மோவாப். 25 : 8—11.

மோவாபியர் இஸ்ரவேலைப் பரியாசஞ் செய்து, வீம்புபேசி, பெருமை கொண்டு, தேவ பகைஞராகி, அகந்தையுள்ளவராயினர் என்கிறான் எரேமியா (எரே. 48 : 25 பி). யூதாவை அவர்கள் கொள்ளையிட்டதாகக் குற்றஞ்சாட்டுகிறான் செப்பனியா (செப். 2:8). விக்கிரகங்களுக்குப் படைத்ததைப் புசிக்கவும், தகாத மாம்ச இச்சை கொள்ளவும் இஸ்ரவேலரைத் தூண்டினவர்கள் மோவாபியர் (எண். 25, வெளி. 2 : 14). இஸ்ரவேலர் பலமுறை தங்களைத் தேவன் தெரிந்துகொண்டதின் மேன்மையைக் கூறினர் (உபா. 4 : 32 பி). ஆனால் வச. 8. இஸ்ரவேலர் மற்ற மக்களைவிட எவ்விதத்தில் சிறந்தவரென கேலி செய்தனர் மோவாபியர். இவ்வசனத்தில் மோவாபும், சேயீரும் என்ற பகுதியில், பல மூல ஏடுகளில் சேயீர் குறிக்கப்படவில்லை. விசுவாசிகளை வழிவிலகச் செய்பவரும், பகடி பண்ணுபவரும், மோவாபியர்மேல் வந்த மோசத்தை மறக்கலாகாது.

இ. ஏதோம். 25 : 12—14.

ஏசாவின் பின்சந்ததியாரான ஏதோமியர் கொடூரமானவர்கள். பழைய பகையை மனதில் வைத்து இஸ்ரவேலரைப் பழிவாங்கினர். இதை எசே. 35 : 5, ஒபதியா 10—16, சங். 137 : 7, இந்த வசனங்களில் வாசித்தறியலாம். இஸ்ரவேலர் கானானுக்குச் செல்லும் வழியில் அவர்கள் தம் நாட்டின் வழியாகச் செல்ல இவர்கள் இடங் கொடுக்கவில்லை (எண். 20 : 18—21). யூதரைச் சர்வ நாசஞ் செய்ய எண்ணினவர் ஏதோமியர். நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டுப் பிடித்தபோது, அவர்களுக்குதவி செய்து, கொள்ளையடித்தனர். வகுப்புவாதங்கள், பகைகள், விரோதங்களுக்கு இவர்கள் எடுத்துக்காட்டு. இவர்கள்மேல் வரும் அழிவு ஏசா. 34:5—8; 63:1—4; எரே. 43:17; புலம்பல் 4:21ல் காணலாம். வச. 14.

இஸ்ரவேல் கையினுல் பழிவாங்கப்படுவது இங்கே மட்டுமே கூறப்படுகிறது.

ஈ. பெலிஸ்தர். 25 : 15—17.

இஸ்ரவேலருக்கும், பெலிஸ்தருக்கும் பகையும் போரும் தொடர்ந்து இருந்தது, சாமுவேலின் இரு புத்தகங்களினின்றும் தெரியக்கிடக்கிறது. வச. 15. அந்தப் பகையால் பழி வாங்கின பெலிஸ்தர் பாழாவார்கள்.

உ. தீரு. 26 : 1—28 : 19.

இஸ்ரவேலேச் சுற்றிலுமிருந்த சிறு நாடுகளின் அழிவு அறிவிக்கப்பட்ட பின்னர், தூரத்திலுள்ள தீரு, சீதோன், எகிப்தின்மேல் தீர்க்கதரிசன அழிவு அறிவிக்கப்படுகிறது. 3 அதிகாரங்களில் தீருவின் அழிவு தீட்டப்பட்டுள்ளது. இஸ்ரவேல், தென் பகுதியிலிருந்து வரும் வியாபாரத்தில் தங்களுக்குப் போட்டியாக இருந்ததால் தீரு பொருமை கொண்டு, வச. 2, எருசலேம் விழுந்தபோது தனக்குக் கிடைக்கப்போகும் வியாபாரப் பெருக்கத்தை எண்ணிக் களிப்புற்றது. அதி. 26ல் தீருவின் விழுதலும், அதி. 27ல் அழகிய பெருங்கப்பலுக்கு ஒப்பிடப்பட்ட தீரு, சமுத்திரத்தில் அமிழ்ந்துபோதலும், அதி. 28ல் தீருவின் அதிபதி அகந்தையால் அழிதலும் கூறப்பட்டுள்ளன. தீருவின் வியாபார வர்ணிப்பு அழகுடன் கூறப்படுகிறது. அதன் அழிவுக்காக அழுவதும், திகிலுறுவதும் நன்ருகத் திட்டப்பட்டிருக்கிறது. தீரு முற்றுகையிடப்பட்ட சரித்திரம் இப்பகுதிகளேச் சரிவர நமக்கு விளக்கும். கடற்கரையிலிருந்த தீரு, படையெடுப்புகளுக்குப் பயந்து, சற்றே கடலுக்குள் இருந்த கற்பாறைகளான தீவில், பலத்த கற்கோட்டை பாதுகாப்பில் கட்டப்பட்டது. தீரு என்பதன் எபிரேய பதத்தின் அர்த்தம் கற்பாறை என்பதாம். கி. மு. 585-ல் நேபுகாத்நேச்சார் தீருவைக் கரை மார்க்கமாகத் தாக்கினுன். முற்றுகை 13 ஆண்டுகள் நீடித்தது. ஆயினும் அவனுல் அதை அழிக்க முடியவில்லே. தீரு அவனுக்குப் பணிந்தது. நேபுகாத்நேச்சார் எகிப்திற்குச் சென்

ருன் (எசே. 29 : 17—20). சுமார் 250 ஆண்டுகளின் பின் கி. மு. 332-ல் மகா அலெக்சாந்தர் தீருமீது படையெடுத்தான். வச. 26 : 4-ல் கூறியதுபோல், பழைய தீருவின் மண்ணை யெடுத்து, கடற்பகுதியில் போட்டு, தீவை இணைத்து, தீருவை அழித்தான்.

வச. 26 : 1. மாதம் கூறப்படவில்லை.

வச. 26 : 2. வியாபாரப் போட்டியின் பொருமை. தீரு மக்கள் இஸ்ரவேலரை அடிமைகளாக விற்றனர் என்று யோவேல் 3 : 4—8-லும், ஆமோஸ் 1 : 9, 10-லும் குற்றஞ் சாட்டினர்.

வச. 26 : 5பி. இங்குக் கூறப்பட்ட அழிவு, பாபிலோனியரால் நிறைவேற்றப்படவில்லை. மகா அலெக்ஸாந்தர் நிறைவேற்றினுன். ஆனல் வச. 6, 8-ன்படி வெளியில் இருக்கிறவர்களை நேபுகாத்நேச்சார் அழித்தான்.

வச. 14. சரித்திரத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனம் இது.

வச. 15 பி. தீரு விழுந்தது வர்ணிக்கப்படுகிறது. ஏசா. 23 ஒப்பிடுக.

அதி. 27. முந்தின அதிகாரத்தில் அறிவிக்கப்பட்ட அழிவுக்கான புலம்பல் இவ்வதிகாரத்தில் காணப்படுகிறது. வச. 3—9, 25—36-ல் தீரு ஒரு அலங்காரமான பெரிய கப்பலுக்கு ஒப்பிடப்பட்டு வர்ணிக்கப்படுகிறது. வச. 10—24-ல் தீருவின் வியாபார விருத்தி கூறப்படுகிறது. அழகிய பெருங் கப்பல் எப்படி ஆழியில் அழிந்து அமிழ்ந்தது என இவ்வதிகாரம் சித்திரம்போலத் தீட்டுகிறது. இந்த உருவகப் புலம்பலையும், வெளி. 18-ல் வருகிற புலம்பலையும் ஒத்து நோக்குதல் நலம். அந்திக் கிறிஸ்துவின் அழிவை வர்ணிக்க, எசேக்கியேலின் உருவகம் யோவானுக்கும் உபயோகப்படுவதைக் காணலாம்.

வச. 3—9. பூரண வடிவாய்க் கட்டப்பட்ட பெருங் கப்பல் தீரு. சேனீர் = எர்மோன் (எமோரியர் கூறுவது. உபா. 3 : 9).

வச. 6. கித்தீம் = சீப்புரு தீவு. ஆனால் மத்தியதரைக் கடற் கரைத் தீவுகளுக்கும் இச்சொல் உபயோகிக்கப்பட்டது.

வச. 7. எலசா தீவு = சிசிலி தீவு அல்லது இத்தாலியா.

வச. 8. சீதோன், தீருவின் வடபக்கம் அமைந்திருந்தது. அர்வாத், சீதோனுக்கு வடக்கேயிருந்தது.

வச. 9. கேபார், சீதோனுக்கும் அர்வாத்துக்கும் நடுவிலிருந்தது.

வச. 10—24. தீருவோடு வியாபாரஞ்செய்த பல தேச மக்களும், அவர்கள் வியாபாரப் பொருட்களும் விபரமாய்க் கூறப்படுகின்றன.

வச. 10. லூதியர் = லிதியா நாட்டார், பூத்தியர் = ஆப்பிரிக்கக் கடற்கரை மக்கள், சிவந்த சமுத்திரக் கரையிலிருந்தவர்கள்.

வச. 11. கம்மாத்தியர் = வட சீரிய நாட்டாராயிருக்கலாம்.

வச. 12. தர்ஷீஸ் = தென் ஸ்பானியாவின் துறைமுகம்.

வச. 13. யாவான் = ஐயோனியா. தூபால்,மேசேக் = கருங் கடற்கரையில், தெற்கு, தென்மேற்கேயுள்ளவை (எசே. 38:2, சங். 120 : 5).

வச. 14. தொகர்மா = அர்மீனியா.

வச. 15. தேதான் = ஏதோமிலுள்ள ஒரு அரபிய கூட்டத்தார்.

வச. 17. மின்னீத், அம்மோனியரின் பட்டணம் (நியா. 11:33). இந்த வார்த்தையின் வரிவடையாளங்களைச் சற்று

மாற்றினுல், வாசனைப் பொருள் என இது அர்த்தங் கொடுக்கும். பன்னுக் எந்த இடமெனத் தெரியவில்லை. பன்னிகு என்ருல் ஒருவகைக் கேக்.

வச. 18. கெல்போன் தமஸ்குவிற்குச் சற்று வடக்கேயுள்ள பட்டணம். திராட்சை மிகுதியான இஸ்ரவேலிடமிருந்தல்ல, கெல்போனின் திராட்ச ரசம் வந்தது குறிப்பிடத்தகுந்தது.

வச. 19. யாவானர், அரபியாவின் தென் பகுதியிலுள்ளவர்கள்.

வச. 20. தேதான், ஏதோமின் தென் பகுதி.

வச. 21. கேதார், வட அரபியாவிலுள்ளது.

வச. 22. சேபா (1 இராஜா. 10) தென் அரபியாவிலுள்ளது. எருசலேமிலிருந்து சுமார் 1200 மைல் தொலேவிலுள்ளது.

வச. 23-ல் உள்ள பட்டணங்கள் மெசப்பொத்தாமியாவிலுள்ளன. இவ்வாறு பல நாட்டவரிடமிருந்து பலதரப்பட்ட பொருட்கள் வியாபாரத்திற்காகத் தீருவுக்கு வந்தன.

வச. 25—36. உருவகம் மீண்டும் இப்பகுதியில் தொடர்கிறது. அழகிய பெருங் கப்பலான தீரு, ஆழமான கடலில் கொண்டல் காற்ருல் உடைந்து, முழு நாசமாயிற்று (சங். 48 : 7). கிழக்குக் காற்ருகிய கொண்டல், கிழக்கேயிருந்து படையெடுத்த நேபுகாத்நேச்சார்.

வச. 29—34. மாலுமிகள் தீருவின் அழிவுக்காக அலறுதல் (வெளி. 18 : 17—19 ஒப்பிடுக).

வச. 35, 36. ராஜாக்களும், மக்களும் பிரமித்துக் கலங்குவது, வெளி. 18 : 9—17 ஒத்து நோக்குக.

அதி. 28. தீருவின் அதிபதியின் செருக்கும், அவன் சீரழிவும் கூறப்பட்டுள்ளன. அச்சமயம் இத்தோபால் II

தீருவின் அரசனுயிருந்தான். அரசர்களில் பலர் தங்களைத் தெய்வங்களாக, தேவபுத்திரராகக் கருதினர் (ஏசா. 14:12–14; தானி. 3 : 1; 4 : 30; அப். 12 : 22, 23). இவ்வதிகாரத்தில் 1—10 வசனங்களில் ஞானம் நிறைந்த, வியாபாரத்தால் பெரிதும் விருத்தியடைந்த தீரு அதிபதியின் மேட்டிமையையும், அவன் மேல் வரும் அழிவு அவன் வெறும் மனிதனே என்பதையுங் காட்டிவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

வச. 3. தானியேல், ஞானத்திற்கும், இரகசியங்கள் அறிவிப்பதற்கும் பெயர் பெற்ற பக்திமான். எசே. 14 : 20 பார்க்க.

வச. 10. அவர்கள் மரணத்தின் அவமானம் கூறப்பட்டுள்ளது. அவர்கள் விருத்தசேதனம் உள்ளவர்களாயினும், மரணத்தில் அப்படி இருப்பதில்லை என்கிருன்.

வச. 11—19. தீரு அதிபதியின் அழிவை யெண்ணிக் கூறப்படும் ஒரு சாவுப் பாடல் இது. இப்பகுதியில் வரும் சொற்கள் பல, ஒரு மனிதனுக்குமே பொருந்ாது. ஒருவேளை அந்நாட்டவர் வழங்கி வந்த, யூதருக்கும் அறிமுகமான, ஒரு பிலாக்கணப் பாடலை இங்கு எசேக்கியேல் கூறியிருக்கலாம். அந்தச் சாவுப் பாடல், ஆதி மேன்மையுடனிருந்த தூதன், தன் அகந்தையால் அழிந்து போனதை அறிவிக்கும் பாடல். தீரு அதிபதியும் அகந்தையால் அழிந்ததால், அதற்குப் பொருத்தமாக இச் சாவுப் பாடல் இங்குக் கூறப்பட்டதெனலாம். ஏசாயா தீர்க்கனும் பாபிலோன் ராஜாவின் அழிவைக் கூறும்போது, இவ்விதமான பிலாக்கணப் பாடலை ஏசாயா 14 : 12—15-ல் கூறுவதை ஒப்பிடவும். இவ்விரு பகுதிகளும் மேட்டிமையால் விழுந்துபோன தூதனுகிய பிசாசைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒரு காரியத்தை விவரிக்கையில், அதற்குள் வேறு சிந்தனைகளையும் தீர்க்கர் சொருகிவிடுவதுண்டு. சங்கீதம் 72, சாலமோனைப் பற்றிய பாடலாயினும், அதில் மேசியாவைப் பற்றிய மேன்மையான தீர்க்கதரிசனத்தையுங் காணலாம். அதுபோலவே எசேக்கியேலும்

இப்பகுதியில், தீரு அரசனை வர்ணிக்கையில், தீமையின் துவக்கமாகிய பிசாசின் விழுதலையும் கூறுகிறான். பெருமை, இறுமாப்பு, அகந்தை, இவை எத்துணை அபாயமானது! அவனைப்பற்றிய குறிப்புகளில் சில: வச. 12. நீ முத்திரை மோதிரம், ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன்; வச. 13. தேவதோட்டமாகிய ஏதேனில் நவரத்தினங்கள் மூட, சங்கீதத்துடன் உருவாக்கப்பட்டவன்; வச. 14. அபிஷேகம் பண்ணப்பட்ட காவல் கேரூப், பரிசுத்த பர்வதத்தில் அக்கினிக் கற்கள் நடுவே இருந்தவன்; வச. 15. குறையற்றவன்; வச. 16. வியாபார மிகுதியால் கொடுமை செய்து, பாவஞ் செய்தான், ஆகையால் ஆகாதவனெனத் தள்ளப்பட்டான்; வச. 17. அழகினால் பெருமை கொண்டான், மினுக்கினால் ஞானத்தை இழந்தான், தள்ளப்பட்டான்; வச. 18. பரிசுத்த குலைச்சலாக்கினதால் எரித்து விடப்படுவான்; வச. 19 முற்றும் அழிந்து போவான். இவனுடைய சரிதையை ஆதி. 2, 3ம் அதிகாரங்களோடு சேர்த்துப் படிக்கலாம். மேன்மை பெற்றவனின் விழுதல், பெருத்த எச்சரிப்பாகும்.

ஊ. சீதோன். 28 : 20—26.

ஏசாயா 23, யோவேல் 3 : 4 இப்பகுதிகளில் தீரு, சீதோன் இரண்டும் இணைக்கப்பட்டே கூறப்பட்டுள்ளது. தீரு முற்றும் அழிந்தது. சீதோனோ இன்றுவரை இருக்கிறது. அழிவில் வேறுபாடிருந்தமையால், இங்குப் பிரித்துக் கூறப்பட்டதெனலாம். அண்டை நாடுகள் மேல் ஆக்கினை வரக் காரணங்கள், வச. 24—26ல் காணக்கிடக்கின்றன. (1) வச. 24. அவர்கள் இஸ்ரவேலுக்குத் தைக்கிற முள்ளும், நோவுண்டாக்குகிற நெரிஞ்சிலுமாயிருந்ததால் அகற்றப்பட்டனர்; (2) வச. 26. இஸ்ரவேலர் சுகமாகக் குடியிருந்து சமாதானமாக வாழ்வதற்குச் சுற்றிலுமிருந்த பகை, பொறாமை அகற்றப்பட்டன; (3) வச, 25, 26. கர்த்தரே தேவனென்று இஸ்ரவேலும், உலகம் முழுவதும் அறிந்து கொள்ள இந்த ஆக்கினை அவர்கள் மேல் வந்தது.

எ. எகிப்து. அதி 29—32.

கடைசியில் எகிப்தின் அழிவு இந்த 4 அதிகாரங்களில் கூறப்படுகிறது இது 7 பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். தேவனுடைய தண்டனையின் கோலாகிய பாபிலோனுக்குப் பரம விரோதியாக எகிப்து இருப்பதாலும், இஸ்ரவேல் தன்னோடு தகாத உடன்படிக்கை செய்யவும், கலகஞ் செய்யவும் தூண்டி விடுவதாலும், எகிப்தின் மேல் அழிவு கூறப்பட்டது. எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது எகிப்தின் சேனை உதவிக்கு விரைந்தது (எரே. 37 : 5). ஆனாலும் எருசலேமும் அழிந்தது, எகிப்தும் அழிந்தது. இப்பகுதி எழுதப்பட்ட காலம் எருசலேம் முற்றுகையிடப்பட்டு பிடிபட்ட காலம்- வச. 29 : 1, 31 : 1, 32 : 1 — கி. மு. 587—585. ஆயினும் வச. 29 : 17—21 பிந்திய காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை (கி. மு. 571).

1. எகிப்தின் அழிவும், மீட்பும் 29 : 1—16.

எகிப்தின் வளமும், வலிமையும் நீலநதியைச் சார்ந்திருந்தது. இப்பகுதியில்பார்வோன் பெரிய முதலைக்கு ஒப்பிடப்பட்டு, அதைத் தேவன் துறடுகளால் பிடித்து வனாந்தரத்தில் எறிந்துவிட, அது மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஆகாரமாகும். இதே உருவகத்தை மீண்டும் அதி. 32 : 2—8 ல் காணலாம்.

வச. 1. கி. மு. 587 ஜனவரி மாதம்.

வச. 3. என்நதி, நான் எனக்காக உண்டுபண்ணினேன் என்று நதியைக் குறித்தும் தற்பொழிவை நாடினான் பார்வோன். (தானி. 4 : 30). இவ்விடத்தில் பெரும் முதலையெனப் பார்வோனைக் கூறியிருப்பது, பாபிலோனிய சிருஷ்டி சரித்திரத்தில் காணப்படும் பெரும் ஊழி முதலையைக் குறிப்பிடும் என்பர் சிலர். ஆகவே இங்கும் சிருஷ்டி சரிதை மறைவாகக் கூறப்படுகிறது. முதலாவதும், எக்காலத்தும் தற்பெருமையே விழுதலுக்குக் காரணமாகும்.

இப்பகுதியில், தீரு அரசனை வர்ணிக்கையில், தீமையின் துவக்கமாகிய பிசாசின் விழுதலையும் கூறுகிறான். பெருமை, இறுமாப்பு, அகந்தை, இவை எத்துணை அபாயமானது! அவனைப்பற்றிய குறிப்புகளில் சில: வச. 12. நீ முத்திரை மோதிரம், ஞானத்தால் நிறைந்தவன், பூரண அழகுள்ளவன்; வச. 13. தேவதோட்டமாகிய ஏதேனில் நவரத்தினங்கள் மூட, சங்கீதத்துடன் உருவாக்கப்பட்டவன்; வச. 14. அபிஷேகம் பண்ணப்பட்ட காவல் கேரூப், பரிசுத்த பர்வதத்தில் அக்கினிக் கற்கள் நடுவே இருந்தவன்; வச 15. குறையற்றவன்; வச. 16. வியாபார மிகுதியால் கொடுமை செய்து, பாவஞ் செய்தான், ஆகையால் ஆகாதவனெனத் தள்ளப்பட்டான்; வச. 17. அழகினால் பெருமை கொண்டான், மினுக்கினால் ஞானத்தை இழந்தான், தள்ளப்பட்டான்; வச. 18. பரிசுத்த குலைச்சலாக்கினதால் எரித்து விடப்படுவான்;வச. 19 முற்றும் அழிந்து போவான். இவனுடைய சரிதையை ஆதி. 2, 3 ம் அதிகாரங்களோடு சேர்த்துப் படிக்கலாம். மேன்மை பெற்றவனின் விழுதல், பெருத்த எச்சரிப்பாகும்.

ஊ. சீதோன், 28 : 20—26.

ஏசாயா 23, யோவேல் 3 : 4 இப்பகுதிகளில் தீரு, சீதோன் இரண்டும் இணைக்கப்பட்டே கூறப்பட்டுள்ளது. தீரு முற்றும் அழிந்தது. சீதோனோ இன்றுவரை இருக்கிறது. அழிவில் வேறுபாடிருந்தமையால், இங்குப் பிரித்துக் கூறப்பட்டதெனலாம். அண்டை நாடுகள் மேல் ஆக்கினை வரக் காரணங்கள், வச. 24—26 ல் காணக்கிடக்கின்றன. (1) வச. 24. அவர்கள் இஸ்ரவேலுக்குத் தைக்கிற முள்ளும், நோவுண்டாக்குகிற நெரிஞ்சிலுமாயிருந்ததால் அகற்றப்பட்டனர்; (2) வச. 26. இஸ்ரவேலர் சுகமாகக் குடியிருந்து சமாதானமாக வாழ்வதற்குச் சுற்றிலுமிருந்த பகை, பொறாமை அகற்றப்பட்டன; (3) வச, 25, 26. கர்த்தரே தேவனென்று இஸ்ரவேலும், உலகம் முழுவதும் அறிந்து கொள்ள இந்த ஆக்கினை அவர்கள் மேல் வந்தது.

ஏ. எகிப்து. அதி 29—32.

கடைசியில் எகிப்தின் அழிவு இந்த 4 அதிகாரங்களில் கூறப்படுகிறது இது 7 பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். தேவனுடைய தண்டனையின் கோலாகிய பாபிலோனுக்குப் பரம விரோதியாக எகிப்து இருப்பதாலும், இஸ்ரவேல் தன்னோடு தகாத உடன்படிக்கை செய்யவும், கலகஞ் செய்யவும் தூண்டி விடுவதாலும், எகிப்தின் மேல் அழிவு கூறப்பட்டது. எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது எகிப்தின் சேனை உதவிக்கு விரைந்தது (எரே. 37 : 5). ஆனாலும் எருசலேமும் அழிந்தது, எகிப்தும் அழிந்தது. இப்பகுதி எழுதப்பட்ட காலம் எருசலேம் முற்றுகையிடப்பட்டு பிடிபட்ட காலம்- வச. 29 : 1, 31 : 1, 32 : 1 — கி. மு. 587—585. ஆயினும் வச. 29 : 17—21 பிந்திய காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டவை (கி. மு. 571).

1. எகிப்தின் அழிவும், மீட்பும் 29 : 1—16.

எகிப்தின் வளமும், வலிமையும் நீலநதியைச் சார்ந்திருந்தது. இப்பகுதியில்பார்வோன் பெரிய முதலைக்கு ஒப்பிடப்பட்டு, அதைத் தேவன் துறடுகளால் பிடித்து வனாந்தரத்தில் எறிந்துவிட, அது மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஆகாரமாகும். இதே உருவகத்தை மீண்டும் அதி. 32 : 2—8 ல் காணலாம்.

வச. 1. கி. மு. 587 ஜனவரி மாதம்.

வச. 3. என்நதி, நான் எனக்காக உண்டுபண்ணினேன் என்று நதியைக் குறித்தும் தற்பொழிவை நாடினான் பார்வோன். (தானி. 4 : 30). இவ்விடத்தில் பெரும் முதலையெனப் பார்வோனைக் கூறியிருப்பது, பாபிலோனிய சிருஷ்டி சரித்திரத்தில் காணப்படும் பெரும் ஊழி முதலையைக் குறிப்பிடும் என்பர் சிலர். ஆகவே இங்கும் சிருஷ்டி சரிதை மறைவாகக் கூறப்படுகிறது. முதலாவதும், எக்காலத்தும் தற்பெருமையே விழுதலுக்குக் காரணமாகும்.

வச. 6, 7. எகிப்தை நம்புவது நாணலை நம்புவது போலாகும். (ஏசா. 36 : 6 ஒப்பிடவும்)

வச. 8—12. இஸ்ரவேலைப்போல, எகிப்தும் 40 ஆண்டுகள் அவாந்திர வெளியாக விடப்படும். வச. 4 : 6 ல் யூதாவின் பாவம் சுமக்கப்பட்ட காலம் 40 ஆண்டுகள்.

வச. 13—16. சிதறடிக்கப்பட்ட எகிப்தியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்ற வாக்கு அருளப்படுகிறது. எகிப்து இல்லாத உலகை எசேக்கியேலும், எரேமியாவும் எண்ணவில்லை (எரே. 46 : 26). அவ்விதம் திரும்பினாலும், தேசம் முந்தின மகிமை பெருமல், குறுகிப்போயிருப்பார்கள். இனி அவர்கள் இஸ்ரவேலின் நம்பிக்கையாயிருக்க மாட்டார்கள்.

2. எகிப்து நேபுகாத்நேச்சாருக்கு அளிக்கப்பட்ட கூலி 29 : 17—21.

இப் பகுதிதான் எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் எழுதப்பட்டுள்ள கடைசி உரை. வச. 17. காலம் கி. மு 571 ஏப்ரல் மாதம். தீரு முற்றிலும் நாசமாகவில்லையென்பதை எசேக்கியேல் கண்டான். வச. 18 ல் தீருவைப் பிடிக்க நேபுகாத்நேச்சார் எடுத்த கடும் பிரயாசம் கூறப்படுகிறது. வச. 19, 20 அது ஈடேருததால், அவனுடைய பிரயாசத்திற்குக் கூலியாக எகிப்து கொடுக்கப்பட்டது (எரே. 27 : 6). நேபுகாத்நேச்சார் தன் சேவகர் தலை மொட்டையாகும்படி, தோள்பட்டையின் தோல் உரிந்து போகும்படி வேலை வாங்கியும் தீரு விழவில்லை. தீர்க்கன் தீருவைப் பற்றிக் கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. எகிப்தைப் பற்றி 16 ஆண்டுகளுக்கு முன்னர் (29 : 1) கூறின தீர்க்க தரிசனமும் நிறைவேறவில்லை. எனினும் மறுபடியும், பல ஆண்டுகளின் பின்னர், எகிப்தின் அழிவு அறிவிக்கப்படுகிறது. ஏன் தீருவைப் பற்றிய தீர்க்கதரிசனம் நிறைவேருததால் தீர்க்கன் அதைத் திருத்தவில்லை? அதுவும் அருகிலே எழுதப்பட ஏன் அனுமதித்தான்? கர்த்தர் பேசினுர், அது கண்டிப்பாய் நிறைவேறும் என்று நம்பினுன். கி. மு. 332 ல் தீரு